ஸ்ரீ 1960

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமன் மஹிசூர ஸம்ஸ்தாநாதீச

ஸ்ரீமத்ராஜாதிராஜ ஸ்ரீசிக்கதேவராஜா

அவர்களாலியற்றப்பெற்ற

சிக்கதேவராஜ விண்ணப்பம்

(தமிழ் மொழி பெயர்ப்பு——குறிப்புக்களுடன்)

1941

PRINTED AT THE

GOPAL PHOTO-ZINCO AND POWER PRINTING WORKS,

BUS STATION, FORT, BANGALORE CITY.

விண்ணப்பம்.

உபயவேதாந்த ப்ரவர்த்தகராயும், வட, தென், கன்னட மொழிகளில் அறிஞராயு மெழுந்தருளியிருக்கும் நிவ்ருத்த இஞ்ஜினீர் ஸ்ரீமதித்யாதி மண்டயம் ஜயராம ஸம்பத்குமாராசார்ய ஸ்வாமிகள் அடியேனுக்கு இவ்விண்ணப்பங்களைக் காலக்ஷேபமாயருளிச் செய்தார். அவரனுக்கிரஹித்ததை எனக்கெட்டின தமிழிலெழுதினேன். பெங்களூர் கோட்டை ஹைஸ்கூல் தமிழாசிரியர் ஸ்ரீமதித்யாதி புலியூர் கோ. ஸ்ரீநிவாசன் ஸ்வாமியவர்கள் க்ருபைபண்ணிப் பரிசோதித்தார். இப்பெரியோர்களுக்கு நான் மிகவும் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிழைதிருத்தங்களதிக மிருப்பதொரு குறைவு. இந்நூல் இரண்டாம் பதிப்பையடையுமாயின் இக்குறையை யதில் நீக்கலாம்.

குறிப்புரைகளனைத்தும் பூர்வாசார்யர்களுடையவும் பெரியோர்களுடையவும் அருளிச்செயல்களிலிருந்தெடுக்கப் பெற்றவை. இராமாநுஜ ஸித்தாந்தத்தின் அடிப்படையான தத்வங்களை மாணவர்களுக்கு மூலத்திலிருந்தே ஊட்டுவது அத்யாவச்யம். தற்காலத்தில் பெரும்பாலாரிவற்றை யறியார். ஆகையால்தான் பூர்வாசார்யர்களுடைய க்ரந்தங்களைப் பார்ப்பதில்லை. உபயவேதாந்தப் பரீக்ஷையின் பொருட்டு ஏற்பட்டிருக்கும் ஸம்ஸ்தைகளிலெல்லாம் இந்த க்ரந்தத்தை ஒரு முக்யமான பாட்ய புஸ்தகமாக வைத்து, இதை ஸர்வகலாசாலைகளில் பாட்ய புஸ்தகத்தைப் பரீக்ஷிப்பதைப்போல் சோதித்தால் பலனாயாகும்.

வருடந்தோறும் திருநாராயணன் ஸந்நிதியில் ஒரு ஸப்தாஹ மேற்படுத்தி இவ்விண்ணப்பங்களை ஜ்ஞாதாக்கள் காலக்ஷேபமா யருளிச்செய்தால் ஸித்தாந்தப்ரசாரமாகும், பக்தாத்மவர்க்கத்துக்கும் பரகதிஸாதனமாயிருக்கும். இதற்கு ஒரு ந்யாஸம் வேண்டியிருக்கிறது. ஸ்ரீமந்நாராயணனுடைய க்ருபையால் சேரவேண்டும். அச்சுக்கூலி கழிந்து மிகுந்த வருமானத்தையெல்லாம் இதற்கே விநியோகிக்கப்படும்.

வாணிவிலாஸபுரம்,
மைசூர்.

இராமாநுஜபுரம் அநந்தான்பிள்ளை
திருநாராயண அய்யங்கார்,
நிவ்ருத்த அஸிஸ்டெண்ட் கமிஷனர்.

பிழை திருத்தம்.

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்.
1	15	மயா	வ்யயா.
	15	ஏபிஸ்து :	ஏSபிஸ்யு :
	17	வைச்யத்ததா	வைஸ்யாஸ்ததா
8	2	சாமார்	சாமர்
10	5	கார்யமான	கால்யமான
	13	தலைக்காட்ட	தலைக்கட்ட
	22	நின்றே	நிற்கிற
11	6	த்யேஞை	த்யேயஞை
	15	சேதநர்க்கபிதாமன	சேதநர்க்கபிமதமான
	16	தேசாகாலாதிகாரி	தேசகாலாதிகாரி
12	5	தத்பலாவ்ய	தத்பலாவ்யபி
13	9	ஸம்ஸாரமற்ற	ஸம்ஸாரஸம்பந்தமற்ற
	16	பக்தசேதனர்	பத்தசேதனருடைய
	18	பரிகார	பரிகர
16	12	சைதன்ய ஆதாரமான	சைதன்யாநா தாரமான
17	1	சிலகாலம் பிரம	சிலகாலம் ஸத்ய லோகத்தில் பிரம
	25	நாராயணவதாரம்	நரநாராயணவதாரம்
[illegible]	25	சிலவற்றை	சிலரை
19	25	வீரவாணன்	வீறுவாணன்
22	25	ப்ரத்யனீகத்ய	ப்ரத்யனீகத்வ
	26	வஸ்விதுலக்ஷ	வஸ்துவிலக்ஷ
23	4	ஜ்ஞா	ஜ்ஞாந

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்
24	2	அதனர்தத்மனுதி	அதனர்த்தமனுதி
28	3	ஏன்று	என்று
29	11	வேதசைச்	வேதைகஸ்ச
30	17	பிறக்	பிறந்
32	14	உறுதிப்பட்டது	உறுதிப்பட்டது. பிறப்பில்லாதவரென்றால் கர்மாதீனமான பிறப்பில்லையென்றும்
35	10	ஸர்வஸ்து	ஸர்வவஸ்து
37	2	பராபிபவஹ	பராபிபவந
	23	தன்போருக	தன்பேருக
38	10	உறுப்பாயிருக்க	உறுப்பாயிருக்கு
	14	சம்ஸ்வேக்ஷத்தில்	சம்ஸ்லேஷத்தில்
43	3	காரணவாராய்	காணவாராய்
	7	ஹேதுவான	ஹேதுவான ஸங்கல்பம் அப்ரதிஹதமென்கைக் காக — அகடிதகங்களையும் ஸங்கல்ப.
	20	ஆச்ரிதமுடைய	ஆஶ்ரிதருடைய
46	9	நித்ரை	நித்ரையில்
	20	அகடிதகபு	அகடிதகட
47	10	அத்ருச்ய	அநித்ய
48	11	உள்ளவினன்று	உன்னவினைன்று
50	3	சூட்சி	ஆட்சி
52	10	காரணம்;	காரணம்; இந்த உபாதான காரணத்திலிருந்து காரியத்தையுண்டு பண்ணும் வகையறிந்து உண்டுபண்ணுகிற கர்த்ரு நிமித்தகாரணம்.

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்.
53	2	காரணம் ;	காரணம் ; பொன்விளைஞன் நிமித்த காரணம்.
3	2	அடைகல்	அடிகல்
60	20	ராணம்	க்ராணம்
61	3	கந்தந்மாத்ரம்	கந்ததந்மாத்ரம்
	8	களும்,	களும் பிறப்பதற்கும் ஸஹாயமாயிருக்கும். இப்படி ப்ரக்ருதி, மஹத், அகங்காரங்களும், ஏகாதசேந்த்ரியங்களும், பஞ்சதந்மாத்ரங்களும், பஞ்சபூதங்களும்.
62	23	கூடி	கூடிதேஜஸ்ஸென்னப்படும். பின்னும் ஜலாம்சம்பாதியும் மற்றநான்கு பூதங்களிலெட்டி லொரு பங்கும்கூடி.
64	12	அங்கு	அதற்குமேல் வயலானஇடம் இருபத்துநாலு லக்ஷத்துநாற்பத்தெண்ணாயிரம் யோஜனமாயிருக்கும், அங்கு.
65	1	நாகங்களும்	நரகங்களாயிருக்கும்.
	11	மிருக்கும்,	மிருக்கும், அதற்குமேல் இரண்டு லக்ஷம் யோஜனையில் புஜனும்.

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்.
௬௩ 23	12	சுக்ரனும்	சுக்ரனும், அதற்குமேல் இரண்டு லக்ஷம் யோஜனையில் மங்களனும்
66	12	லோகமேன	லோகமென.
69	6	யோஜனமும்	யோஜனமும், இதைச்சுற்றின க்ஷீர சமுத்திரம் முப்பத்திரண்டு யோஜனமும்
74	16	உதயகுபி	உதயகிரி.
76	6	ஆறாய்	ஆறாய் மேருவைச்சுற்றி
77	13	ஸிதாம்த	ஸிதாம்ப
78	22	ளித்தர்	ஸித்தர்
80	11	நிஷ்பங்கதீர்த்த	நிஷ்பங்கதீர்க்கிக
80	21	களிங்க	கபிங்க
81	2	பட்டணமிருக்	பட்டணங்களிருக்
82	10	ஸ கரம்	ஸௌகரம்
85	9	காய்ச்கின	காய்ச்சின
90	5	ஆண்டவன்தான்	ஆளுமவனும் தான் ஆளும்
	9	பெரிதென்றால்	பெரிதென்னுமல்
93	12	வேதாந்தங்களிருந்து	வேதாந்தங்களிலிருந்து
97	16	யிருக்கிறது	யிருக்கிறது, ஸ்ரீபகவத்கீதையில் நீயும் சொன்னாய்
	24	லோக	லோகா
	24	அந்த	அர்த்த
103	19	விஷ	விஸ்
107	2	ஆரத்	ஆதரத்

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்,
108	3	ப்ருவ்ருத்தி	ப்ரவ்ருத்தி
	19	ஸம்ஸாரத்தாலே	ஸம்ஸர்க்கத்தாலே
	20	ஸ்வதப்ஜ்ஞ	ஸ்வதப்ரஜ்ஞ
109	9	ன்பது	ன்பது, இப்படியிருக்கும் ஸம்ஸாரிகளில் சிலருக்கு வைராக்யமும் பிறந்து முமுக்ஷுக்கள் எனப்பட்டு அவர்களுக்கு மோக்ஷோபாயத்தை ஸித்தப்படுத்திக் கொடுப்பது நீயாதலால் நீ முமுக்ஷுக்களில் தயையுள்ளவனென்பது.
110	5	லட்ச	ரக்ஷ
111	10	மாகிலும்	மாகில்
112	13	ல்	மல்
116	6	வ்ருகாஸுரஸ்	வ்ருகாஸுரன்
119	11	ஸன்னிதி	உன்னுடைய ஸன்னிதி.

ஸ்ரீ

ஸ்ரீமன் மஹீசூர ஸமஸ்தாநாதீச ஸ்ரீமத் ராஜாதிராஜ
ஸ்ரீ சிக்கதேவ மகாராஜாவினாலியற்றப்பெற்ற
திவ்யப்ரபந்தங்களுள்

சிக்கதேவராஜ விண்ணப்பம்.

முன்னுரை.

இந்த கிரந்தம் கன்னட பாஷையில் எழுதப்பட்டிருக்கிறது. பேரறிவாளரான, எஸ். ஜி. நரஸிம்மாச்சாரியரும், ம. ஆ. இராமானுஜ அய்யங்காரும் இதை சோதித்து அச்சிட்டார்கள். உபோத்காதத்தில் இவ்வறிஞர்கள் இவ்வண்ணம் எழுதுகிறார்கள்.

"இந்நூல் கர்நாடக நாட்டு அரசனான சிக்கதேவ மகாராஜனால் இயற்றப்பட்ட திவ்யப்ரபந்தங்களில் ஒன்று. இந்தக்கிரந்த விஷயமாக நூலாசிரியர் தாமே பீடிகையில் இவ்விதம் சொல்லிக்கொள்கிறார் :—

"மாம்ஹி பார்த்த வ்யபாச்ரித்திய, யேபிஸ்யு: பாபயோனய:
ஸ்த்ரியோ வைச்யாஸ்ததா சூத்ரா ஸ்தேபி யாந்தி பராம் கதிம்."

என்று கீதையில் ஸ்ரீ கிருஷ்ணன் தானே உறுதிப்படுத்தினமுறையில், பின் எவ்வளவு பாபிகளாயிருந்தாலும், எந்த சாதியில் பிறந்திருந்தாலும், எப்பொழுதும் தத்வஜ்ஞானத்துடன் அவனில் பக்திசெய்து நம்பினவர்க்கு மோட்சம் தப்பமாட்டாதென்று அறிந்து, அக்ஷரமறியாத சூத்திரர்கட்கும், பெண்களுக்கும், வடமொழியில் தத்வஜ்ஞானமேற்படுவது அருமை என்று, எல்லோரும் அறியும்படி கன்னட வார்த்தைகளில் எளிய நடையிலேயே எல்லா தத்வார்த்தங்களையும் திரட்டித்தான் தன் குலதேவதையான யாதவகிரி நாராயணனுடைய திருவடித்தாமரைகளில் விண்ணப்பம் செய்யும் வியாஜத்தைக்கொண்டு முப்பது விஷயங்களைக்கோத்துக்கட்டினான். என்று.

இந்த விண்ணப்பங்களின் சாராம்சம் பீடிகையிலேயே விளக்கப்பட்டிருக்கிறது.

சிக்கதேவமகாராஜன் ஆட்சி கி. பி. 1677லிருந்து 1704 வரையில். இந்தக்காலத்தில் இந்நூல் இயற்றப்பட்டிருக்கவேண்டும்.

விசிஷ்டாத்வைதமத தத்வத்தையறிய இந்த கிரந்தத்தைப்போல எல்லா விஷயங்களையும் சங்கிரகித்துத்திரட்டின நூல் வேறு பாஷைகளில் அகப்படுவதில்லை.

ஆழ்வார்களும், ஆசார்யர்களும் அவதரித்த நாட்டிலும் இந்நூலின் சுவைபரவவேணுமென்னும் ஆவலால் தமிழில் மொழிபெயர்த்திருக்கிறது. நூலாசிரியர் ஒவ்வொரு விண்ணப்பத்தின் முதலிலும் அதன் சாராம்சத்தை

ஒரு செய்யுளினால் விளக்குகிறார். இவைகளின் அர்த்தத்தை உரைநடையில் பெயர்த்திருக்கிறது.

ஸநாதன தர்மாபிமானிகளனைவரும், அதிலும் ராமானுஜ தர்சனத்தில் ஈடுபட்டவர்கள் விசேஷமாய் இந்நூலை ஆதரிப்பார்களென நம்பப்படுகிறது.

ஸ்ரீமதே நாராயணாய நம:

ஸ்ரீரஸ்து.

சிக்கதேவராஜ விண்ணப்பம்.

பீடிகை.

நூலாசிரியர் யாதவகிரி நாராயணனையும், தன்னுடைய தலைநகரான ஸ்ரீரங்கபட்டணத்தெம்பெருமான் ரங்கநாதனையும், துதிபாடியபின் தன் திக்குவிஜயத்தையும், விருதுகளையும், பாடியும் வர்ணித்தும், எண்திசைகளிலிருக்கும் பகைவர்கள் அடங்கினதால் இராஜ, கலகபயமில்லாமலும், தேவதாநுக்ரகத்தால் நீர்வளம், நிலவளம் நிறைந்ததால் தைவிக பயமில்லாமலும், பிரஜைகளனைவரும் இம்மையில் சுக வாழ்க்கை முறையிலிருக்கிறார்கள். இவர்கட்குப்பரகதியையும் சம்பாதித்துக்கொடுக்க வேணுமாயிருக்கிறதென்று விசாரம்செய்து முன்னுரையில் எடுத்துச்சொல்லியவண்ணம் விண்ணப்பங்களைத்தொகுத்தார். அவைகளில் :—

முதலாம் விண்ணப்பத்தில் அவாப்த ஸமஸ்தகாமனான ஸ்ரீமந் நாராயணன், பர, வ்யூஹ, விபவ, அர்ச்சாவதாரங்களை அங்கீகரித்தது பக்தாநுக்ரகார்த்தமென்று அவனுடைய கயாதிசயத்தை வெளியிட்டான்.

இரண்டாம் விண்ணப்பத்தில் ஸ்ரீமன் நாராயணனே ஜகத் காரணனென்று நிச்சயித்தான்.

மூன்றாம் விண்ணப்பத்தில் அந்த ஜகத் காரண வஸ்துவை அறிய முடியாதென்ற ஆட்சேபத்தை நிவர்த்தி செய்தான்.

நான்காம் விண்ணப்பத்தில் அந்த ஜகத் காரணவஸ்துவை அறிவது வேத சாஸ்திரங்களிலிருந்தே என்று வர்ணித்தான்.

ஐந்தாம் விண்ணப்பத்தில் அந்த வேதசாஸ்திரங்களனைத்தும் ஸ்ரீமன் நாராயணனையே குறிப்பிட்டுக்காண்பிக்கு முறையை அறிவித்தான்.

ஆறும் விண்ணப்பத்தில் அந்த வேத சாஸ்திரங்களில் தோன்றும் விரோதங்களை விலக்கினான்

ஏழாம் விண்ணப்பத்தில் அந்த வேத சாஸ்திர ஸித்தமாய் நாராயணனுக்கு சரீரமான ஜகத்து மித்யை அல்ல, ஸத்யமாயிருக்கிறது என்பதைத்தாபித்தான்.

எட்டாம் விண்ணப்பத்தில் கனவின் அத்தாட்சியிலிருந்து உலகம் பொய் என்று மயங்காமல் இருக்கும் பொருட்டு கனவில் காணும் வஸ்துக்களை அந்தக்காலத்தில் ஜகதீச்வரன் உண்டுபண்ணுவதால் சத்யம் என்று நிச்சயித்துச் சொன்னான்.

ஒன்பதாம் விண்ணப்பத்தில் ஜகத்தை விஷமமாய் சிருஷ்டிக்கிறதனால் ஜகதீச்வரன் விஷமனும், நிர்தயனுமாவான் என்னும் ஆட்சேபத்தைத்தீர்த்தான்.

பத்தாம் விண்ணப்பத்தில் கடபடாதி திருஷ்டாந்தத்திலிருந்து ஜகத்திற்கு மூன்றுவகை காரணங்கள் வேறாய் இருக்கின்றன வென்னும் ஆட்சேபத்துக்கு வஸ்துசரீரகனான ஈச்வரனே மூன்றுவகை காரணங்களுமாய் இருப்பன் என்று ஒப்பத் தக்க உத்தரம்கொடுத்தான்

இப்படி பத்து விண்ணப்பங்களில், ஸ்ரீமந் நாராயணனே பரமதயாளுவும், ஜகத்காரணனும் அபரிச்சேத்ய மகிமனும், சகல வேத வேத்யனும், ஆச்சர்ய சரிதனும், சேதனு சேதன சரீரகனும், அகடிதார்த்தகடகனும் ஸர்வஸமனும் மூன்றுவகைக் காரணனும் என அறிவித்ததனல் ஈச்வரதத்வ நிரூபணம் பண்ணினன்.

பதினேரும் விண்ணப்பத்தில் ஜீவதத்வஸ்வரூபத்தை விவரித்தான்.

பன்னிரண்டாம் விண்ணப்பத்தில் தத்வசிருஷ்டி கிரமத்தைக்காட்டினன்.

பதின்மூன்றும் விண்ணப்பத்தில் பிரும்மாண்ட சிருஷ்டிமுறையை வகுத்துக்காட்டினன்.

பதினன்காம் விண்ணப்பத்தில் அந்தபிரும்மாண்டத்திலிருக்கும் பதினன்கு லோகங்களுடைய நிலைமையை நிர்ணயித்தான்.

பதினைந்தாம் விண்ணப்பத்தில் பூமண்டலத்தின் பரிமாணத்தைகணித்தான்.

பதினரும் விண்ணப்பத்தில் சுகத்தை அனுபவிக்கும் ஸ்தானமான ஸ்வர்க்கங்களுடைய நிலைமையைத்தெரியவைத்தான்.

பதினேழாம் விண்ணப்பத்தில் துக்கத்தை அனுபவிக்கும் இடங்களான நரகங்களுடைய ஸ்திதியை விரித்துரைத்தான்.

பதினெட்டாம் விண்ணப்பத்தில் பாபபலங்கள் குரூரமாயிருக்குமென்று காட்டி அந்த பாபங்களனைத்தும் ஸ்ரீமந் நாராயணனுடைய சரணாரவிந்தத்தில் பக்தியினாலேயே பரிகாரமாகும் என்பதை மனதில் நாட்டும் படியாகச் சொன்னான்.

இப்படிப்பரத்வஸ்வரூபமென்பது முதலாக இதுவரையில் ஏழுவிண்ணப்பங்களில், சிருஷ்டிக்ரமமும் அந்த தத்வங்களிலிருந்து பிறந்த பருமாண்டத்தினுடைய விஸ்தாரமும் அந்த பிரும்மாண்டத்திலிருக்கும் பதினாலுலோகங்களுடைய நிலைமையையும் அவைகளில் பூமண்டலத்தின் பரிமாணமும், பூசுவர்கங்களும், நரகயாதனைகளும் அந்த யாதனா பரிகாரோபாயமும் சொன்னதால் அசித்தத்வநிரூபணம் செய்தான்.

இப்படி பதினெட்டு விண்ணப்பங்களால் ஈச்வரன், சேதனம், அசேதனமென்னும் தத்வத்ரயத்தையும் நிரூபித்தான் இந்த மூன்றுதத்வங்களின் நிலைமையை ஆராய்ந்தால் சிதசித்தத்வங்களிரண்டும் அல்பசுகங்களும் அநித்யமுமென்று அவைகளில், வைராக்யமும் ஈச்வரதத்வமொன்றேநிரவதிகாநந்தமென்று அதில் அனுரக்தியும் பிறக்கும்.

இப்படி விஷயவிரக்தியும் பரமாத்ம பக்தியும் பிறந்தவர்கட்கு மோட்சம் அபேட்சிதமென்று முன்பன்னிரெண்டு விண்ணப்பங்களினால் விவரித்தான், அஃதெங்ஙனே யெனில்:—

பத்தோன்பதாம் விண்ணப்பத்தில் நாலு புருஷார்த்தங்களில் மோட்சமே பெரிதென்று படிகட்டினான்.

இருபதாம் விண்ணப்பத்தில் ஸாத்வீகசாஸ்திரங்களி லிருந்தே மோட்சோபாயத்தை அறியவேணுமென்று சொன்ஞன்.

இருபத்தோன்றும் விண்ணப்பத்தில் எல்லாதந்திரங்க ளிலும் ஸ்ரீ பாஞ்சராத்ரமே, பிரபலப்ரமாணமென்பதைக் சோத்துக்காட்டிஞன்.

இருபத்திரண்டாம் விண்ணப்பத்தில்மோட்சத்திற்கு உபயோகமான விஷயவைராக்கியம் துர்க்கட மென்னும் ஆட்சேபத்தைப்போக்கிஞன்.

இருபத்திமூன்றும் விண்ணப்பத்தில் கேவலம் கர்மத் திலிருந்தே மூக்தியில்லை என்பதை உறுதிப் படுத்திஞன்.

இருபத்துநான்காம் விண்ணப்பத்தில் காலகர்ம ஸ்வபா வமூதலாய வற்றினின்றே அபேட்சிதபலம் கிடைக்கு மென்னும் மயக்கத்தைத்தொலேத்தான்.

இருபத்தைந்தாம் விண்ணப்பத்தில் ஆசைப்பட்ட தெல்லாவற்றையும் அளிக்கும் ஸர்வேச்வரன் வேறு புரு ஷார்த்தங்களே அபேட்சித்தவர்கட்கு அவர்கள் அபேட் சிக்கும் பலவந்தத்திஞல் அந்தந்தப்புருஷார்த்தங்களே ஈவன்; மோட்சத்தை ஆசைப்படுபவர்கட்கு மோட்சத் தையே மனமுவந்து அருளுவான் என்பதைக்காட்டிஞன்.

இருபத்தாறும் விண்ணப்பத்தில் ஸ்ரீமந் நாராயணனேத் தவிர வேறொருவருக்கும் இரட்சண சாமர்த்தியம் இல்லே என்பதைத்தெரிவித்தான்.

இருபத்தேழாம் விண்ணப்பத்தில் மோட்சத்தை அபேட்சிக்கிறவன் தன்னுடைய தோஷங்களை எண்ணி பயப்படவேண்டாம். பகவத் குணங்களையேயெண்ணி தைர்யமாயிருக்கவேணுமென்று ஏற்படுத்தினான்.

இருபத்தெட்டாம் விண்ணப்பத்தில், ஸம்ஸாரத்தின் மூலமெனப்படும், அவித்யா, கர்ம, வாஸனை, ருசி, ப்ரக்ருதி ஸம்பந்தங்களை ஜகதீச்வரன் தானே விடுவிப்பன் என்கிறதைப்பிரகாசப்படுத்தினான்.

இருபத்தோன்பதாம் விண்ணப்பத்தில் ஸ்ரீமந் நாராயணனுடைய திவ்ய ரூபம் முக்த போக்யமாயிருக்குமென்பதை அனுபவித்தான்.

முப்பதாம் விண்ணப்பத்தில் பரவாசுதேவனுடைய கைங்கர்யம் முக்தர்க்கு போக்யமாயிருக்குமென்பதைச் சொல்லிப்பாட்டைத் தலைக்கட்டினான்.

முதல் விண்ணப்பம்.

பா.— பரவாஸுதேவ! அடியாரைக்காப்பாற்றும் பொருட்டு, வ்யூஹாதி[1] பாவமும் ஏற்றுக்கொண்டாய்—

---

1. ஈஸ்வரஸ்வரூபந்தான், பரத்வம், வ்யூஹம், விபவம் அந்தர்யாமித்வம் அர்ச்சாவதாரம் என்று அஞ்சு பிரகாரத்தோடே கூடியிருக்கும். அதில் **பரத்வமாவது**—அகால கார்ஸ்யமான ஸம்பந்தமில்லாததோர் நாட்டிலே நித்யமுக்தர்களுக்குப் போக்யனாய்க் கொண்டெழுந்தருளியிருக்குமிருப்பு.

வ்யூஹமாவது—ஸ்ருஷ்டி ஸ்திதி ஸம்ஹாரார்த்தமாகவும் ஸம்ஸாரி ஸம்ரக்ஷணார்த்தமாகவும் உபாஸகானுக்ரஹார்த்தமாகவும் ஸங்கர்ஷண ப்ரத்யும்ந அநிருத்த ரூபேண நிற்கும் நிலை.

விபவம்—அநந்தமாய் கௌணமுக்ய பேதத்தாலே பேதித்திருக்கும். பரிகணித்துத் தலைக்கட்டப்போகாதபடி அநந்தமாயிருக்கும். இதரஸஜாதீயமாய்க்கொண்டு ஆவிர்ப்பவிக்கை. இதில் கௌணமென்பது—அவரமென்றபடி. முக்யமென்பது ஸ்ரேஷ்டமென்றபடி. கௌணமாவது ஆவேசாவதாரம்; முக்யமாவது ஸாக்ஷாதவதாரம். **ஸ்ரீமணவாளமாமுனிகள் வ்யாக்யானம்.**

அந்தர்யாமித்வமாவது—அந்த: ப்ரவிச்ய நியந்தாவாயிருக்கை.

ஸ்வர்க்கநரகப்ரவேசாதி ஸர்வாவஸ்தைகளிலும் ஸகல சேதநர்களுக்கும் துணையாய் அவர்களை விடாதே நிற்கை

என்று யதுசைலநாதனின்[2] திருவடித்தாமரைகளில் நிகரில்லாதவனென்னும் விருதுள்ளவன் விண்ணப்பம் செய்தான்.

ஸ்ரீமந் நாராயணா![3] நீ ஸ்ரீய: பதியாயும்,[4] அகில

நிலைக்குமேலே ஸுபாஸ்ரயமான திருமேனியோடே கூடிக்கொண்டு அவர்களுக்குத் த்யேயமாகைக்காகவும், அவர்களை ரக்ஷிக்கைக்காகவும்; பந்துபூதனுய்க் கொண்டு ஹ்ருதயகமலத்திலே எழுந்தருளியிருக்குமிருப்பு.

அர்ச்சாவதாரமாவது—தமருகந்ததெவ்வுருவம் என்றபடியே சேதநர்க்கபிமதமான த்ரவ்யத்திலே விபவவிசேஷங்கள்போலன்றிக்கே தேசகாலாதிகாரி நியமமில்லாதபடி ஸந்நிதிபண்ணி அபராதங்களைக் காணக்கண்ணிட்டு அர்ச்சகபாரதந்த்ரமான ஸமஸ்தவ்யாபாரங்களையுமுடையவனாய்க்கொண்டு கோயில்களிலும் க்ருஹங்களிலும் எழுந்தருளியிருக்குநிலை.

2. திருநாராயணபுரம்—மேல்கோட்டை.

3. ஸ்ரீமானான நாராயணன்—நாராயண சப்தார்த்தம் முழுவுணர்வும் முழுநலமுமான மிக்காரை உடையனல்லன் பூமியிலும் ஊர்த்வலோகத்திலு முண்டான ரூபவத்தானவஸ்துக்களையும் ரூபரஹிதமான சித்தையுமுடையவன். அதீதமாயும், ஆகாமியாயும் உள்ள வஸ்துக்கள் தானேயாய் நின்றவன். தர்மங்களோடு, தர்மிகளோடு வாசியற்ற தனக்கு ப்ரகாரமாம்படி நின்ற ஸர்வஸ்மாத்பரன்.

4. ஸ்ரீய: பதியாய்—பிராட்டி ஈஸ்வரனுக்குப்ரதானநி

ORIENTAL RESEARCH INSTITUTE
LIBRARY

ACCESSION No. 031960

CALL No. 86.043/ ...

SRI VENKATESWARA UNIVERSITY
TIRUPATI

Cat P 39

கருட விஷ்வக்ஸேனாதி நித்யர்க்கும் முக்தர்க்கும்[9] உன்னுடைய ஸ்வாராஜ்யத்தில், முடிவில்லாத தோரானந்தத்தையுண்டுபண்ணிக்கொண்டு போராநிற்க, உன்னுடைய திருவுள்ளத்திற் பிறந்த ஆகஸ்மிகதயையினால்,[10] ப்ரளய காலத்தில் அவ்யக்தஸூக்ஷ்மப்ரக்ருதியில்[11] அடங்கி,

---

9. நித்யர்க்கும், முக்தர்க்கும்—ஆத்மஸ்வரூபந்தான் பத்த முக்த நித்யரூபேண மூன்று படிப்பட்டிருக்கும்.

பத்தரென்பது—ஸம்ஸாரிகளை.

முக்தரென்பது ஸம்ஸாரஸம்பந்தமற்றவர்களை.

நித்யரென்கிறது ஒருநாளும் ஸம்ஸாரியாகாத, சேஷ, சேஷாசனாதிகளை: திருவநந்தாழ்வான், ஸேனைமுதலியார். வைநதேயப்ரமுகர்கள்.

10. ஆகஸ்மிகதயை—நிர்ஹேதுகக்ருபை. (காரணமன்றி உண்டான அன்பு.)

11. ப்ரக்ருதி—மிச்ரஸத்வமாவது—ஸத்வரஜஸ் தமஸ்ஸுகள் மூன்றுங்கூடி பத்தசேதனர்களுடைய ஜ்ஞாநாநந்தங்களுக்கு திரோதாயகமாய் விபரீதஜ்ஞானஜனகமாய், நித்யமாய், ஈஸ்வரனுக்கு க்ரீடாபரிகரமாய், ப்ரதேசபேதத்தாலும், காலபேதத்தாலும், ஸத்ருசமாயும், விஸத்ருசமாயுமிருக்கும் விகாரங்களை யுண்டாக்கக்கடவதாய், ப்ரக்ருதி, அவித்யை, மாயை என்கிற பெயர்களையுடைத்தாயிருக்கும் அசித்விசேஷம்.

மெழுகில் அழுந்கியிருக்கும் தங்க உரைப்பொடி (தூகள்) போல் ரூபத்தை, அழிந்திருக்கிற பக்தாத்மவர்கத்தை யும் நித்யமுக்தரைபோல் மோக்ஷானந்தத்தில் ஈடுபடுத்த வேணுமென்ற உன் ஸத்ய ஸங்கல்பத்தால், ப்ரக்ருதியுள் புகுந்து, மஹதகங்காரங்களையும்[12] பஞ்சதந்மாத்ரங்களையும்[13] பஞ்சமகாபூதங்களையும்[14] உண்டுபண்ணி இவைகளினின்றும் ப்ரும்மாண்டத்தைச்ருஷ்டித்து[15] அது தன்னில் பிரும்மாதி, சுர நர, திர்யகஸ்தாவரங்க

ப்ரக்ருதியென்பது—விகாரங்களைப் பிறப்பிக்கையாலே; அவித்தையென்கிறது. ஜ்ஞான விரோதியாகையாலே. மாயையென்பது விசித்ரச்ருஷ்டியைப் பண்ணுகையாலே.

12. மஹதகங்காரங்கள்—வைகாரிகம், தைஜஸம், பூதாதி.

13. பஞ்சதந்மாத்ரங்கள்—சப்த தந்மாத்ரை, ஸ்பர்சதந்மாத்ரை, ரூபதந்மாத்ரை, ரஸதந்மாத்ரை, கந்ததந்மாத்ரை.

14. பஞ்சமஹாபூதங்கள்—ஆகாசம், வாயு, தேஜஸ் ஜலம், ப்ருதிவீ. (தத்வத்ரயம் அசித்ப்ரகரணம் 1-30 இவைகளையும் ஸ்ரீமணவாளமாமுனிகள் வ்யாக்யானத்தையும் நன்றாய் ஆராய்ந்தால் மேற்சொன்ன விஷயங்களை ஸ்பஷ்டமாயறியலாம்.)

15. ஸ்ருஷ்டி—இரண்டாம் விண்ணப்பத்தின் குறிப்பில் பார்க்கவும்

ளென்னும் நான்குவகையில் அவரவர் பூர்வகர்மானுகுண தேகங்களையும், அந்தந்த தேஹோசிதமான ஜ்ஞான சக்த்யாதிகளையும் ஈந்து, நீ ப்ரதானம் பண்ணின கரணகளேபராதிகளிலிருந்தே அவர்கள் ஏதேனும் பொல்லாங்கைப் பொருள் அறியாமல் செய்து அழிந்துபடாமல் தக்கவையிவை, தகாதவையிவையென்னும் அறிவைக்கொடுக்கும் வேத சாஸ்திரங்களைக்காருண்யத்தால் அளித்தாய்.

இவ்வளவிலும் உடையவன் கட்டளையைப்பிடித்து நடக்கமாட்டாத ஜடர்களின்[16] இடர்களை[17] போக்கிக்காப்பாற்றும் பொருட்டு அவர்களுடன் இருப்பேனென்று மும்மூர்த்திகளின் நடுவிலும், க்ஷீராப்தியிலும், இமையோர் வாஸஸ்தலமான ஸுவர்க்கம் முதலான இடங்களிலும் நின்றாய். அப்படியானாலும் தேவர், முனிவர், யோகிகள் இவர்களன்றிக்கே மற்றைய மனிதர்க்கு உடனாய் மன்னிவாழ ஆகாமையால், மனிதர்களில் ஆபால கோபாலர்களுள்ளும், கன்று, மாடு, கரடி, அணில், மந்தி முதலான திர்யக் ஜாதிகளுக்கும் ஒரு நீராகக்கலந்து பரிமாறலாம்படிவாழ ராம க்ருஷ்ணாத்யவதாரங்களைக் க்ருபையால் செய்தருளினாய். ஆகிலும் அந்தந்த தேசங்களிலும் அந்தந்தக்காலத்திலும் இருந்தவர்களுக்கு அன்றிக்கே, மற்றையோர்கட்கு உபகாரமாகாததினால், ஸர்வதேச, ஸர்வகால, ஸர்வாவஸ்தைகளிலும் நிற்கிற ஸர்வசேதனா சேதனவர்க்கங்களிலும்[18]

---

16. ஜடர்—மூடர், அறிவீனர்.

17. இடர்—துன்பம், வருத்தம்.

18. சேதனாசேதனங்கள் ——தத்வத்ரயமாவது—சித்தும், அசித்தும் ஈச்வரனும்.

வியாபித்திருந்து மனமொழிமெய்கள் மூன்றிலும் ப்ரவே ரித்துக்கொண்டு அந்தர்யாமியெனப்பட்டாய். இப்படி யாருலும் எங்காகிலும் ஒருவனுக்குமாத்திரம் அநேக ஜன் மங்களால் ஸாத்யமான யோகத்யான விஷயம் என்பதன்றி யெல்லாருக்கும் கூடவிருந்தும் இல்லாதவன்போல் ஆன படியால் எல்லா ஜனங்களும், சர்மசக்ஷுஸ்ஸினாலேயே ஸாக்ஷாத்கரித்து[19] அவரவர்கள் மனமிசைந்த கைங்கர்யங் களை நிறைவேற்றி க்ருதார்த்தராகும்படி[20] ஸர்வ சுலப

சித்தென்கிறது—ஆத்மாவை, சைதன்யாதாரமான வஸ்து.

அசித்து—ஜ்ஞானசூன்யமாய், விகாராஸ்பதமா யிருக் கும் சைதன்ய ஆதாரமான வஸ்து.

ஈச்வரன் அகிலஹேயப்ரத்யனீகாநந்த ஜ்ஞாநாநந்தைக ஸ்வரூபனாய், ஜ்ஞானசக்த்யாதி கல்யாணகுண பூஷிதனாய் ஸகல ஜகத்ஸ்ருஷ்டி ஸ்திதி ஸம்ஹாரகர்த்தாவாய் "ஆர்த்தோ ஜிஞ்ஞாஸுரர்த்தார்த்தீ ஜ்ஞானீ" என்ற சதுர்வித புருஷர் களுக்கு மாச்ரயணீயனாய், தர்மார்த்தகாம மோக்ஷாக்ய, சதுர்வித பலப்ரதனாய் விலக்ஷணவிக்ரஹயுக்தனாய் லக்ஷ்மீ பூமி நீளாநாயகனாயிருக்கும் "ஒரு புருஷவிசேஷமன்றிக்கே சிதசிந்நியந்தா" சகல சேதநாசேதன விலக்ஷணமாக வும் இவற்றுக்குக் காரணமாகவும், வியாபகமாகவும், தாரக மாகவும், நியாமகமாகவும், சேஷியாகவுமறியவேண்டும்.

19. சாக்ஷாத்காரம்—நேரிலுணர்கை, கருவிகரணாதிக ளுக்கெல்லாம் சாட்சியாயிருப்பது.

20. க்ருதார்த்தர்—கருமமுடித்தோர்.

மென்னும் அர்ச்சாவதாரத்தைக்கொண்டு, சிலகாலம் பிரமனின்றும் ஆராதனத்தை அங்கீகரித்து பின்பு சநத் குமாரருக்கு வச்யப்பட்டு அவருடன் உத்தரபதரிகாச்ரமத்திற்கு எழுந்தருளி; அவ்விடத்தில் ஸாக்ஷாத் அஷ்டாக்ஷர உபதேச தேசிகனென்று[21] கொண்டாடப்பட்டு உன் ரூபாந்தரமான "நர" முனியினால் அர்ச்சனையை (ஆராதனையை)ப்பெற்று, மேலும் இந்த கர்னாடக மண்டலத்திற்கு மண்டனமெனப்படும் (சிரோபூஷணம்) யதுகிரி சிகரத்தை இருப்பிடமாக உகந்து கோயில்கொண்டு, ஸகல ஜனங்களையும் ரக்ஷிப்பதில் தீக்ஷிதனென்று புகழப்பட்டாய். அன்றியும் ஸர்வஜன ஸாதாரணனன்றிக்கே, இந்த யதுவம்சத்தில் பிறந்தவர்களுக்குக்குலதெய்வமாய் தயா விசேஷத்தினால் காப்பாற்றுகிறவனென்றபடியால், என்னில் அகாரணமான கருணைக்கடல் பரம்பரையாய்ப்பொழிந்து க்ஷமிக்கவும் க்ஷமிக்கவும். அநந்யஜனசுலப![22] ஸ்ரீயது சைலவல்லபா![23]

---

21. தேசிகன்—குரு.

22. அநந்யஜனஸுலபா—அநந்யப்ரயோஜனனாய்த் தன்னையே ஆச்ரயித்தவர்களுக்கு எளியனானவன்.

23. ஸ்ரீயதுசைலவல்லபா!—யதுபர்வதமென்னும் திருநாராயண புரத்தில் ப்ரியமுள்ளவனே, மற்றும் நாயகனே.

உத்தரபதரிகாச்ரமம்—வடநாட்டுத் திருப்பதிகளில் ஒன்றான பதரிகாச்ரமம். இந்த திவ்யதேசத்தில் ஸர்வேச்வரன் தானே சிஷ்யனுமாய் ஆசார்யனுமாய்க்கொண்டு, நாராயணாவதாரம் செய்தருளி, அதில் நாராயணனாக இலந்தை மரத்தின்கீழே தபோநிஷ்டராய் ஜ்ஞானமுத்ரையோடு வீற்றிருந்து ஸர்வாம்சபூதனாய் சிஷ்யனான நரனுக்குத் திருமந்த்ரத்தை உபதேசித்து தத்வ்யாஜேன லோகத்தை உஜ்ஜீவிப்பித்தருளினான்.

இரண்டாம் விண்ணப்பம்.

பா— திருமாலே! நீயே ஜகத்தை ஒரு முறையில் படைத்துக்காப்பாற்றி வயிற்றில் சேர்த்துக்கொள்கிருய். ஆகையால் நீ, பரப்ரம்ஹம் என்று இந்த நரபதி, யதுகோத்ரபதிக்கு[1] விண்ணப்பம்செய்தான்.

பரப்ரம்ஹ[2] ஸ்வரூபா! இந்த உலகம் எந்த வஸ்துவினிருந்து பிறக்கிறதோ யாதொன்ருல் ஜீவிக்கின்றதோ யாதொன்றில்லயிக்கிறதோ அந்தவஸ்துவேபரப்ரம்ஹம்என்று குறிப்பிட்டு இப்பேர்ப்பட்ட ஜகத்காரணவஸ்துவும் நீயே என்று வேதாந்தங்கள் பலபல வகையில் ஸாமான்ய, விசேஷசப்தங்களால் உன்னையே புகழ்ந்தன. இப்படியிருக்கும் நீ! மஹதாதி தத்வக்ரமத்தில் பஞ்சமஹா பூதங்களை உண்டு பண்ணி, அவைகளிலிருந்து பிரும்மாண்டத்தைப்பண்ணி, அதனுள் பிரும்மாதி தேவதைகளை சிருஷ்டித்து அவரவர்கட்கு ஒரோர் அதிகாரத்தை எல்லைப்படுத்திச் சிலவற்றை

1. யதுகோத்ரபதி—திருநாராயணபுரத்திரு நாரணன், யதுகிரிநாதன்.

2. பரப்ரஹ்மம், ஜகத்ஸ்ருஷ்டிக்ரமம், ஜகத்காரணன், ஜகதாதிகாரணன்.—ஆளவந்தார்ஸ்தோத்ரரத்னம்—ச்லோகங்கள் 11, 12, 13, 14-லும், ஸ்ரீமான் அண்ணங்கராச்சார் ஸ்வாமி அருளிச்செய்த "ரத்னப்ரபா" என்னும் வ்யாக்யானத்தையும் பார்க்கவும்.

"எல்லா பிரபஞ்சத்திற்கும் ஆதாரமாகவும், நியாமக

ஆக்குவது நோக்குவது அழிப்பது என்னப்பட்ட உன் கைங்கர்யத்தில் நியமித்தாய். அவர்களும் ஜகத்தில் ஏக தேசத்தில் உன்னுடைய ஆஜ்ஞானுஸாரம் படைப்பதும் காப்பதும் அழிப்பதுமாக இருக்கிறதனால், அவர்களைக் கொண்டாடுமிடையில் நான்முகனே ஜகத்காரணனென்றும் ருத்ரனே ஜகத் காரணனென்றும், கொண்டாடுவார்கள். இந்த நிலைமையை அறியாதவர் மயங்குவர். ஒருவனை ஸ்தோத்திரம் செய்யும் ப்ரஸ்தாபமேயின்றிமல் ஜகத்ஸ்ருஷ்டிக்ரமம் சொல்லுமிடத்தில் விசாரம்செய்ததில், ஆதியில் நாராயணனே மிஞ்சியிருந்தானென்றும், அவன் உந்தித்தாமரையில் பிரமன் வெளிப்பட்டானென்றும், அவனுடைய நெற்றி வேர்வையிலிருந்து ருத்ரன் பிறந்தானென்றும் சொல்லுதலால் நீயே ஜகதாதிகாரணனான பரப்ரம்ஹம் என்கிறதை ஸாத்விகரறிவித்தறிந்த என் மூவகைத்துன் பங்களையும் போக்கடிக்க வேணுமென்று உன்னடி நிழல் புகுந்தேன். அநந்யஜனசுலப! ஸ்ரீயதுசைலவல்லப! என்னை ஆற்று! என்னை ஆற்று!

னாகவும் சேஷியாகவும், ஸ்ரீமன் நாராயணனேயாவான். சிவனும் பிரமனும் பரதத்வமாயிருக்கக்கூடாதவர்கள்.

பிள்ளைப்பெருமாளையங்கார் பாடல்—மங்கை பாகன் சடையில் வைத்த கங்கையார்பதத்து நீர்? வசனமேவுமுனிவனுக்கு மைந்தனானதில்லையோ? செங்கையாலிரந்தவன் கபாலமாரகற்றினார்? செய்யதாளின் மலரான் சிரத்திலானதில்லையோ? வெங்கண் வேழமூலமென்ன வந்ததுங் கள்தேவனோ? விஸ்வாணனமரிலன்று விறலழிந்ததில்

லையோ ? அங்கண் ஞாலமுண்டபோது வெள்ளிவெற்பகன்றதோ ? ஆதலாலரங்கனன்றி வேறுதெய்வமில்லையே.”

“உய்யஉலகுபடைக்கவேண்டி உந்தியில் தோற்றினாய் நான்முகனை ” திருநாபிக்கமலத்தில் நாராயணன் நான்முகனைப்படைக்க நான்முகனும் சங்கரனைப்படைக்க இப்படியே மென்மேலும் லோகஸ்ருஷ்டி நிகழ்ந்தது.

ஸ்ருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹாரம்—ஈச்வரன் ஸ்ருஷ்டிக்கையாவது—அசித்தைப்பரிணமிப்பிக்கையும், சேதனர்க்கு சரீரேந்திரியங்களைக்கொடுத்து, ஜ்ஞானவிகாஸத்தைப்பண்ணிவைக்கையும்.

ஸ்திதிப்பிக்கையாவது—ஸ்ருஷ்டமானவஸ்துக்களிலே பயிருக்குநீர்நிலைபோலே அனுகூலமாகப்ரவேசித்துநின்று ஸர்வரக்ஷைகளையும் பண்ணுகை.

ஸம்ஹரிக்கையாவது—அவினீதனான புத்ரனை பிதா விலங்கிலிட்டுவைக்குமாப்போலே, விஷயாந்தரங்களிலே கைவளருகிற கரணங்களைக்குலைத்திட்டுவைக்கை.

மூன்றாம் விண்ணப்பம்.

பா— நின் கணக்கில்லாத கல்யாண குணங்களை இவ்வளவென்று கணக்கிட அரிதாகிலென்ன? நீ என்ஹ்ருதயத்தில் புகுவாய் என்று அந்த ஜகதீச்வரனுக்குப்ரீதியுடன் ஆட்சி செய்யுமவன் அன்புடன் உரைத்தான்.

அப்ரமேய! ஜகத்தில் ப்ரமேயமென்றால் அறியத்தகுந்த வஸ்து. அந்த வஸ்துவையறியப்ரமாணங்கள் ப்ரத்யக்ஷமென்றும், அநுமானமென்றும், சப்தமென்றும் மூன்று வகைப்படும். அவைகளில் ப்ரத்யக்ஷமென்பது இந்திரியங்களுக்கும் பொருள்களுக்கும் கிட்டின ஸம்பந்தத்தினால் பிறக்குமறிவு; இது ஆறு வகைப்படும். அதெப்படியெனில், கண் திறந்து ஒரு வஸ்துவைப்பார்த்தால் இது கருப்பு, இது வெண்மை என்பதே முதலாக பிறக்குமறிவு, சாக்ஷுஷப்ரத்யக்ஷமெனப்படும்; செவிசாத்துகையில் (கேட்கையில்) இஃதிந்தமாதிரியான ஓசை, இது இவ்வகையான வார்த்தை, இது இந்த அக்ஷரம், இவைமுதலாகப் பிறக்குமறிவு—ச்ராவண ப்ரத்யக்ஷமெனப்படும்; நாவினால் நவிற்று இது புளிப்பு, இது இனிப்பு, இது உப்பு இவை முதலாகப்பிறக்குமறிவு ஜிஹ்வாப்ரத்யக்ஷமெனப்படும்; நாசியால் ஒன்றை மணத்தால் இது ஸுவாஸனை, இது துர்க்கந்தம் இவை முதலாக பிறக்குமறிவு, க்ராணப்ரத்யக்ஷமெனப்படும்; சரீரசர்ம ஸ்பர்சமாகில் இது வெப்பம், இது குளிர் இவைமுதலாக பிறக்குமறிவு ஸ்பார்சனப்ரத்யக்ஷமெனப்படும்; மனதில் எண்ணுகையில் தனக்கு இப்பொழுது இன்பமாயிருக்கும், இப்பொழுது துன்பமாயிருக்கும்

இவைமுதலாக பிறக்கும் அறிவு மானஸப்ரத்யக்ஷமெனப்படும், இப்படிப்ரத்யக்ஷம் ஆறுவகையாயிருக்கும். அனுமானமென்பது—வேறொன்றை விட்டுத்தான் ஒரு இடத்திலும் இராத வஸ்துவைப்பார்த்து அந்த இடத்தில் வேறொன்றை அறிவது. அஃதெங்ஙனேயெனில்—நெருப்பை விட்டு புகையிராதென்ற நியமத்தைப்பாகசாலையில் நிச்சயித்து மலைமுதலானவிடங்களில் வேறொரு புகையைக்கண்டு அவ்விடம் நெருப்பு உண்டென்று அறிதல் அனுமானப்ரமாணமெனப்படும். சப்தப்ரமாணமாவது இருக்கிறதை இருக்கிறபடி அறிவிக்கும் வசனம். அதுவும் லௌகிகமென்றும் வைதிகமென்றும் இருவகைப்படும், லௌகிகமென்பது லோகத்தில் ஆப்தர் (நண்பர்) சொல்லும் வசனம். வைதிகமென்பது வேதம் முதலான பதினான்கு[1] வித்யைகள். இந்த ப்ரத்யக்ஷானுமான சப்தங்களென்றும் மூன்றுப்ரமாணங்களிலிருந்தும் உன்னுடைய ஸ்வரூப, ரூப, குண[2] விபவாதிகளில் கொஞ்சம், கொஞ்சம் அறியப்படுமன்றிக்கே இப்படியென்று பரிச்சேதித்தில்[3] (தெரிந்துரைத்தல்) அரிதானமையின் நீ அப்ரமேயனெனப்படுகிறாய். ஆகிலும் உன்னுடைய பக்த ஸுலபதையைப்பிரகாசிப்பித்து என்னுடைய ஹ்ருதயாந்தாளத்தில் கோயில் கொள்ளவேணும் கோயில் கொள்ளவேணும் அநந்யஜனஸுலபா! ஸ்ரீயதுசைலவல்லபா!

---

1. பதினான்கு வித்யைகள்—நான்காம் விண்ணப்பத்தைப்பார்க்கவும்.

2. ஸ்வரூபம்—அகிலஹேயப்ரத்யனீகத்வத்தாலும், கல்யாணைகதானத்வத்தாலும். ஸ்வேதரஸமஸ்தவஸ்துவிலக்ஷ

ணமாய், விபுத்வாத்தேசத: பரிச்சேதராஹிதமாய், நித்யத்வாத்காலத: பரிச்சேதராஹிதமாய், ஸர்வமும், தனக்குப்பிரகாரமாகித்தான் பிரகாரியாய், தனக்கொருப்ரகார்யாந்தரமில்லாமையாலே வஸ்து பரிச்சேதராஹிதமுமாய், ஜ்ஞானந்தமயமாய், ஜ்ஞான, பலைச்வர்யாத்யநந்தகல்யாண குணகணமஹோததியாய், ஸ்ரீய: பதியாய், ஸ்வேதரஸமஸ்தத்தையும் வ்யாபிக்குமிடத்தில் அப்ராக்ருதமாய், சுத்தசத்வமயமாய், ஸ்வாஸாதாரணமாய், புஷ்பஹாஸ ஸுகுமாரமாய், புண்யகந்தவாஸிதாநந்ததிகந்தராளமாய், ஸர்வாபாச்ரயமாயுமிருந்துள்ள திவ்யவிக்ரஹம்போலே, வியாபித்து, தரித்து, நியமித்து, இப்படி ஸமஸ்தப்ரகாரத்தாலும், ரக்ஷகமாய்க்கொண்டு சேஷியாயிருக்கும்.

ரூபம்—அப்ராக்ருதமான சோதிவடிவு.

குணம்—அளவிட அரிதானவை, ஆச்ரயண ஸௌகர்யாபாதகம், ஆச்ரயகார்யாபாதக குணங்கள்—வாத்ஸல்ய ஸ்வாமித்வ, ஸௌசீல்ய, ஸௌலப்ய, ஜ்ஞான, சக்தி, பூர்த்தி ப்ராப்தி.

3. நிஷ்கர்ஷித்தல்—பரிச்சேதித்தல்—அளவுக்குட்படுத்துகை.

நான்காம் விண்ணப்பம்.

பா— வேதம், அதனர்த்தமூனுதியிடுகிற புராணங்களிலே நீ, தெளிவாய்க்காண்பாய் என்று அன்புடன் நற்குணன், யாதவகிரிநாதன் திருவடியில் விண்ணப்பம் செய்தான்.

ஸகல வித்யாப்ரவர்த்தகா! வித்யைகள்—வேதங்கள் நான்கும், அங்கங்கள் ஆறும், தர்க்கமும், மீமாம்ஸையும், புராணமும், தர்மசாஸ்திரமும், ஆயுர்வேதமும், தனுர்வேதமும், காந்தர்வமும், அர்த்தசாஸ்திரமும் என்று பதினெட்டு வகையாயிருக்கும். அவைகளில், ருக், யஜுஸ், ஸாம, அதர்வமென்கிற நாலுவேதங்களும் பூர்வபாகத்தில் (முதற்பகுதியில்) தர்மம், அர்த்தம் காமம்[1] என்னும் மூன்றுவர்க்

வேதாந்தத்தின் உண்மையை யறியவேண்டுமானுல் ஸ்ம்ருதீதிஹாஸ, புராணங்களை சாதனமாகக்கொள்ளாவிடில் உண்மை தெரியாது (கொண்டேயறியவேண்டும்).

1. தர்மம், அர்த்தம், காமம் மோட்சம்—புருஷார்த்தம் சதுர்விதமாயிறே இருப்பது. தர்மமாவது—இஷ்டாபூர்த்தங்கள். இஷ்டமாவது யாகாதிகள், பூர்தமாவது; கர்தாதி; ஸாதனதயா புருஷார்தமாயிருக்கும்.

காமமாவது; ஐஹிக, பாரலௌகிக போக்யபதார்த்தானுபவசுகம்.

மோட்சமாவது—ஆத்மானுபவ பகவதனுபவங்கள். இவற்றில் காமமோக்ஷங்களிரண்டும் ஸ்வயம் புருஷார்த்தமாயிருக்கும்.

கத்திற்கும் ஸாதனமான[2] கர்மத்தைச்சொல்லும், உத்தர பாகத்தில் (பிற்பகுதியில்) உன் ஸ்வரூப, ரூப, குணவிப வாதிகளைச்சொல்லி மோட்சோபாயத்தைக்காட்டும். அங்கங்களில்—சிக்ஷையென்கிறது—ஸ்வர, வர்ண, மாத்ராதிகளை நிச்சயிக்கிறது. வ்யாகரணமென்பது—ப்ரக்ருதி[a] ப்ரத்யயாதி[b] களிலிருந்து அர்த்தத்தைச்சொல்லும் பதங்களை ஏற்படுத்துகிறது. சந்தஸ்ஸென்பது— காயத்ரீ, த்ரிஷ்டுப், அநுஷ்டுப், முதலான சந்தோலக்ஷணங்களை நிச்சயிக்கிறது. கல்ப ஸூத்திரமென்பது—வேதத்தில் சொல்லப்பட்ட கர்மத்தை உபயோகிக்கையை நிதானிக்கிறது. ஜ்யோதிஷமென்பது கர்மத்தை, ஆசரிக்கும் காலத்தை ஏற்படுத்துகிறது. வேதபுருஷனுக்கு—சந்தஸ்ஸு பாதங்களும், கல்ப ஸூத்ரம் கைகளும், வியாகரணம் முகமும், சிக்ஷை க்ராணமும் (மூக்கும்) ஜ்யோதிஷம் கண்களும், நிருக்தம் செவிகளாயுமிருப்பதினால் இவை யாவும் வேதாங்கங்களெனப்படும்.

தர்க்கமென்பது வேதார்த்தங்களை யுக்திகளால் ஸ்திரப்படுத்துகிறது. மீமாம்ஸையென்பது வேதார்த்தங்களை பூர்வபக்ஷ[3] ஸித்தாந்த ரூபமாய் ஆராய்ந்து நிச்சயிக்கும்.

---

2. ஸாதனம் :—ஸாத்யப்பொருளையுறுதிப்படுத்துமத்தாட்சி ; சித்தியாதல்.

a. ப்ரக்ருதி—பகுதி.
b. ப்ரத்யய—விகுதி.
c. சந்தஸ்—யாப்பியல்.

3. பூர்வபக்ஷம்—பிரதிவாதம் ; பிரதிகக்ஷியாய் மாறுபடக்கூறுகை.

புராணங்களென்பவை ஜகத் ஸ்ருஷ்டியும், ஸம்ஹாரமும், மந்வந்தரங்களும் வம்சமும் வம்சங்களில் பிறந்தவர்கள் சரித்திரமும் சொல்லுகின்றன. அவை பிராம்ஹம், பாத்மம் முதலான பதினெட்டு வகையாயிருக்கும்.

தர்மசாஸ்திரமென்பது—ஆசார[4] வ்யவஹாரப்ராயச்சித்தங்களைச்சொல்லும். மனு, யாஞ்யவல்க்யம் முதலாய் பதினெட்டு வகையாயிருக்கும்.

ஆயுர்வேதமென்பது—நோய்களின் ஆதிகாரணம், பரிஹாரம் முதலியவைகளை நிரூபிக்கும்.

தனுர்வேதமென்பது—அஸ்த்ர[5] சஸ்த்ர[6] உபயோகம், பின்வாங்குகை முதலியவற்றை நிரூபிக்கும்.

காந்தர்வமென்பது—நடனம், கானம், வாத்தியம் முதலியவற்றை நிரூபிக்கும்.

அர்த்த சாஸ்திரமென்பது—பிரஜாபரிபாலனுதி ராஜநீதிகளை நிரூபிக்கும். இந்தப்பதினெட்டு வித்யைகளையும் நீயே லோக நன்மைக்காக பிரஸித்தி செய்ததனுல் நீயே

---

4. ஆசாரம்—சௌச, ஸ்னுநாதி.
வ்யவஹாரம்—தாயபாகாதி விவாத நிர்ணயம்.
ப்ராயச்சித்தம்—பாபசோதக சாந்த்ராயணுதிகள்.

5. அஸ்த்ரம்—ஆயுதம், கைவிடுமாயுதப்பொது.

6. சஸ்த்ரம்—பாணம், கைவிடாப்படை.

ஸகல வித்யாப்ரவர்த்தகனென்னப்படுவாய். இந்த எல்லா வித்யைகளிலும் ப்ரதானமான வேதாந்தத்தில்[7] ப்ரகாசமான உன் ஸ்வரூபத்தை அறிவித்து என் மனதின் அஞ்ஞானத்தை நீக்கி, உன் அடிகளில் ஜ்ஞானபக்தியை முற்ற வைக்கவும் முற்றவைக்கவும். அநந்யஜனஸுலபா! ஸ்ரீயது சைலவல்லபா!

---

7. ப்ரதாநமான வேதாந்தம்—முக்யமான வேதத்தி னுத்தரபாகமான உபநிஷத்துகள்.

ஐந்தாம் விண்ணப்பம்.

பா— ஸகலாத்மக! ஸகல ஜகத்வ்யாபாரமும் உன்னுடையதே என்று ஸகல வேதமும் முறையிடுவதும் ~~அல்லது~~ (சாற்றுவதும்) என்று அந்த ஸூகலன் (ச்ரேஷ்டமான கலைவல்லோன்) யதுசைலபதிக்கு விண்ணப்பம் செய்தான்.

ஸகல வேதவேத்யா! வேதங்கள்—பூர்வபாகத்தில் யஜ்ஞாதிஸத்கர்மங்களை முழுதும் வழிப்படும் ஒழுங்கையும் அவைகளினால் வரும் பலத்தையும் சொல்லும். உத்தர பாகத்தில் ஸம்ஸாரத்தை இகழ்ந்து ஜீவஸ்வரூபத்தையும்[1] பரப்ரம்மஸ்வரூபத்தையும் நிரூபித்து, மோட்சோபாயத்தையும் விதித்து மோட்சானந்தத்தையும் புகழ்கின்றன. இப்படி அநேக விதமாயிருக்கும் வேதம் உன்னையே புகழ்கிறதென்று பெரியோர் சொல்லுவர். அந்த நிலைமையை பாவிக்கையில் லோகத்தில் அரசனைப்புகழும்போது (அறை கூவுவோர் அல்லது கட்டியக்காரர்) அரசனாணையைக்கடைபிடித்து நடக்கும் வகையையும், அதற்கு மனமுவந்து அரசன் அவர்கட்குத்தகுந்ததைக்கொடுக்கும் வகையையும், பிரஜைகள் நிலைமையையும், அரசன் நிலைமையையும் அரசன் சன்னிதானத்தை அடையும் வழியும், சன்னிதியிலிருப்போர் சுகத்தையும், வருணித்ததில் அரசனையே புகழுவரென்பர். இப்படி வர்ணாச்ரமத்தோரென்கிற, உன்

1. ஆத்மஸ்வரூபம் "சென்று சென்று பரம்பரமாய்" என்கிறபடியே தேஹேந்த்ரியமன: ப்ராணபுத்திவிலக்ஷணமாய், அஜடமாய், ஆனந்தரூபமாய், நித்யமாய், அணுவாய்,

னுடைய கட்டியக்காரர் பண்ணத்தருந்தான யக்ஞாதி கர்மங்களென்கிற, உன் ஆணத்தி (ஆக்ஞா) கைங்கர்யமும், அதற்கு வச்யப்பட்டு நீ கொடுக்கும் இந்த லோகத்தி லுண்டான சுகதுக்காதிபோகங்கள், பார லௌகிக பல மென்கிற பிழைப்பையும், ஜீவாத்மரென்னும் உன் கைங்கர்ய பரர்கள் நிலைமையும், பரப்ரம்ஹமெனப்படும் உன் நிலை மையையும் மோட்சோபாயமென்னும் உன் சன்னிதியை அடையத்தக்க நடத்தையையும் மோட்சானந்தமெனப் படும் உன் ஸன்னிதியிலிருப்பவர் சுகத்தையும் நிருபணம் செய்வதினால் உன்னையே புகழுகின்றனரென்பது திண்ணம் இந்த அர்த்தத்தைச்சித்தத்தில் வைத்தே :—

“ வேதைச்ச ஸர்வைரஹமேவ வேத்ய : ” என்று கீதையில் சொன்னது.

இப்படி வேத வேத்யனெனப்படும் உன் அதிசயத் தையே ஸகல ஸ்ம்ருதீதிஹாஸ புராணாகமங்களும் வருணிக் கின்றன. வருணித்தும் முடிவைக்காணவில்லையென்றால், அநேக மனுஷ்யர்கள் தங்கள் முயற்சியினால் உன் நிலை மையை அறிந்து துதித்துப்பாடிக்கடைக்காண்பரென்பது (ஈடேறுவரென்பது) இச்சை மாத்ரமே. ஆகையால் நீயே தயைசெய்து உன் ஸ்வரூபத்தை அறிவித்து என்னை உன் கைங்கர்யபரனென்று இடு இடு. அநந்யஜனஸுலபா ! ஸ்ரீயது சைலவல்லபா !

அவ்யக்தமாய், அசிந்த்யமாய், நிரவயவமாய், நிர்விகாரமாய், ஜ்ஞாநாஸ்ரயமாய், ஈஸ்வரனுக்கு நியாம்யமாய், தார்யமாய் சேஷமாயிருக்கும்.

ஆறாம் விண்ணப்பம்.

பா— பலவிதமாய் (பரஸ்பரவிரோதமாய்) தோற்றும் வேத வசனங்கள், உபதேசத்தினால் பரஸ்பர விரோதமில்லாமலாகும், என்று கமலநாபனுக்கு திருவடியில் வணங்கி அரசர் தலைவன் விண்ணப்பம் செய்தான்.

அற்புத சரிதா![1] வேதங்கள், உன் ஸ்வரூப ரூப குண விபவங்களைப்பலவிடங்களில் பலபல வகையாய்ச்சொல்லி அறிவிக்கும். ஆசார்யன் மூலமாய்க்கேள்விபடுகிறவர்கட்கு இந்த அர்த்தம் சுவ்யக்தமாய் (தெளிவாய்) தெரியும். தங்கள் புத்தி பலத்தினால் ஊகிக்குமவர்கட்கு பரஸ்பர விரோதமாய் (ஒன்றுக்கொன்று விரோதமாய்) த்தோன்றும், அதெப்படியெனில் :—

உன்னை சகுணனென்றும், நிர்குணனென்றும், பெரிதுக்கும் பெரியவனென்றும், சிறியதின் சிறியவனென்றும், உருவுடையவனென்றும், உருவு இல்லானெனவும், அவாங்மனஸகோசரனென்றும், வேதவேத்யனென்றும், பிறப்பு இறப்பு இல்லாதவனென்றும், மத்ஸ்யாதி ரூபங்களில் பிறந்தவனென்றும் சொல்லி மந்தமதிகட்கு விரோதம் காண்கையால் நிச்சயம் பிறக்காது. பெரியார் உபதேசத்திலிருந்து அறிகிறவர்கட்கு இந்த விரோதம் எப்போழுதும் தோன்றாது.

---

1. அற்புதசரிதா—ஆச்சரியமான ஒழுக்கமுடையவனே, சரித்ரமுடையவனே.

ஸகுணனெனில் வாத்ஸல்யாதி குணங்களுள்ளவனென்றும்,[3] நிர்குணனென்றால் ராஜஸதாமஸாதிகளில்லாதவனென்றும் தெரியவருவதால், ஸத்குணங்களெல்லாம் இருக்கின்றன, துர்குணங்களொன்றுமில்லையெனத்தெரியவரும்.

பெரிதுக்கும் பெரியவனெனில்—பதினான்கு லோகங்களையும் தன்வயிற்றினுட்கொண்டவனென்றும்; சிறியதுக்கும் சிறியவனெனில் சிறியதான ஜீவாத்மாவுக்குள் அந்தர்யாமியாயிருக்கு[4]மென்றும் தெரியவருவதால் ஸகலபதார்த்தங்களின் உள்ளும் புறமும் வ்யாபித்திருப்பனென்ற நிச்சயம் உண்டாகும்.

---

2. வாத்ஸல்யாதிகுணங்கள்—அன்றீன்ற கன்றினுடம்பின்வழுவை யாதரித்து புஜிக்கும் தேனுவைப்போலே ஆச்ரிதர்களுடையதோஷங்களை போக்யமாகக்கொள்வதொரு குணம்.

3. ராஜஸதாமஸாதி குணங்களாகின்றன—ஸத்வரஜஸ்தமஸ்ஸுகள்.

ஸத்வம்—ஜ்ஞானஸுகங்களையும், உபயஸங்கத்தையும பிறப்பிக்கும்.

ரஜஸ்ஸு—ராகத்ருஷ்ண ஸங்கங்களையும், கர்மஸங்கத்தையும் பிறப்பிக்கும்.

தமஸ்ஸு—விபரீதக்ஞானத்தையும், அநவதானத்தையும் பிறப்பிக்கும்.

4. ஜீவாத்மனுள் அந்தர்யாமியாயிருக்கும்—சேதநருடையவுள்ளே பிரவேசித்து ஸகலப்ரவ்ருத்திகளுக்கும் நியந்தாவாயிருக்கை.

ஸாகாரனெனில் அப்ராக்ருத சரீரமுள்ளவ[5]னென்றும் நிராகாரனெனில் ஸகலஹேயாஸ்[6]பதமானப்ராக்ருதசரீரமில்லாதவனென்றும் தெரியவருவதால் தன் ஸ்வரூபத்திற்கு அனுகுணமாய் தனக்கிச்சானு குணமாயிருக்கிற திவ்ய மங்கள விக்ரகங்கள் உள்ளவனென்றும் வ்யக்தமாகும்.

அவாங்மனஸகோசரனெனில்—ஸ்வரூபமும், விக்ரஹமும், குணங்களும், ஐச்வர்யமும் இவ்வளவு என்று அளவிட்டுச்சொல்லவும் அறியவும் ஆகாதவனென்கிறது.

வேதவேத்யனெனில்—ஸ்ரிய: பதியும், அகிலஹேயப்ரத்யனீகனும், ஜகத்காரணனும், ஸர்வாந்தர்யாமியும்[7] மோக்ஷப்ரதனும், என்கிற இவைமுதலான மகிமைகளும் வேதத்தில் தெரியவருமென்று காணுதலால், தானறியவேண்டுவதெல்லாமறிந்து மற்றும் மஹிமைகள் உண்டென்று இருக்கவேண்டுமென்பது உறுதிப்பட்டது.

மத்ஸ்யாதிரூபத்தில் பிறந்தானெனில்—துஷ்ட நிக்ரஹ சிஷ்டபரிபாலன தர்மஸ்தாபனார்த்தமாய்[8] தனதிச்சை

---

5. அப்ராக்ருத சரீரம்—மாயையென்கிற மூலப்ரக்ருதியின் பரிணாமமானப்ருதிவ்யாதி பஞ்ச பூதங்களினால் உண்டாகாத சரீரம்.

6. ஹேயம்—தோஷம்.

7. ஸர்வாந்தர்யாமி—ஸர்வத்துக்கும் தான் ப்ரகாரியாய் தனக்குப்ரகார்யந்தரமில்லாதபடியிருக்கை.

8. துஷ்ட நிக்ரஹ சிஷ்டபரிபாலன, தர்மஸமஸ்தாபனார்த்தம்—தன்னுடைய வனுபவமொழியக்ஷண காலமும்

யால் மனுஷ்யர் முதலான ஆகாரத்தில் தோற்றுவனென்றும் தெரியவருவதால் கர்மத்திற்கு அதீனமில்லாமல் லோகாநுக்ரகார்த்தமென்று[9] விளக்கமாயிற்று.

இப்படி விரோதமில்லாமல் ஸகல வேதார்த்தங்களையும் ஒன்றுபடுத்தி அறிந்தவர் உன்னை ஸர்வாச்சர்யமயனென்பர். உன்னுடைய நிரூபணம் செய்ய நான் எவ்வளவு? என்னை உன் நிர்வ்யாஜமான தயாமிர்தக்கடல் பரம்பரைகளில் மிதப்பித்து லாலிக்கவும், லாலிக்கவும், அநந்ய ஜநசுலபா! ஸ்ரீயது சைலவல்லபா!

செல்லாதே தன்னைக்காணவேணுமென்று ஆசைப்பட்டிருக்கும் ஸாதுஜனங்களை தன்னுடைய ரூபசேஷ்டிதாவலோகநாராபநதான்முகேந ரக்ஷிக்கையும், தத்வவிரோதிகளான துஷ்க்ருதுக்களை நசிப்பிக்கையும், தன்னுடைய ஆராதனரூபமாய் க்ஷீணமாய் கிடக்கிற வைதிக தர்மத்தை ஆவித்யஜன தன் ஸ்வரூபத்தை தர்சிப்பித்து ஸ்தாபிக்கையுமாகிற இம்மூன்றுமே பலமென்கை.

9. லோகாநுக்ரஹார்த்தம்—அநுக்ரஹமாவது—பிறருடைய துக்கத்தைப்போக்கி இஷ்டத்தை அளிக்கும்பொருட்டு பெரியோன் சிறியோன் இடத்தில் செய்கிற இச்சை (க்ருபை).

ஏழாம் விண்ணப்பம்.

பா.— கேளாய்! உன்னுடலாயிருக்கு மென்பதனால் பிரபஞ்சமெல்லாம் உண்மையானது என்று யதுசைலபாலகனுக்கு சத்தியப்பிரியன் வச்யப்பட்டு பக்தியுடன் விண்ணப்பம் ஸமர்ப்பித்தான்.

ஸமஸ்த சிதசித்வஸ்து சரீரகா! பிரபஞ்சமெல்லாம் உனக்கு உடலாயும், நீ இந்த ஜகத்திற்கு பரமாத்மனாயும் (உலகம் அவனை உள்ளுயிராய்க்கொண்டது) இருப்பதனால் பிரபஞ்சமெல்லாம் நீயேயோர்வனல்லாமல் வேறில்லையென்று வேதசாஸ்திரங்கள் சொல்லும். அதன் உண்மையை அறியாமல் சிலர் மயங்கி ஜகத்திற்கும் உனக்கும் ஸ்வரூபபேதமில்லை என்று சொல்லுவர். அவர்கள் சொல்லும் வசனங்களெல்லாம் யுக்திக்கு விரோதமாய் இருக்குமவை. அதெங்ஙனேயென்னில்:—லோகத்தில் வஸ்துரூபமிரண்டா யிருந்து இரண்டின் ஆகாரகுணங்கள் ஒன்றாய் இருந்தால், அந்த ஒரே வஸ்துவைக்கொண்டு இதற்கும் இதற்கும் பேதமில்லையென்று புத்திமான்கள் சொல்லுவர்.

ப்ரம்ஹத்திற்கும் ப்ரபஞ்சத்திற்கும் பேதமில்லையென்பவன் இந்த ப்ரபஞ்சமே ப்ரஹ்மம் என்றால் வேறு ப்ரபஞ்சமில்லை என்ற சூன்யவாதியாவன்; ப்ரம்ஹமே ப்ரபஞ்சம் என்று சொன்னால் ப்ரம்ஹம் ஒன்றன்றி வேறொன்றுமில்லை என்று சொல்லும் தானும், தன்வசனமும், தனக்குபதேசித்த குருவும், அந்த குரு அத்யயனம்செய்த வேதாந்தமும் இல்லையென்பதால் நாஸ்திகவாதியாவான்.

இப்படிக்கு சுத்தாத்வைதம் சாஸ்திரவிருத்தமாயி ருந்தாலும் உன் கடாக்ஷத்திற்குப் பாத்திரமாகாத மனுஷ்யர் இந்த பக்ஷத்தை அங்கிகரித்து உன்னுடையஜ்ஞான,[1] பல,[2] ஐச்வர்ய,[3] வீர்ய,[4] சக்தி,[5] தேஜஸ்,[6] ஸௌசீல்ய,[7] வாத்ஸல்ய,[8] மார்தவ,[9] ஆர்ஜவ,[10] ஸௌஹார்த,[11] ஸாம்ய[12] காருண்ய,[13] மாதுர்ய,[14] காம்பீர்ய,[15] ஔதார்ய,[16] சாதுர்ய,[17] ஸ்தைர்ய,[18] தைர்ய,[19] சௌர்ய,[20] பராக்ரம,[21] ஸத்யகாம,[22] ஸத்யஸங்கல்ப,[23] க்ருதித்வ,[24] க்ருதஜ்ஞதா,[25]

---

1. ஜ்ஞாநமாவது—ஈஸ்வரஜ்ஞானமாகிறது, ஸர்வகாலமும் ஸர்வஸ்துக்களையும் யுகபதேவஸாக்ஷாத்கரிக்கும் சாமர்த்யம்; அதாவது, விஷமஸ்ருஷ்டியிலே கர்மீபவித்திருந்துள்ள அஸங்க்யாதமான ஆத்மாக்களுடைய ஸ்வரூப பேதத்தையும் நாமபேதத்தையும் ஸாக்ஷாத்கரிக்கும் சக்தி.

நிரதிசயக்ஞாநம்—அடிமைக்குறுப்பான அஸங்குசித க்ஞானம்.

என்றுமொக்க ஸர்வவிஷய ப்ரகாஶகமுமாய். ஸர்வ ப்ரகாஶமுமான குணவிசேஷம். சேதனருடைய ஹிதா zஹித நிரூபணத்துக்கு உறுப்பானகுணம் தந்தாமுடைய ஹிதா zஹித நிரூபணத்தில் அறிவில்லாதவர்களுக்காகை யாலே, ஜ்ஞாநம், அஜ்ஞர்க்காயிருக்கும்.

2. பலமாவது—ஸ்ருஷ்டமான ஸகல பதார்த்தங்களையும் ஸ்வஸங்கல்ப ஸஹஸ்ரைகதேசத்தாலே தரிக்கும் தாரண சாமர்த்யம் ஜகத்காரண ப்ரயுக்தமான ஶ்ரமமின்றி

யிலே யொழிகையாதல், உபயவிபூதியையும் அக்லேசேன ஸஹிக்கவல்லமிடுக்கு.

3. ஐஶ்வர்யமாவது—த்ருதரான ஸர்வாத்மாக்களையும் கர்மானுகூலமாக நியமிக்கும் நியமன சாமர்த்யம், தரித்த ஜகத்தை தன் தொடைக்கீழே அமுக்கி யாளவல்லனான நியந்த்ருத்வம், அர்த்திகள் அர்த்தித்தவையெல்லாம் கொடுக்கும்படியான அடியுடைமை, கர்த்ருத்வ லக்ஷணமான ஸ்வாதந்த்ர்யமாதல்.

4. வீர்யமாவது—ஜகத்தாரண நியமனங்களாலே சாரீரமான ஸமான ஸர்வ க்லேசங்களுமின்றியிலே யிருக்கை. ஸர்வத்தையும் தரித்து நியமித்துப் போராநின்றால் புருவம் வேராத அநாயாஸம். எல்லாவற்றையும் உண்டாக்காநின்றால் தான் அவிக்ருதனாயிருக்கமவிகாரதை யென்னவுமாம் ஜகதுபாதாநமாக நிற்கச்செய்தேயும் ஸ்வரூப விகாரமின்றியிலே யொழியும்படியான அவிகாரதை.

5. சக்தியாவது—ஏறிட்டுக்கொண்டதொரு கார்யம் தகைவுபடாதபடி செய்து தலைக்கட்டவற்றான சாமர்த்யம். ப்ரவர்த்திப்பிக்கும் ப்ரவர்த்யுன்முகரான சேதனருக்கு சக்தியைக்கொடுத்து ப்ரவர்திப்பிக்கும் ப்ரவர்தகத்வ சாமர்த்யம், ஜகதுபாதான சக்தியென்னவுமாம்.

ஜகத் ப்ரக்ருதி பாவமாதல், அகடிதகடநா ஸாமர்த்யமாதல், ஸ்வேஷ்டாநிஷ்ட ப்ராப்தி பரிஹாரங்களில் அஶக்தராயிருக்குமவர்களுடைய கார்யஸித்திக்கு உறுப்பாயிருக்குமென்கை, ஶக்தி அஶக்தர்க்காயிருக்கும்.

6. தேஜஸ்ஸாவது—ஸஹகாரிநைரபேக்ஷ்யமாதல், பராபிபவந சாமர்த்யமாதல்.

வ்யாபாராந்தர நிரபேக்ஷமாக அவன் பேர் சொன்னபோதே எதிரிகள் குலையும்படியான மதிப்பு. இத்தால் பஹுயத்ந ஸாத்யமானதை அல்பயத்நத்தாலே தலைக்கட்ட வல்லவனென்றபடி. அன்றியிலே, வீர்யசக்தியாதிகளால் பிறக்கும் புகழ்களாகவுமாம்.

ஜ்ஞாநாதிகளாறும் ஸர்வவிஷயங்கள். இப்படி ஸர்வோத்க்ருஷ்டனானவனுக்கு இனி பன்னிரண்டுகுணம் ஆஸ்ரித விஷயம்.

7. ஸௌசீல்யமாவது—உயர்ந்ததான் தாழ்ந்தவர்களோடு வந்து கலவாநின்றால் "இவன் நம்முடையான்" என்று புரையறக்கலக்கலாம்படி யிருக்கை.

பெரியன் தாழ்ந்தவர்களோடு புரையறக்கலக்கும் ஸ்வபாவம் தங்களுடைய தண்மையை யநுஸந்தித்திருப்பார்க்கு உறுப்பாய் இருக்கும்.

தண்மைபாராதே புரையறக்கலக்க வேண்டுவது—தாழ்ந்தவர் விஷயத்திலே யாகையாலே, சீலம்—மந்தர்க்காயிருக்கும்.

குஹப்பெருமாள், சபரிமுதலானோரிடங்களில் இக்குணம் மிகவிளங்கிற்று.

8. வாத்ஸல்யமாவது—ஆஸ்ரிதகதமான தோஷமும் குணமாய் தோற்றும் ப்ரேமம். அதாவது—ஆஸ்ரிதருடைய தோஷத்தைத் தன்பேறாகப் போக்கி ஸ்வகுணங்களாலே தரிப்பிக்கை. அதாவது.

அன்றீன்ற கன்றினுடம்பின் வழுவை யாதரித்து புஜி க்கும் தேநுவைப்போலே ஆஶ்ரிதருடைய தோஷங்களைப் போக்கியமாகக் கொள்ளுவதொருகுணம். அவித்யாகர் மாதிதோஷஸஹிதராகத்தங்களை யநுஸந்திப்பார்க்கு உறுப் பாயிருக்குமென்கை. தோஷத்தை போக்கியமாகக் கொள்ளவேண்டுவது—தோஷவான்களுக்காகையாலே, வாத்ஸல் யம் ஸதோஷர்க்காயிருக்கும்.

9. மார்தவமாவது—ஆஶ்ரித விரஹம் பொறுக்கமாட் டாத மேன்மையாகையாலே, தன்னுடைய விஶ்லேஷத் தில் பயமுடையவர்களுக்கு உறுப்பாயிருக்குமென்று விர ஹம்பொறுத மேன்மைவேண்டுவது—விரஹத்துக்கு அஞ்சுவார் திறத்திலாகையாலே, மார்தவம்—விஶ்லேஷ பீருக்களுக்காயிருக்கை,

10. ஆர்ஜவமாவது—ஆஸ்ரித சம்ஸ்லேஷத்தில் தம்மு டைய மனோவாக்காயங்கள் ஏகரூபமாயிருக்கை. அதாவது அவர்களுக்குத் தன்னை நியமித்துக்கொடுக்கை. கரண த்ர யத்தாலும் செவ்வியனாயிருக்கை யாகையாலே, தங்களு டைய கரணத்ரய கௌடில்யத்தை நினைத்திருப்பார்க்கு உறுப்பாயிருக்குமென்கை. கரணத்ரயத்தாலும் செவ்விய னாய்க்கொண்டு தன்னையமைத்துப் பரிமாறவேண்டுவது— செவ்வைக்கேடாம் விஷயத்திலாகையாலே, ஆர்ஜவம்— குடிலவர்க்காயிருக்கும்.

11. ஸௌஹார்த்தமாவது—ஆஶ்ரிதருடைய ஸந்நிதி யோடு அஸந்நிதியோடு வாசியற அவர்களுடைய ஸர்வமங் களத்தையும் அன்வேஷியாநிற்கை எப்போதும் நன்மை

யைச் சிந்தித்திருக்கும் ஸ்வபாவமாகையாலே, ஸர்வகால மும் தீமையையே சிந்தித்திருக்கும் துஷ்ட ஹ்ருதயராகத் தங்களை யநுஸந்தித்திருப்பார்க்கு உறுப்பாயிருக்கும் அதாவது—தானெப்போதும் நன்மை சிந்திக்கவேண்டுவது தந்தாமுக்குத்தீமைகளைச் சிந்திக்கும் நீமனத்தர் விஷயத்திலாகையாலே, ஸௌஹார்தம்—துஷ்ட ஹ்ருதயர்க்காயிருக்கும்.

12. ஸாம்யமாவது—ஜாதிகுண வ்ருத்தாதிகளாலுண்டான தாழ்வேற்றங்களைப் பாராதே ஆபிமுக்யமே ஹேதுவாக ஆச்ரயணீயத்வே ஸமனாயிருக்கை.

"ஜாதியாலும் குணத்தாலும் நடவடிக்கையாலும் வெவ்வேறுபட்டவர்களிடத்திலும் ரக்ஷணத்தில் வாசியின்றி ஸமமாக பொருந்துமவன்."

13. காருண்யமாவது—ஸ்வார்த்த நிரபேக்ஷமாகப் பரது:கஸஹிஷ்ணுத்வம்.

க்ருபையாவது—பரது:காஸஹிஷ்ணுத்வ மாகையாலே, 'ஆவாரார்த்துணை யென்றலை நீர்க்கடலுளழுந்தும் நாவாய்போல்' பிறவிக்கடலுள் நின்று துளங்குமுதலான துக்கமுடையவர்களுக்கு உறுப்பாயிருக்குமென்கை ஐயோவென்று இரங்கவேண்டியது—நோவுபட்டவர்க்காகையாலே, க்ருபை—துக்கிகளுக்காயிருக்கும்.

14. மாதுர்யமாவது—ஸ்வரூபரூபகுண விபூதிகளாலே ஸர்வதோமுகமான ஸாரஸ்யம்.

அநாதிகாலமே பிடித்துக்கொளுத்திக் கிடக்கிற ப்ராக்ருத விஷயங்களை விஸ்மரிக்கும்படி ஸர்வாவஸ்தையிலும் இனியனாகிறது.

"மதுரமான பேச்சுகளைப்பேசி அடியவர்களை இனிமைப்படுத்துமவன் என்றும்; ஆச்ரிதர்கட்குப் பரமபோக்கியமான திருமேனியை யுடையவன். ஒவ்வொருவருடைய ருசி ஒவ்வொருவகையாக இருந்தாலும் அவரவர்கள் நின்ற நின்ற நிலைகளிலே எல்லார்க்கும் இனியனாயிருப்பவனென்க."

15. காம்பீர்யமாவது—ஆச்ரிதர்க்குச் செய்ய நினைத்திருக்குமவை ஒருவரால் பரிச்சேதிக்க வொண்ணாதிருக்கை. அதாகிறது—தன்னுடைய கொடையின் சீர்மையையும் கொள்ளுகிறவன் சிறுமையையும் பாராதே யிருக்கையும், எல்லாம் செய்தாலும் ஒன்றும் செய்யாதானாயிருக்கை.

16. ஔதார்யமாவது—ஆச்ரிதருடைய அபேக்ஷிதங்களைத் தானிருந்து கொடுக்கை.

தங்களுடைமையை தாங்கள் விநியோகங்கொள்ளுமா போலே விநியோகங்கொள்ளலாம்படி, ஆத்ம ஆத்மீயங்களை ஆச்ரிதர்க்குக் கொடுக்கிறது. கொடுத்தோமென்னு மபிமானம் தன்னெஞ்சிலில்லாதபடியாகவும், கொள்ளுமவர்களுக்கு ப்ரத்யுபகாரந்தேடி நெஞ்சாறல்பட வேண்டாதபடியாகவும் கொடுக்கும் பரமோதாரனாகையாலேயிறே.

17. சாதுர்யமாவது—ஆச்ரிதருடைய தோஷங்களை புருஷகாரபூதையான பிராட்டி யறியாதபடி மறைக்கை.

ஆச்ரிதர் தன்னுடைய ரக்ஷணத்திலே அதிசங்கைபண்ணி ஞல் அவ்வதிசங்கையைப்போக்கி ரக்ஷிக்கையென்னவுமாம்.

ஆச்ரிதர்செய்த குற்றங்களைக் கண்டிருக்கச்செய்தே யும் திருவுள்ளத்தால் நினையாதிருக்கிறது. ஆச்ரித தோ ஷங்களைத் தெரியாதபடி மறைக்கவல்ல சதுரதையாலே யிறே.

18. ஸ்த்தைர்யமாவது—ப்ரத்யூஹ சதங்களுண்டான லும் ஆச்ரித ரக்ஷண ப்ரதிஜ்ஞையில் குறையாதொழிகை. பெரியபிராட்டியார் குற்றங்களைக் காட்டினலும் மறுதலி த்து நிஸ்சலனய் நின்று ரக்ஷிக்கிறது ஸ்த்திர ஸ்வாபாவ தைகயாலேயிறே. ஆச்ரிதர் விஷயத்திலே பிடித்தபிடி விடாதவன். ஆச்ரிதர்களுடைய அபராதங்களைக்கண்டும் திருவுள்ளம் சீறிக் கைவிடாதவன்.

அனந்தரம் மூன்று குணம் ஆச்ரிதப்ராதிபக்ஷ விஷயம்.

19. தைர்யமாவது—எதிரியை மதியாதொழிகை. லங் கையிலே ராவணனும் பலமுமெல்லாம் குறியழியாதிருக்கச் செய்தே அவன் தம்பியைக் கடற்கரையிலே லங்கா ராஜ்யத் துக்கு ராஜாவாக அபிஷேகத்தைப் பண்ணுவிக்கை மூல பலம் ஸங்ஹதமானவன்று பெருமாளுடைய திருவுள்ளம் பூர்வக்ஷணத்திற் காட்டில் ஒரு விக்ருதியன்றியிலே யிருந்த படியைச்சொல்லிற்றுகவுமாம்.

20. சௌர்யமாவது—பரபலத்திலே சென்று புகும் போது ஸ்வபலம்போலே சென்று புகுகையும் ப்ரஹர்தா வாகையும்.

21. பராக்ரமமாவது—சாரிகை வரும்போது கையும் வில்லுமாய் ஸஞ்சரிக்கும் ஸஞ்சாரத்திலே எதிரிகள் துவக்குண்டு சத்ருவென்றறிய மாட்டாதபடி ஸஞ்சரிக்கை.

ஆஶ்ரிதவிஷயமாயும் உபேய விஷயமாயும் உபாய விஷயமாயுமிருக்கும் நாலு குணங்களும் சொல்லுகிறது.

22. ஸத்யகாமமாவது—நித்யமான காம்யங்களையுடையவனென்றபடி. அதாவது—ஆஶ்ரிதர்க்கநுபாவ்யமான குணங்களையும் விபூதியையும் சொல்லுகிறது. ஆச்ரித ரக்ஷணவிஷயமான மநோரதம் காமமென்கிறது. அது—அப்ரதிஹதமாயிருக்கை யென்றுமாம்.

ஆச்ரிதர்க்கநுபாவ்யமான வழியிலே தனக்கும் இனிதான குண விபூதியைச்சொல்லிற்று. லீலார்த்தமாக ப்ரக்ருதி புருஷகாலங்களை ஸ்பரஹாவிஷயமாகவுடையவனென்கைக்காக—ஆச்ரயிக்குமிடத்தில் இவனிட்டது கொண்டு வயிறுநிறைய வேண்டாதபடி அவாப்தஸமஸ்த காமதயா வந்த பூர்த்தியுடையனென்கைக்காக—இத்தால் அகிஞ்சனனவென் கார்யம் பூர்ணனவனுக்கு பரமன்றே என்கிறார்.

ஸத்யகாம—நித்யமான காமங்களை யுடையவனானவனே! இத்தால் ஆச்ரிதருடைய அபேக்ஷிதங்களைக் கொடுக்கைக்கடியான அவாப்த ஸமஸ்த காமத்வம் சொல்லுகிறது.

ஸத்யகாமனாகையாவது—ஸாந்தீபினி புத்திரனைக் கொண்டுவந்தாப்போலே ஸகலாபேக்ஷிதங்களும் முடிக்க வல்லவனாகை,

23. ஸத்யஸங்கல்பமாவது—அபூர்வமான போக்யங்களை ஸங்கல்பித்து அநுபவிக்குமிடத்தில் அமோகமாயிருக்கை "காருணவாராய்" என்றிருக்குமவர்களுக்குக் கண்ணாலே கண்டனுபவிப்பிக்கைக்கு தேவமனுஷ்யாத்யவதார ஸங்கல்பம் அப்ரதிஹதமா யிருக்குமென்றுமாம்.

அபூர்வமான போக்யங்களை அமோகமாக ஸ்ருஷ்டிக்க க்ஷமனென்கை—லீலைக்கு ஹேதுவான ஸங்கல்ப மாத்ரத்தாலே கர்த்தும் க்ஷமனென்கைக்காக, இத்தால் நித்யஸம்ஸாரியான என்னையும் நித்யஸூரிகளோடு ஒரு கோர்வையாக்க நினைத்தால் செய்துமுடிக்க வல்லனல்லையோ நீ யென்கிறார்.

ஸத்யஸங்கல்ப—அமோகஸங்கல்ப. அபூர்வங்களை ஸங்கல்பித்துக்கொடுக்குமிடத்தில் அவை தப்பாதிருக்கை.

ஸத்யஸங்கல்பனுகையாவது—த்ருவபதம்போலே பண்டில்லாதவற்றையு முண்டாக்கவல்லவனுகை.

24. க்ருதித்வமாவது——ஆச்ரிதர்கார்யம் தலைகட்டினால், அவர்கள் க்ருதக்ருத்யராகையன்றிக்கே தான் க்ருதக்ருத்யனுகிறது—ஆச்ரித ரக்ஷணம்பெற்றால் பேறுதன்னதாயிருக்கும். ஸ்வபாவத்தாலேயிறே.—க்ருதியாவது ஆஸ்ரிதருடைய வபேக்ஷிதம் பூர்ணமானால். தான் க்ருதக்ருத்யனுகை. ஆச்ரிதாபேக்ஷிதம் பெற்றால் லாபம் தன்னதாயிருக்கை. இவர்களுடைய கர்தவ்யங்களைத்தானேறிட்டுக்கொண்டு செய்கையென்னவுமாம்.

முதலான எண்ணரிய கல்யாணகுணங்களும் திவ்ய மங்கள விக்ரஹமும், திவ்யபூஷணம் திவ்யாயுதங்களும், திவ்யமஹிஷிவர்கமும், நித்ய முக்தரும், ஸ்ரீவைகுண்டமும், இவைகளொன்றுமில்லையென்றும், மற்றும் உன்லீலோபகரணமான பிரும்மாண்டமும், மற்றும் அதனுள்ளிருக்கும் பதினான்கு லோகங்களும்,[a] பிரமன் ருத்ரன் முதலான தேவர்களும், ஸப்தத்வீபங்களும்,[b] ஸப்தஸாகரங்களும்,[c] பர்வதங்களும்,

---

25. க்ருதஜ்ஞத்வமாவது— க்ருதஜ்ஞதையாவது— ஆச்ரிதருடைய ஸுக்ருதலவத்தை யொன்றையும் நினைத்து, தான் செய்த நன்மைகளொன்றும் பாராதே யிருக்கை.

ஒருகால் சரணமென்னு முக்தி மாத்ரத்தாலே பின்பு செய்யும் குற்றங்கள் பாராதே அத்தையே நினைத்திருக்கை. ஆச்ரிதர்க்கு எல்லாம் செய்தாலும் அத்தை மறந்து அவர்கள் செய்த ஸுக்ருத லவத்தையே நினைத்திருக்கையென்னவுமாம்—ஆச்ரித விஷயத்தில் தான் செய்த வுபகாரத்தையே நினைத்திருக்கை யென்னவுமாம்.

(a) பதினான்குலோகங்கள்—அதல, விதல, ஸுதல, ரஸாதல, தலாதல, மஹாதல, பாதாளங்களென்றும், பூ, புவ, ஸுவ, மஹர், ஜந, தப, ஸத்யமென்றும்.

(b) ஸப்தத்வீபங்கள்—ஜம்பூ, ப்லக்ஷ, குச, க்ரௌஞ்ச, சாச, சால்மலி, புஷ்கர.

(c) ஸப்த ஸமுத்ரங்கள்—லவண, இக்ஷு, ஸுரா, ஸர்பி, ததி, க்ஷீர, சுத்த ஜலம்.

நதிகளும், தேசங்களும், கிராமங்களும், தன்னை ஈன்ற தாய், தந்தையரும், தானுமில்லையென்றும், இல்லாத வேதாந்தத்திலிருந்தே இவை யெல்லாவற்றையு மறிந்தோமென்றும் இம்முறையில் உன்னுடைய நித்ய விபூதியையும் (ஸ்ரீவைகுண்டம்) லீலாவிபூதியையும் (பிரம்மாண்டம்) இல்லையென்று அபலாபனம் செய்வர்.

இவற்றுள் நீ நிலைத்திருப்பது எப்படியோ! அது அவ்வாறிருக்கட்டும். உன்னையே உயிர்நிலையாய் நம்பி உன்னுடைய கடாக்ஷத்தைப்பெற்ற உத்தமர் (மஹாத்மர்) ஸகல வேதசாஸ்திரங்களுக்கும் ஏற்றதாயும் யுக்தியுக்தமாயும் உள்ள விசிஷ்டாத்வைத சாஸ்திரத்தை அங்கிகரித்திருப்பர். அதெங்ஙனேயென்னில்:—ஒருவன் உடலில் பிருத்வீமுதலான தத்வங்கள்,[d] இருபத்துநான்கும், ஜீவாத்மனும், அந்தர்யாமியான நீயும் சேர்ந்து இருபத்தாறுதத்வங்களிருந்தாலும் மனுஷ்யன் ஒருவன் இருக்கும்படி, இந்த சேதன சேதனங்களனைத்தும், வேறாயிருந்தாலும் உன்னுடைய சரீரமாகிறதினால் நீயோர்வனே யென்பது யுக்தம். இந்த தத்வஞானம் என் மனதில் நிலைபெறும்படி நீ க்ருபைசெய்தருளவேணும், அநந்யஜன ஸுலபா! ஸ்ரீயது சைலவல்லபா!

(d) தத்வங்கள்—ப்ருக்ருதி, மஹான், அஹங்காரம், சப்ததந்மாத்ரம், ஸ்பர்சதந்மாத்ரம், ரூபதந்மாத்ரம், ரஸதந்மாத்ரம், கந்ததந்மாத்ரம், ஆகாசம், வாயு, தேஜஸ்ஸு, ஜலம், பூமி, மனஸ்ஸு, ச்ரோத்ர, த்வக், சக்ஷுர், ஜிஹ்வா, க்ராணம், வாக்பாணி, பாதபாயூபஸ்தம்—என்கிற இருபத்துநான்கு தத்வங்கள்.

எட்டாம் விண்ணப்பம்.

பா— கனவில் பார்க்கும் வஸ்துக்களெல்லாம் நீ ஸ்ருஷ்டித்ததனாலேயே, நிச்சயம் என்று ஒப்புரவாக்கி மலையகர் வெற்றியாளன் அஸுராரி திருவடியில் விண்ணப்பம்செய்தான்.

அகடித கடனாஸமர்த்தா[1]! மானிடர்க்கு ஜாகர ஸ்வப்ந ஸுஷுப்தியென்று மூன்று அவஸ்தையுண்டு. அவைகளில் ஸுஷுப்தியென்கிறது நித்ரை, ஸ்வப்பனமென்கிறது கனா, ஜாகரமென்பது விழிப்பு. நித்ரையில் ஜீவாத்மன் பரமாத்மாவானஉன்னுள் அழுங்கி ஜ்ஞாநேந்திரிய[2] வ்யாபாரம் அழிந்திருப்பதால் புறம்பும் உள்ளும் தன்னறிவில்லாமலிருக்கும். விழிப்பிலும்கனாவிலும் தன்னறிவு உண்டாயிருக்கும். ஜாகரத்தில் காண்கிறவஸ்துக்களை நீ ஸ்ருஷ்டிக்ரமத்தில் உண்டுபண்ணுவதால் இந்தவஸ்து இதிலிருந்து பிறக்கும் இதற்கு இந்த பெயர், இந்த ஆகாரம், இந்தகுணம் இதனாலாகும் கார்யமிது இந்தவஸ்து இவ்வளவுகாலம் இருக்குமென்று அளவுபட்டிருக்கும். இருக்கும் காலத்தில் எல்லாருக்கும் தெரியவரும். கனவில் காணும் வஸ்துக்களை நீ அந்தந்த காலத்தில் ஸங்கல்பமாத்ரத்திலிருந்தே உண்டுபண்ணுவ

---

1. அகடிதகடனாஸாமர்த்யம்—சேராதவஸ்த்துக்களைச் சேர்ப்பிக்கத்தகுந்தவல்லமை.

2. ஜ்ஞாநேந்திரியங்கள்—ச்ரோத்ரம், த்வக், சக்ஷுர், ஜிஹ்வாக்ராணம்,

தால் இந்தவஸ்து இதிலிருந்து பிறக்குமென்றும், இதற்கு இதுவே ஆகாரம் இதுவே குணம் இதுவேகார்யம் என்றிவை முதலான பரிமாண மொன்றுமில்லாமல் விசித்ரமாய் உன்னுடைய ஸங்கல்பமிருந்தபடி யிருக்கும். அந்தக்காலத்தில் கனவைக்காணுமோர்வனுக்குக் காணுமன்றி மீதி ஒருவருக்கும் காணமாட்டாது. இப்படி விழிப்பில் (ஜாகரத்தில்) காணப்படும் வஸ்து எல்லோருக்கும் காணப்பட்டும் ஸ்திரமாயும் இருக்கும், கனவில் காணும் வஸ்து ஒருவனுக்கு கண்டுக் கொண்டு விழித்தவுடனே போவதனால் அநித்யமா யிருக்கும் உலகநடை யிப்படி இருந்தாலும் நீ ஒருவரில் தயைசெய்து வரையறுத்துக்காண்பிப்பாய் அதெப்படியெனில் முன்பு கோகுலத்தில் பலபத்ரன்கோள் வார்த்தையைக்கேட்டு மண்ணைச் சாப்பிடாதிரு என்று பயப்படுத்தும் யசோதைக்கு உன்சிறிய செவ்வாய்திறந்து பதினாலுலகங்களையும் யாருக்கும் தெரியாதபடி காண்பித்தாய். அப்படியே இரண்டு சைன்யத்துக்கும் நடுவில் அர்ஜுனனுக்கு யாருமறியாதபடி விஸ்வரூபத்தைக் காண்பித்தாய். பின்னையும், ஸைந்தவனைக்கொல்வித்து அர்ஜுனனை ரட்சிக்கவேணுமென்ற எண்ணத்துடன் குருக்ஷேத்ரத்தில் பகலில் இருட்டையுண்டுபண்ணினாய். மேலும் கங்கையில் முழுகின ஸுசரித[3] னென்ற பார்ப்பானைகல்யாணி தீர்த்தத்தின்நடுவே எழுப்பினாய். இப்படிபரோட்சமல்லாமல் ஸாட்சாத்காரமாய் எனக்குக்கனவில் நீ க்ருபைசெய்த நந்தமென்றும் பெயர் பெற்ற உத்தமமான ஒரு கத்தியைக்

---

3. ஸுசரிதன்—இவன் வரலாற்றை யாதவகிரிமாஹாத்ம்யத்தில் காணலாம்.

கனவு பார்த்ததைப்போல அந்தக்காலத்தில் மாத்திரம் அனுபவிக்கத்தக்கதல்லாமல் நித்யமெனப்பட்டு விழிப்புடனிருக்கையில் எல்லோருக்கும் கண்டுகொண்டு, நீ ஈந்த மஹிமையினால் ஒரே அடியில் விழுந்து முற்றுகைபோட்ட நாலுதிசைப்பகைவர் மொத்தத்தையும் கத்தரித்து, வெற்றியைக்கொண்ட என்னை உன்னுடைய கைங்கர்யத்தில் அர்ஹனாம்படி ஆட்கொண்டாய். உன்னுடையதிவ்யாத்புத குணஸாகரத்தில் வேதங்களும், பிரமன்முதலானவர்களும் ஒருதுளிக்கும் ஸமமாகமாட்டார் நான்எவ்வளவு; உன் மகிமைக் கடலைவர்ணிப்பதென்று பிரயத்னம் செய்த என்ஸாஹஸத்தைப்பொறுத்து உன்னவனென்று ஆநந்தப்படுத்துவது ஆநந்தப்படுத்துவது. அநந்யஜனஸுலபா! ஸ்ரீயதுசைலவல்லபா!

ஒன்பதாம் விண்ணப்பம்.

பா— நியமித்த கர்மகதியை அனுசரித்தே ஸ்ருஷ்டிசெய்யும் நீ, ஸர்வஸமனென்பது திண்ணம். என்று ஸௌரியிடம் லோகைகவீரன் விண்ணப்பத்தை மிகுதியாகச் சொன்னான்.

ஸகலலோக நியாமகா[1]! நீ இந்த ஸம்ஸாரத்தில் ஒரோர்வனுக்குப் பட்டாபிஷேகாதி சுகத்தையும், ஒரோர்வனுக்கு சிரச்சேதனாதி துக்கத்தையும், உண்டுபண்ணுவதினால் விஷமனென்றும்,[2] கர்மானுகுணமான பலத்தைக் கொடுப்பதனால் கர்மத்திற்கு பரதந்த்ரனென்றும்[3], பாபி

1. ஸகலலோக நியாமகன்—"அந்தராத்மதயா நின்று நியமிக்கை, ஈச்வரனுக்கு ஸர்வாதீநமாகையாலே, சரீரத்தினுடைய சகல ப்ரவ்ருத்திகளும் சரீரியினுடைய புத்யதீநமாக உண்டாமாப்போலே, சரீர பூதமான ஸகல லோகங்களுடைய ஸகல வ்யாபாரங்களும் சரீரியானபரமாத்மாவினுடைய புத்யதீநமாகவேயுண்டாம்படி யிருக்கையென்றபடி."

2. விஷமஸ்ருஷ்டி—"தேவதிர்யக்காதிரூபேண, சிலஸுகோத்தரமாகவும், சில து:கோத்தரமாகவும், சிலஸுகதுக்க மிஸ்ரமாகவும், ஸ்ருஷ்டிக்கை. ஜீவபேதமும் கர்மதாரதம்யமுமிறே விஷமஸ்ருஷ்டிக்குஹேது"

3. கர்மபரதந்த்ரன்—"அஸங்குசித ஜ்ஞானசக்திகளைக் கொண்டு தான் நினைத்தபடி யொன்றும் செய்யக்ஷமனல்லாதபடி கர்மாதீநனுமாய், ஆஸக்தியாய்க்கொண்டு ஜகத்வ்யாபாரத்திலே மூளுகைக்கு யோக்யதை யில்லாதபடி துக்கியுமாயிருக்கை."

கள் படும் துக்கத்தைப் போக்கடிக்காமல் பார்த்துக்கொண் டிருப்பதால் நிர்த்தயனென்றும், சிற்றறிவுள்ளவர்களுக்குத் தோன்றும். இதின் நிலைமையை விசாரஞ்செய்ய, நீ ஆட்சி செய்யுமவனாதலால் உன் ப்ரஜைகளெனப்படும் ஜீவன்களெ ல்லாரிலும், ஸமபுத்தியுடன், எல்லாரும் உன்னுடையமனம் வந்தபடி கைங்கர்யத்தைச் செய்து வாழவேணுமென்றெ ண்ணி, இப்படி யிப்படி நடப்பவர்களுக்கு மோட்சமென் றும், இப்பிப்படி நடப்பவர்களுக்கு இஹபரஸௌக்யமென் றும்[8], எல்லையிட்டு, அந்த எல்லையில் யார் யார் எந்த வகை யில் நடப்பரோ அவர்கட்கு அந்த எல்லையிட்ட பலத்தைத் தப்பாமல் கொடுக்கிறதினால் நீ ஸர்வஸமன்[5]. உனக்கு ஒரு வரிலும் வைஷம்யமில்லை[6]. இப்படி அவரவர் கர்மானுகுண மாய் பலன்களைக்கொடுக்கும் நீ ஸ்வதந்த்ரனன்றி[4] பரதந்த்ர

4. ஸ்வதந்த்ரன்— “ அவிஜ்யாதி தோஷ ப்ரதிபடமாய். தனக்கொரு நியாமகரின்றிக்கே யிருப்பானொருவனுகையா லே, தன்னிச்சையொழிய ஹேத்வந்தரமில்லை யென்றபடி.”

5 ஸர்வஸமன்—“ த்ரிவித சேதநாசேதநங்களிடத்தில் வ்யாபகத்வ, தாரகத்வ, ஆச்ரயணீயத்வ, ரக்ஷகத்வ, மோ க்ஷப்ரதத்வங்களில் ஸாம்யத்தைச்சொல்லுகிற திக்கன்று ஸர்வவிநியோக ஸாம்யம் சொல்லுகிறதன்று.”

[பரகாலநல்லான் ரஹஸ்யம்—p. p.-16-20-பார்க்கவும்]

“ அவரவர்களுடைய கருமங்களுக்குத் தக்கபடி விஷ மஸ்ருஷ்டிகள் விளைகின்றபடியால் எம்பெருமானுடைய ஸர்வஸமத்திற்குக் குறையொன்றுமில்லை.”

6 வைஷம்யம் — சமமின்மை.

7. நிக்ரஹாநுக்ரஹம்—தண்டனை-க்ருபை (வெகுமானம்) (அரசன்பரமான அருத்தம்.)

அ. இஹபரஸௌக்யம்—இம்மை மறுமை சௌக்கியம்.

னன்று. பாபிகளுக்குப் பாபாநுரூபமான பலத்தைக் கொடுத்துக்கொண்டும், அஜாமிளன் முதலான ஒரோர்வரில் அளவுகடந்த தயையைக் காட்டினதால் பரமதயாளுவென்னப்படுவாய். அது எப்படியென்றால்—உலகத்தில் தார்மிகனாயிருக்கும் அரசனொருவன் தன் நாட்டில் இப்படி நடப்பவனை மன்னிப்பேன், இப்படி நடப்பவர்களைத் தண்டிப்பேன் என்று முன்னமே எல்லைப்படுத்தி அந்தக்கட்டுப்பாட்டின்படி இவரிவரென்னாமல் நிக்ரஹாநுக்ரஹங்களை[7] நடத்தினால் பக்ஷபாதமின்றி ஸர்வஸமனென்பர். தான் எல்லையிட்டு எல்லையை விடாமல் நடப்பிக்கிறதினால் அவன் ஸ்வதந்த்ரனென்பர். தவறுபவர்களைத் தண்டனைசெய்யுமிடையில் எங்கானுமோரோர்வரில் தப்பிருந்தும் மன்னித்தால் தயாளுவென்பர். ஆக நீ உன் ஆக்ஞாரூபமான கர்மத்திற்கு அநுரூபமாய்ப் பலத்தைக்கொடுப்பதினால் ஸர்வஸமனும் அந்த எல்லையைத் தப்பாமல் நடத்துவதினால் ஸ்வதந்த்ரனும், ஒரோர்வன் தப்பை மன்னிப்பதினால் தயாளுவென்றும் பெரியோர்களால் கேட்டு உன்னை உயிர்நிலையாகக்கொண்டேன். என்னுடைய தப்பைச்சரிப்படுத்தி கருணிப்பது, கருணிப்பது அநன்ய ஜனாவலப! ஸ்ரீயப்த சைவெல்பா !

பத்தாம் விண்ணப்பம்.

பா——நாநாவிதமான ஜகத்திற்கு நீயே மூன்று வகைக்காரணங்களும், என்று முரவைரியின் திருவடியில் விருதாளிகளின் தலைவன் பரமானந்தத்தோடு விண்ணப்பம் செய்தான்.

ஸகலஜகதேககாரணா[1]! கார்யத்தை உண்டுபண்ணும் வஸ்து காரணமெனப்படும். அது உபாதான காரணமென்றும் நிமித்தகாரணமென்றும், ஸஹகாரிகாரண மென்றும், மூவகைப்படும். புதியதொரு காரணத்தைப்பெற்றுத்தானே கார்யமெனப்படும் வஸ்து உபாதானகாரணம்; இந்த கர்த்ரு[2] கார்யத்தை உண்டுபண்ணுவதற்கு வேண்டிய உபகரணங்கள்[3] ஸஹகாரிகாரணம், இவை யெவையென்னில் எவர்

---

1. ஸகலஜகதேககாரணா—"ஸகலஜகத்துக்கும் காரணாபூதன். ஸமஷ்டி, வ்யஷ்டி ரூபஸமஸ்தகார்யங்களுக்கும் காரணபூதன். பரமாணுவாவது, ப்ரதாநமாவது, சேதனனாவது, காரணமாகமாட்டா.

ஸங்கல்பவிசிஷ்டனைக்கொண்டு நிமித்தகாரணனாயும், நாமரூப விபாகாநர்ஹமாம்படி தன்னுடனே கூடிக்கிடக்கிற ஸூக்ஷ்ம சிதசித்விசிஷ்டனைக்கொண்டு உபாதாந காரணமாயும், ஜ்ஞாந ஶக்த்யாதி விசிஷ்டனைக்கொண்டு ஸஹகாரி காரணமாயிருக்கும். ஜகத்ரூபகார்யோத்பத்தியில் ஈச்வரனே த்ரிவிதகாரணனாயிருக்கும்."

2. கர்த்ரு—செய்வோன்.

3. உபகரணங்கள்—சாமக்கிரிகள்.

ணமயமான கடகமகுடாதி[4] கார்யத்திற்கு ஸ்வர்ணமுபாதான காரணம். சுத்தி, அடைகல், இடுக்கி, நீர், நெருப்பு, முதலியவை ஸஹகாரிகாரணம். அன்றியும் மண்மயமான சட்டி ஆல் முதலியவற்றிற்கு மண்பிண்டம் உபாதான காரணம். குலாலன் (குயவன்) நிமித்தகாரணம். சக்ரம் முதலியவை ஸஹகாரி காரணம். இப்படி உலகத்தில் பிறக்கும் கார்யமெல்லாவற்றிற்கும் மூவகைப்பட்ட காரணங்களும் வெவ்வேறாயிருக்கும். இந்த லோக மர்யாதையை மீறி ஜகத்தென்ற கார்யத்திற்கு நீ யோர்வனே மூவகைக் காரணமாயிருப்பாய். அதெங்ஙனேயென்னில் :—மஹாப்ரளயத்தில் பஞ்சமஹாபூதங்களும், பஞ்சதந்மாத்ரைகளும், ஏகாதசேந்திரியங்களும்[5], அஹங்காரதத்வமும், மஹத்தத்வமும், சேர்ந்து இருபத்து மூன்று தத்வங்களும் ப்ரக்ருதியுள் அடங்கி மற்றும் ப்ரக்ருதியும் ஜீவனென்னும் இரண்டு தத்வங்களும், பெயரும், ஆகாரமும் வேறென்னப்பட்டுத் தெரியாதபடி உன்னுள் அழுங்கி உன் உடலாயிருப்பதினால் நீயோர்வனே மிச்சமாயிருப்பாய். அந்த வேளையில் நீயே மூவகைக்காரணமாய் ஜகத்தை யுண்டுபண்ணுவதால் ஜகதேககாரணனென்பது திண்ணம். இப்படி ஸூக்ஷ்ம ப்ரக்ருதி ஜீவசரீரகனான நீ உபாதானகாரணமானாலும் புதியதொரு ஆகாரத்

---

4. கடகமகுடாதி—கைவளை, முடி முதலியவைகள்.

5. ஏகாதசேந்திரியங்கள்—ஐந்து ஜ்ஞானேந்த்ரியங்கள், ஐந்து கர்மேந்த்ரியங்கள் மற்றும் மனஸ்ஸு ஆகப்பதினொன்று.

தையுடையுமெனினும் பரிணாமதோஷம்[6] ப்ரக்ருதி மாத்திரத்திற்கன்றி உன் திவ்யாத்மஸ்வரூபத்திற்கு அன்றென்று ஸகலவேதாந்தங்களும் உனனுடைய மகிமையைப் புகழ்ந்து ஆச்சர்யப்படுகின்றன. இந்த ஜகதுத்பத்தி ஸ்திதி[7]களென்னும் உன் திவ்யாத்புத லீலைகளை வர்ணிக்கநானெவ்வளவு? உன்னவரெனப்படும் பெரியோர் பலதடவை உபதேசிக்க ஓரோர் வார்த்தையைக் கற்றுச்சொல்லும் கிளிக்குஞ்சு போன்ற என் சொல்லுக்கு சித்தத்தில் ஸந்தோஷப்படவும், அநந்யஜன ஸுலபா! ஸ்ரீயது சைலவல்லபா!

---

6. பரிணாமதோஷம்—வேறுபாடு அடைவதால் உண்டாகும் தோஷம்.

7. ஜகதுத்பத்திஸ்திதி—உலகைப்படைப்பது, காப்பது.

பதினொன்றாம் விண்ணப்பம்.

பா— ஊகித்தால் ஜீவன் புத்தி சரீரம் இவைகளிலிருந்து விலக்ஷணனென்னும் இந்த நிலைமை உண்மை என்று பௌளரிக்கு போர்வீரனென்னும் விருதுள்ளவன்தான் ப்ரீதித்து விண்ணப்பம்செய்தான்.

பரமாத்மா[1]! நீ ஸகல ஜீவாத்ம வர்க்கத்திற்கும் பெரியவனாதலால் உன்னை பரமாத்மனென்பது. ஜீவாத்ம ஸ்வரூபத்தை விசாரம் செய்யுமளவில் சரீரமே ஜீவாத்மனென்றும் ஸகலசரீரத்திலுமிருக்கும் ஜீவாத்மனொருவனே யென்றும் ஸ்வதந்த்ரனென்றும் சொல்லுவர்; இந்த பக்ஷங்களெல்லாம் யுக்திவிருத்தமாயும், சாஸ்திரவிருத்தமாயுமிருக்குமவை. அதெங்ஙனேயென்னில்:—சரீரமே ஜீவாத்மாவாகில் ம்ருதசரீரம்[2] அச்சு அழியாமலிருந்தும் ஜீவன் போச்சுதென்னும் உலக வார்த்தைகூடாது. சக்ஷுராதி

---

1. பரமாத்மா!—ஸ்ரீமந்நாராயணனே ஸர்வஸ்மாத்பரன். ஸ்தோத்ரரத்னம் ஸ்லோகங்கள் 10—18. (ரத்னடீகாவ்யாக்யானத்தையும் பார்க்கவும்.

ஆத்மாவினுடைய தேஹாதிவிலக்ஷணத்வ—"ஆத்மா தேஹாதிகளிவற்றில் வேறுபட்டு [illegible]"

(தத்வத்ரயம் சித்பிரகரணம்—[illegible]—[illegible]—ஸ்ரீமணவாள மாமுனிகள் வ்யாக்யானம் பார்க்கவும்.)

2. ம்ருத சரீரம்—பிணம்.

றையடையுமெனினும் பரிணாமதோஷம்[6] ப்ரக்ருதி மாத்திரத்திற்கன்றி உன் திவ்யாத்மஸ்வரூபத்திற்கு அன்றென்று ஸகலவேதாந்தங்களும் உனனுடைய மகிமையைப் புகழ்ந்து ஆச்சர்யப்படுகின்றன. இந்த ஜகதுத்பத்தி ஸ்திதி[7]களென்னும் உன் திவ்யாத்புத லீலைகளை வர்ணிக்கநானெவ்வளவு? உன்னவரெனப்படும் பெரியோர் பலதடவை உபதேசிக்க ஓரோர் வார்த்தையைக் கற்றுச்சொல்லும் கிளிக்குஞ்சு போன்ற என் சொல்லுக்கு சித்தத்தில் ஸந்தோஷப்பட
ஸந்தோஷப்படவும்
வும், அநந்யஜன ஸுலபா! ஸ்ரீயது சைலவல்லபா!

---

6. பரிணாமதோஷம்——வேறுபாடு அடைவதால் உண்டாகும் தோஷம்.

7. ஜகதுத்பத்திஸ்திதி——உலகைப்படைப்பது, காப்பது.

பதினொன்றாம் விண்ணப்பம்.

பா— ஊகித்தால் ஜீவன் புத்தி சரீரம் இவைகளி லிருந்து விலக்ஷணனென்றும் இந்த நிலைமை உண்மை என்று பௌரிக்கு போர்வீரனென்றும் விருதுள்ளவன்தான் ப்ரீதித்து விண்ணப்பஞ்செய்கான்.

பரமாத்மா[1]! நீ ஸகல ஜீவாத்ம வர்க்கத்திற்கும் பெரியவனாதலால் உன்னை பரமாத்மனென்பது. ஜீவாத்ம ஸ்வரூபத்தை விசாரஞ் செய்யுமளவில் சரீரமே ஜீவாத்ம னென்றும் ஸகலசரீரத்திலுமிருக்கும் ஜீவாத்மனொருவனே யென்றும் ஸ்வதந்த்ரனென்றும் சொல்லுவர்; இந்த பக்ஷங்க ளெல்லாம் யுக்திவிருத்தமாயும், சாஸ்த்ரவிருத்தமாயுமிரு க்குமவை. அதெங்ஙனேயென்னில்:—சரீரமே ஜீவாத்மா வாகில் ம்ருதசரீரம்[2] அச்சு அழியாமலிருந்தும் ஜீவன் போச்சுதென்னும் உலக வார்த்தைகூடாது. சக்ஷுராதி

---

1. பரமாத்மா!—ஸ்ரீமந்நாராயணனே ஸர்வஸ்மாத்பரன்.
ஸ்தோத்ரரத்னம் ஸ்லோகங்கள் 10—18.
(ரத்னபூஷா வ்யாக்யானத்தையும் பார்க்கவும்.

ஆத்மாவினுடைய தேஹாதி விலக்ஷணத்வ—" ஆத்மா தேஹாதிகளிவற்றில் வேறுபட்டிருப்பதொருவன் "

(தத்வத்ரயம் சித்ப்ரகரணம்—3—ம்—ஸ்ரீமணவாள மாமுனிகள் வ்யாக்யானம் பார்க்கவும்.)

2. ம்ருத சரீரம்—பிணம்.

இந்திரியங்களே ஜீவாத்மாவாகில், அந்த[a] பதிராதிகளில் ஜீவாத்மனில்லையென்று சொல்லவேணுமாகும். மனஸ்ஸும் ப்ராணவாயுவும் ஜடமாதலால்[b] ஜீவாத்மனல்ல. ஜ்ஞானமே ஜீவாத்மனாகில் தான் ஜ்ஞானமுள்ளவனெனக்கூடாது மற்றும் தான் ஜ்ஞானமென்று சொல்லவேண்டும். ஆகையால் ஜீவாத்மா சரீரபாஹ்யேந்திரியங்களிலிருந்தும்[3] மனஸ்ஸுப்ராணன் ஜ்ஞானமிவைகளிலிருந்தும் வேறாய் ஸ்வப்ரகாசமாயிருக்கும்.[4] ஸகலசரீரங்களிலும்ஜீவாத்மனொருவனேயாகில் ஒருவன்ச்ரேயஸ்ஸுக்கு மற்றொருவன்பொறாமைப்படுவதும் ஒருவனுக்கு இன்னொருவன் பகையாவதும், ஒருவனை மற்றொருவன் கொல்லுவதும்கூடாது. எல்லாரந்தரங்கத்தையும், எல்லோரும் அறியவேணுமாகும், மேலும் ஒருவனுக்கு வேதாந்த ஜ்ஞானம் பிறந்தமாத்திரத்தில் எல்லோருக்கும் முக்தியுண்டாவதால் பலரும் வேதாந்தச்ர

---

a. அந்தபதிராதிகளில்—“ அந்தன், குருடன், ரூபத்தைஸ்பரியாதொழியவேணும்; பதிரன்-செவிடன், சப்தத்தைஸ்மரியாதொழியவேணும்.

b. ஜடம்—ஜடமாவதுஸ்வயம் ப்ரகாசமன்றிக்கேயிருக்கை

3. பாஹ்யேந்திரியங்கள்—ஜ்ஞாந கர்ம ஸாதகங்களான பத்து இந்திரியங்கள்.

4. ஸ்வப்ரகாசம்.—“ தீபம் தீபாந்தர நிரபேக்ஷமாக ஸ்வவ்யவஹாரத்துக்கு ஹேதுவாகிற வோபாதி, ப்ரகாசாந்தரநிரபேக்ஷமாக ஸ்வவ்யவஹாரத்துக்கு ஹேதுவாகை.

வணம் செய்வது வ்யர்த்தமாகும். ஜீவாத்மன் ஸ்வதந்த்ரனாகில் துக்கமயமான ஸம்ஸாரத்தை அங்கீகரிக்கமாட்டான். இந்த யுக்திகளுடன் கூடின சாஸ்திர வசனங்களிலிருந்து ஜீவாத்மர் பலராய் உன் அடிமைகளாயிருப்பர். நீ, இந்த ஜீவாத்மரனைவருக்கும் தலைவனாய்ப் பரமாத்மனெனப்படுவாய். இப்படி நீ உடையவனும் நாங்கள் உடைமையுமென்னும் ஸ்வஸ்வாமி பாவஸம்பந்தத்தை இதுவரையுமறியாமல் ஸத்தொழிந்த எனக்கு நிர்வ்யாஜ தயைபுரிந்து இப்பொழுது அறிவித்து ஸ்வரூபத்தை உண்டுபண்ணின பிறகு இன்னும் ச்ரேயஸ்பரம்பரைகளை வளர்ப்பது, அநன்ய ஜனஸுலபா! ஸ்ரீயதுசைலவல்லபா!

பன்னிரண்டாம் விண்ணப்பம்.

பா— உன் இச்சைமாத்திரத்தினாலேயே ஏற்பட்டது தத்வஸ்ருஷ்டியென்று யதுசைலபாலனநிதியினுடைய திருவடித்தாமரை ஸன்னிதியில் துஷ்டநிக்ரஹம் செய்யுமவன் சொன்னான்.

பரதத்வ ஸ்வரூபா! உன்னதீனமாய் உன் சரீரமென்றிருக்கும் தத்வங்கள் ஜீவனென்றும், ப்ருக்ருதியென்றும் இரண்டாயிருக்கும். அவைகளில் ஜீவதத்வம் உன் உடைமையாய் ஜ்ஞாநாநந்தஸ்வரூபமாய்[1] நித்யமாய் இருக்கும்[2]. ப்ருக்ருதி யென்கிறது தானென்றும் தன்னிலிருந்து பிறந்த தத்வங்கள் இருபத்து மூன்றும் சேர்ந்து, இருபத்துநாலு தத்வமாயிருக்கும் அதெங்ஙனேயென்னில்:— மஹாப்ரளயத்தில் ப்ருக்ருதி உன்னுள் அடங்கியிருக்கும். அதனுள் ஸத்வரஜஸ்தமஸ்ஸென்னும் மூன்று குணங்களும்

---

1. ஜ்ஞாநாநந்தஸ்வரூபமாய்—" ஜ்ஞானத்துக்கு இருப்பிடமாயிருக்கை ஜ்ஞாநமாவது—ஸ்வஸத்தாமாத்ரத்தாலே ஸ்வாஸ்ரயத்தைப்பற்றி ஸ்வபரவ்யவஹாரத்துக்கு உடலாயிருப்பதொரு ஆத்மதர்மம். இதுக்குஆத்மா ஆஸ்ரயம்— " ஆநந்த ரூபத்வமாவது இஷ்டத்வம். அதாவது-ஸ்வபாவமே அநுகூலமாயிருக்கை.

2. நித்யமாயிருக்கும்—நித்யமாவது ஸர்வகாலவர்த்தித்வம், ஆத்மாவுக்குச் சொல்லிற ஜந்மமாவது தேஹஸம்பந்தம், மரணமாவது, தேஹவியோகமென்கை.

அதிகமில்லாமலிருக்கும். இந்த ப்ருக்ருதிக்கு மாயை[3] என்றும், அவித்யையென்றும் ப்ரதானமென்றும் பெயராயிருக்கும். இந்த ப்ருக்ருதி கீழ்புறத்திலும், எண்திசையிலும் வரம்பில்லாமல் வ்யாபித்து மேலுக்கு வைகுண்ட லோகம்வரையிலிருக்கும் இப்படி பூர்ணமாயிருக்கும் ப்ருக்ருதியினுடைய சிலவிடங்களில் ஸத்வரஜஸ்தமோ குணங்கள் ஏற்றமடைந்து மஹத்தத்வம் பிறக்கும். இப்படி ஒரே ஏற்றமாய் அதிகத்தையடைந்த மூன்றுகுணமுள்ள மஹத்தத்வத்தின் ஒரோர் இடத்தில் ஒரோர்குணங்கள்மிக்கு மற்ற இரண்டு குணங்களையும், மிதித்து மிக அதிகத்தை யடையும்; அவ்விடத்தில் ஸத்வம் அதிகமானால் ஸாத்விகமென்றும், ரஜஸ்ஸு அதிகமானால் ராஜஸமென்றும், தமஸ்ஸு அதிகமானவிடத்தில் தாமஸமென்றும், மூன்றுவகை அஹங்காரதத்வம்பிறக்கும். இதில் ஸாத்விகாஹங்காரத்தில் நின்றும் சப்தத்தை அறியும் ச்ரோத்ரமும்[4], ஸ்பர்சத்தை[5] அறியும் த்வக்கும்[6] ரூபத்தை யறியும் சக்ஷுஸ்ஸும்[7], ரஸத்தையறியும்ரஸனையும்[8], கந்தத்

---

3. மாயை :—"மாயையென்பது விசித்ரஸ்ருஷ்டியைப் பண்ணுகையாலே, அதாவது ஒன்றுபோலன்றிக்கே விஸ்மயநீயங்களான ஆச்சர்யங்களான கார்யங்களை ஜநிப்பிக்கை.

அவித்யை —" அவித்யையென்கிறது ஜ்ஞாநவிரோதியாகையாலே."

4. ஶ்ரோத்ரம்—காது.
5. ஸ்பர்ஸம்—பரிசம், தொடல், தொடுகை.
6. த்வக்—தோல், உடல்.
7. சக்ஷுஸ்—கண்
8. ரஸனை—நாக்கு.

தையறியும் க்ராணேந்திரியமென்னும்[9] ஜ்ஞானேந்திரியங்களைந்தும், மற்றும் பேசும்வாயும் குடிக்கும் கையும் நடக்கும் காலும் சரீரதர்மத்தை நடத்தும் பாயு[10]குஹ்யேந்திரியங்களென்னும்[11], கர்மேந்திரியங்களைந்தும்மற்றும் ஜ்ஞானேந்திரிய கர்மேந்திரியமிரண்டிற்கும் ஸஹாயமான மனஸ்ஸு என்னும் அந்தரிந்திரியமும் கூடி பதினொன்றாய்ப்பிறக்கும்.

தாமஸாஹங்காரத்தினின்றும் அவ்யக்தமான சப்த குணமுள்ள சப்ததந்மாத்ரம் பிறக்கும். இந்த சப்ததந்மாத்ரத்தில் நின்றே அவ்யக்தமான சப்தகுணமுள்ள ஆகாசம் பிறக்கும். இந்த ஆகாசத்துடன் கூடின சப்ததந்மாத்ரத்தினின்று அவ்யக்தமான[12] ஸ்பர்சகுணமுள்ள ஸ்பர்ச தந்மாத்ரம் பிறக்கும். இந்த ஸ்பர்ச தர்மாத்ரத்தில் நின்றே அவ்யக்தமான ஸ்பர்சகுணமுள்ள வாயு பிறக்கும். இந்த வாயுவுடன் கூடின ஸ்பர்சதர்மாத்ரத்தினின்றே அவ்யக்தமான ரூபகுணமுள்ள ரூபதந்மாத்ரம் பிறக்கும். இந்த ரூபதந்மாத்ரத்திலிருந்தே அவ்யக்தமான ரூபகுணமுள்ள தேஜஸ்ஸு பிறக்கும். இந்த தேஜஸ்ஸுடன் கூடின ரூப தந்மாத்ரத்தினின்றே அவ்யக்தமான ரஸகுணமுள்ள ரஸ தந்மாத்ரம் பிறக்கும். இந்த ரஸதந்மாத்ரத்தில் நின்றே

---

9. க்ராணம்—மூக்கு.

10. பாயு—குதம்.

11. குஹ்யேந்திரியங்கள்—உபஸ்தங்கள்.

12. அவ்யக்தமான—காணப்படாத.

அவ்யக்தமான ரஸகுணமுள்ள ஜலம் பிறக்கும். இந்த ஜலத்துடன் கூடின ரஸதந்மாத்ரத்தினின்றே அவ்யக்தமான கந்தகுணமுள்ள கந்தந்மாத்ரம் பிறக்கும். இந்தகந்ததந்மாத்ரத்தில் நின்றே அவ்யக்தமான கந்தகுணமுள்ள ப்ருதிவி பிறக்கும். ராஜஸாஹங்காரமென்பது ஸாத்விகாஹங்காரத்திலிருந்து ஏகாதசேந்திரியங்கள் பிறப்பதற்கும், தாமஸாஹங்காரத்திலிருந்து பஞ்சதந்மாத்ரங்களும் பஞ்சபூதங்களும், என்று இருபத்துநாலு வகையான அசேதநப்ருக்ருதி தத்வத்திற்கும், சேதனமான ஜீவதத்வத்திற்கும் பெரியவனுகையால் நீயே பரதத்வமென்று பெரியோரால் கேட்டு உன்னையே அதிசயமாக நம்பின என்னை தயை என்னும் அம்ருதத்தில் நனைத்து உன் குளிர்ந்த கடைக்கண் ஒளியை என்னுள் பொழிந்து என்னுடைய ரஜஸ்தமோ குணமென்னும் அழுக்கைப் பிடுங்கி ஸத்வகுணத்தை அதிகப்படுத்துவது, அதிகப்படுத்துவது (வளர்ப்பது) அநந்ய ஜனஸுலபா! ஸ்ரீயது சைலவல்லபா!

பிறப்பதற்கு ஸஹாயமாயிருக்கும். இப்படிப்பக்ஷே மஹத், அஹங்காரங்களும், ஏகாதசேந்த்ரியங்களும், பஞ்சதந்மாத்ரங்களும்,

பதின்மூன்றாம் விண்ணப்பம்.

பா— பலப்ருமாண்டங்களை நீ நீர்க்குமிழிபோல் யெழுப்பிப்பாய்—என்று பத்மநாபனின் ஸுகுமாரமான திருவடியில் போர்வீரன் ப்ரீதிவிசேஷத்துடன் நல்லவிண்ணப்பம் உரைத்தான்.

அநேககோடி ப்ரும்மாண்டநாயகா! நீ ஜீவன்களில் தயைகொண்டு அவர்களுக்குக் கரணகளேபராதிகளைக்கொடுக்கவெண்ணி அந்த சரீரத்திலிருந்து அவர்கள் கர்மங்களைச் செய்யவும், அந்தகர்மபலங்களை அநுபவிக்கவும் இடமான ப்ரம்மாண்டத்தை ஸ்ருஷ்டித்தாய். அதெங்ஙனேயென்னில் முன் நீ ஸ்ருஷ்டித்த பஞ்சமஹாபூதங்களும் ஒன்றினொன்று கலக்காமல் வெவ்வேறாயிருப்பதால் ஒருகார்யத்திற்கும் ஒவ்வாததைக்கண்டு அவையெல்லாவற்றையும் பஞ்சீகரணவகையில் ஒன்றாய்ச்சேர்த்தாய். பஞ்சீகரணமெனில் பஞ்சமஹாபூதங்களில் ஒரு மஹாபூதத்தம்சத்தில் பாதியும் மிச்சநாலு பூதங்களின் நாலம்சங்களும் பாதியாகக் கூட்டில் ஒருவஸ்துவெனப்படும், அதனில் ஆகாசம் பாதியும் வாயு, தேஜஸ்ஸு ஜலம், இவைகளின் எட்டில் ஒருபங்கு பாதியாய் இந்த இரண்டு பாதிகளையும் ஒன்றாகக்கூட்டில் இதுபஞ்சீக்ருத ஆகாசமெனப்படும். மேலும் வாயுவம்சத்தில் பாதியும் மற்றநாலு பூதங்களின் எட்டிலொருபங்குகள் நாலும்கூடி பஞ்சீக்ருத வாயுவெனப்படும். மற்றும் தேஜோம்சம் பாதியும் மற்ற நாலுபூதங்களின் எட்டிலொரு பங்குகள் நாலும் கூடி ப்ருத்வியென்னப்படும் இப்படி பஞ்சீக்ருத மஹாபூதங்கள் ஒன்றில் மற்ற நாலு பூதங்கள் கலப்பிருக்கும் ஒருபூதத் தேஜஸ்ஸென்னப்படும். பின்னையும் ஜலாம்சம் பாதியும் மற்ற நாலு பூதங்களின் எட்டிலொரு பங்குகள் நாலும் கூடி

கினம்சத்தில் பாதியும் மற்ற எட்டிலொரு பங்குமாகி ஏற்றழிவாகி இந்த ராசிகள் இருப்பதால் எந்த ராசியில் எந்த பூதாம்சம் அதிகமாயிருக்குமோ அந்த ராசிக்கு அந்தப் பெயராகும். இப்படியிருக்கும் பஞ்சமஹாபூதங்களும் மஹதஹங்கார தத்வங்களும் ஒன்றுகூடி பூவஸ்துக்களிலிருந்து ப்ரும்ஹாண்டமுண்டுபண்ணுமளவில் சட்டியைப்பண்ணும் குலாலாதிகள்[1] போல் சரீராயாஸமின்றி நீரில் குமிழியெழுப்பும்படி உன் இச்சாமாத்ரத்தில் உண்டுபண்ணினாய். அதன்பிறகு ப்ரம்மாண்டத்தில் பிறப்பிக்கும் தேவமனுஷ்ய திர்யக்ஸ்தாவரஸ்ருஷ்டிகளை ஆள்வைத்து செய்விப்பேனென்று நான்முகனைப் படைத்தாய். இப்படி நீயே செய்யும் தத்வஸ்ருஷ்டியும், அண்டஸ்ருஷ்டியும் ப்ராக்ருதஸ்ருஷ்டியும் ஸமஷ்டிஸ்ருஷ்டியெனப்படும். பின்பு சதுர்முகனின்றும் செய்விக்கப்படும் தேவாதிஸ்ருஷ்டி வ்யஷ்டி ஸ்ருஷ்டியெ
ப்ரம்ஹாண்டங்களைப்போலவும்
னப்படும். இப்பொழுது சொல்லும், ப்ரம்ஹாண்டங்களை நீயோர்வனே ஸ்ருஷ்டித்து ஆள்வைத்து காரியம் நடத்துவதினால் அநேககோடிப்ரம்மாண்ட நாயகனெனப்படுவாய். இந்த ஜகத்வ்யாபாரவ்யாஸங்கத்தில் என்னைமறவாமல் உன் தயார்த்ரசித்தத்தில் நினைப்பது, நினைப்பது. அநந்யஜனஸுலபா! ஸ்ரீயதுசைலநாயகா!

---

1. குலாலாதிகள்—குயவன் முதலானோர்.

பதினுன்காம் விண்ணப்பம்.

பா— எல்லா கர்மபலங்களையும் அனுபவிக்கும் ஸ்தானமான உலகங்களை நீ படைத்தாய் என்று வீரரில் வீரனானவன் அன்புபுரிந்து அஸுராரிக்கு[1]ச்சொன்னான்.

சகல புவனாதாரா[2]! உலகங்கள் பதினான்கு. அவை யெல்லாம் பிரும்மாண்டத்திலிருக்கும். அதெப்படியென்னில் பிரும்மாண்டமென்பது பரணியைப்போல்[3] உருண்டைவடிவாயிருக்கும். அதனுள் அவகாசம்[4] எந்த திசையிலும் ஐம்பது கோடி யோஜனையளவாயிருக்கும். அதனுள் கீழிருந்து அண்டகபாலத்துக்கு மேல் கர்போதகம் இருக்கும் ஸ்தானம் எண்பத்துமூன்று லட்சத்தைம்பதினாயிரம் யோஜனையாயிருக்கும். [அங்குதென்பாகத்தில் ரௌரவாதி

1. அசுராரி—அசுரர் பகைவன்—அசுரர்—கச்யபமுனிவருக்கு திதியிடத்தில் பிறந்தவர். தேவதைகளுக்கு இவர்கள் ஸஹஜசத்ருக்கள். இவருடைய உத்பத்திபுராணங்களில் பிரமனுடைய தபோமயமான சரீரத்தில் ஜகனப்ரதேசத்தில் நின்றும் உண்டானார்களென்று சொல்லப்பட்டது இவர்கள், தைத்யர், (திதிபுத்ரர்) தானவர், (தனுபுத்ரர்) என்று இருவகைப்பட்டிருப்பர், இவர்களுடைய குரு சுக்ராச்சாரியர்.

2. ஸகலபுவனாதாரா—எல்லா (பதினான்கு) உலகங்களுக்கு மஸ்திவாரமானவனே.

3. பரணி—ஒரு பாத்திரம் (சிமிழ்)

4. அவகாசம்—இடம்.

நரகங்களும் அதறகுமேல் சேஷலோகமென்பது முப்பத்திரண்டாயிரம் யோஜனையாயிருக்கும். அதற்குமேல் பூமி எழுபதினாயிரம் யோஜனத்திற்குள், ஒவ்வொன்று பத்தாயிரம் யோஜனங்களாகி மாடமாளிகை மரியாதையில் பாதாலம்முதலாய் ஸப்தலோகங்களாயிருக்கும்[5]. பூமிக்குமேல் ஸூர்யமண்டலம்வரையில் ஒருலட்சம் யோஜனையாயிருக்கும் ஆக கீழண்டபித்தியிலிருந்து[6] ஸூர்யமண்டலம் வரையில் இருபத்தைந்துகோடி யோஜனையாயிருக்கும். அதற்குமேல் சந்திரமண்டலம் ஒரு லட்சம் யோஜனத்திலும் அதற்குமேல் நக்ஷத்திரமண்டலம் ஒரு லட்சம் யோஜனத்திலுமிருக்கும், அதற்குமேல் இரண்டுலட்சம் யோஜனையில். சுக்ரனும் அதற்குமேல் இரண்டுலட்சம் யோஜனையில் ப்ருஹஸ்பதியும், அதற்குமேல் இரண்டுலட்சம் யோஜனத்தில்

5. ஸப்தலோகம்—ஏழுவித உலகங்கள் அவைபூலோகம் புவர்லோகம், ஸுவர்லோகம், மஹர்லோகம்,ஜனோலோகம், தபோலோகம், ஸத்யலோகமென்பன. இவ்வேழும் மேலுலகங்கள். அதல, விதல, சுதல, தராதல, ரஸாதல, மஹாதல, பாதாளமென்னும் ஏழும் கீழுலகங்களாம்.

6. அண்டபித்தி—பிரம்மாண்டச்சுவர் இது பாதாளாதி ஸத்யலோகாந்தமான பதினாலு லோகங்களையுஞ் சுற்றிக்கொண்டு வெளியிலுள்ள மஹாஜலம் உள்ளே ப்ரவேசியாமைக்குக் கரையாயிருக்கும்.

ஸப்தருஷிமண்டலமும்[7], அதற்குமேல் ஒருலட்சம் யோஜனத்தில் ஜ்யோதிஸ்சக்ரகூடஸ்தனை துருவனுமிருப்பன். ஆக சூர்யமண்டலத்திலிருந்து த்ருவமண்டலம் வரையில் பதினான்குலட்சம் யோஜனையும்; ஸுவர்லோகமெனப்பட்டு இந்த்ராதி தேவதைகள் ஸ்தானமாயிருக்கும், அதற்குமேல் ஒருகோடி யோஜனையும் மஹர்லோகமெனப்பட்டு முதல் இந்த்ராதி பதவிகளிலிருந்து நிவ்ருத்தாதிகாரரான தேவதைகள் ஸ்தானமாயிருக்கும். அதற்குமேல் இரண்டுகோடியோஜனமும், ஜனோலோகமெனப்பட்டு பிரம்ஹபுத்ரர்களான ஸனகாதிமுனிவர்களின் ஸ்தானமாயிருக்கும்.[8] அதற்குமேல் எட்டுகோடி யோஜனமும் தபோலோகமெனப்பட்டு ஓங்காராதி பரமரிஷிகளின் ஸ்தானமாயிருக்கும். அதற்குமேல் ஒருகோடியே எண்பத்தாறுலட்சமும் வெட்டவெளியாயிருக்கும். ஆகசூர்யமண்டலத்திலிருந்து மேலண்டப்பித்தி வரையில் இருபத்தைந்துகோடியும், கிழண்டப்பித்திவரையில் இருபத்தைந்துகோடி யோஜனங்களுமாய் ப்ரம்ஹாண்டம் ஐம்பதுகோடி யோஜனை நீளமாயிருக்கும். இதில் ஸ்திரமான[9] மாடிவீடுபோல் பதினு

---

7. ஸப்தருஷிகள்—முனிஸ்ரேஷ்டர்கள் எழுவர். அவர் மரீசி, அங்கிரஸன், புலகன், வஸிஷ்டன், அத்திரி, புலஸ்த்யர், கிருது என்போர் ஒருசாரார். கச்யபன், அத்ரி பரத்வாஜன், விஸ்வாமித்ரன், கௌதமன், ஜமதக்னி, வஸிஷ்டன், என்போரையும் ஸப்தருஷிகளென்பர், இங்குமுதலேழைக் குறிக்கிறது.

8. ஸ்தானம்—இடம், நிலை.

9. ஸ்திரம்—திடம்—மாறாமை.

அதற்குமேல் பன்னிரண்டுகோடியோஜனையும் ஸத்யலோகமெனப்பட்டு சதுர்முக ப்ரம்ஹ ஸ்தானமாயிருக்கும்.

ன்கு உலகங்களிலிருக்கும் எல்லாப்பிராணிகளுடைய ஸ்வரூப[10]ஸ்திதி[11] ப்ரவ்ருத்தி[12]களுக்கு நீயேகாரணமாயிருப்பதால்ஸகல புவனாதாரன்.என்னப்பட்டாய் ஆகையால் என்னுடைய ஸ்வரூப ரூபஸ்திதிகள் உன்னுடைய அதீனமாயிருக்குமென்று பெரியோர்களால் கேட்டு என்னுடையஹிதாஹிதங்களை விட்டு இருக்கிறேன். என்னைரட்சிக்கும்வகை உன்னது, உன்னது. அநந்யஜனஸுலபா! ஸ்ரீயது சைலவல்லபா!

---

10. ஸ்வரூபம்—சொரூபம், இயற்கைத்தன்மை.

11. ஸ்திதி—நிலைமை.

12. ப்ருவ்ருத்தி—முயற்சி.

பரம—ஸ்ரேஷ்டமான.

பதினைந்தாம் விண்ணப்பம்.

பா— ஸமுத்திரங்களென்ன, மலைகளென்ன, நதிகளென்ன இவற்றை உட்கொண்ட தராவலயம் அவ்வளவையும் நீ ஸ்ருஷ்டித்தாயென்பது திண்ணம்பண்ணப்பட்டிருக்கிறது என்று கர்ணாடக சக்ரவர்த்தி ஸௌரிக்கு[1] விண்ணப்பம் செய்தான்.

அகண்ட பூமண்டலாதீச்வரா! பூமியைச்சுற்றி அண்டபித்தி உருண்டையா யிருப்பதால் எந்தப்பக்கத்திலும் ஐம்பது கோடி யோஜனையாயிருக்கும்: அதெங்ஙனேயென்னில்—பூமத்யத்தில் ஜம்பூத்வீபம் உருண்டையாய் எந்தப்பக்கத்திலும் லட்சயோஜனையா யிருக்கும். இந்த ஜம்பூத்வீபமத்யத்தில் மஹாமேரு சுவர்ணமயமாய் கீழ்பதினாயிரம் யோஜனை அகலமும் மஸ்தகத்தின்[2]மேல் முப்பத்திரண்டாயிரம் யோஜனை அகலமுமாய் சதுரமாய் வெல்லத்தைத்தலைகீழாக வைத்தாற்போலிருக்கும்[3]. இந்த ஜம்பூத்வீபத்தை சுற்றின லவணஸமுத்திரமொன்று லக்ஷயோஜனை அகலமும் இதைச்சுற்றின ப்லக்ஷத்வீபம் இரண்டு லக்ஷ யோஜனையகலமும் இதைச்சுற்றின இக்ஷுஸமுத்திரம் இரண்டு லட்சம் யோஜனமும்

---

1. ஸௌரி—ஸூரசேன வம்சத்தில் பிறந்தவன்.

2. மஸ்தகத்தின்மேல்—தலைமேல், மேற்பக்கம்.

3. வெல்லத்தைத்தலைகீழாய் வைத்தபடி—மைஸூர்தேசத்தில் "பெல்லத்தச்சு" யென்பார்கள். இது "ப" எழுத்துப்போல் அச்சடிக்கப்படும், சதுரமாயிருக்கும்.

இதைச்சுற்றின சால்மத்வீபம் நாலு லட்சம் யோஜனமும் இதைச்சுற்றின ஸுராசமுத்திரம் நாலு லட்ச யோஜனமும், இதைச்சுற்றின குசத்வீபம் எட்டுலட்ச யோஜனமும், இதைச்சுற்றின க்ருதஸமுத்திரம் எட்டுலட்ச யோஜனமும், இதைச்சுற்றின க்ரௌஞ்சத்வீபம் பதினாறுலட்ச யோஜனமும், இதைச்சுற்றின ஸாகத்வீபம், முப்பத்திரண்டு லட்சயோஜனமும், இதைச்சுற்றின புஷ்கரத்வீபம் அறுபத்துநாலாயிரம் லட்சயோஜனமும், இதைச்சுற்றின ஸ்வாதூதக ஸமுத்ரம் அறுபத்துநாலாயிரம் யோஜனமுமாயிருக்கும், இந்தபர்யந்தம் (இதுவரை) மனுஷ்யாதி பிராணிகள் ஸஞ்சாரத்திற்கு யோக்யமாயிருக்கும். அதின் புறவலயம் பிராணிகள் ஸஞ்சாரத்திற்கு யோக்யமில்லாமல் பளிங்குபோல் நிர்மலமாய் ஸ்வர்ணமயமாயிருக்கும் பூமி பத்துகோடியே, பதினொன்றுலக்ஷ யோஜனை யகலமாயிருக்கும். இதைச்சுற்றி லோகாலோக பர்வதம் பத்தாயிரம் யோஜனையுயரமாயும் பத்தாயிரம்யோஜனமகலமுமாயிருக்கும். இதைச்சுற்றின அந்தகாரபூமி அண்டகடாஹ பர்யந்தத்திற்கு பன்னிரண்டுகோடியே, முப்பத்திரண்டு லட்சத்து நாற்பதினாயிரம் யோஜனையகலமாயிருக்கும். இப்படி பூமத்யத்திலிருந்து ஒருதிசை அண்டபித்தி பர்யந்தம் இருபத்தைந்துகோடி யோஜனை விஸ்தாரமாயிருக்கும். அதெங்ஙனேயென்னில் :—ஜம்பூத்வீபமத்யத்திலிருந்து லவணஸமுத்ரம் வரையில் ஐம்பதினாயிரம் யோஜனமும், மற்ற ஆறுத்வீபங்களும் ஏழுஸமுத்ரங்களும் சேர்ந்து இரண்டுகோடியே, ஐம்பத்துமூன்று லட்சயோஜனமும் ஸுவர்ணபூமி பத்துகோடியே பதினொன்றுலட்ச யோஜனமும், லோகாலோக பர்வதம் பத்தாயிரம் யோ

ஜனமும், அந்தகாரபூமி பன்னிரண்டு கோடியே, முப்பத்திரண்டு லட்சத்து நாற்பதினாயிரம் யோஜனமும் சேர்ந்து இருபத்தைந்துகோடி யோஜனமாயிருக்கும். இப்படி மேருமத்யத்திலிருந்து ஒருபக்கம் இருபத்தைந்துகோடி விஸ்தாரமாயிருப்பதால் பூமண்டலம் ஒருபக்கத்திய அண்டபித்தியிலிருந்து மற்றொருபக்கத்து அண்டபித்திவரையில் ஐம்பதுகோடி யோஜனை விஸ்தாரமாயிருக்கும். இப்படிப்பட்ட பூமண்டலம் ப்ரளயஸமுத்ரத்தில் முழுகினவன்று நீ சுமந்துகாப்பாற்றினதால் அகண்டபூமண்டலாதீச்வரனெனப்படுவாய். உன் ஐச்வர்யத்தின்[4] எல்லேகாணப்பிரமன் முதலியவர்களுக்கு அரிதாகிலும், பிரீதியுடன் நான் என்னறிவிக்கு எட்டினவரையில் விண்ணப்பம் செய்தேன் இந்தை க்ஷமிக்கவும், க்ஷமிக்கவும். அநக்யஜன சுலபா! ஸ்ரீயதுசைலவல்லபா!

---

4. ஐச்வர்யம்—ஐச்வர்யமாவது ஸகலபதார்த்தங்களையும் தத்தத் கர்மானுகுணமாக நியமிக்கும், நியமன ஸாமர்த்யம்.

ஸப்தஸமுத்ரம்—ஏழுவகைச் சமுத்திரங்கள், அவை உவர்நீர்ச்சமுத்திரம், நன்னீர்ச்சமுத்திரம், பாற்சமுத்திரம், தயிர்சமுத்திரம், நெய்சமுத்திரம், கருப்பஞ்சாற்றுச்சமுத்திரம், தேன்சமுத்திரமென்பனவாம்.

சப்ததீவுகள்—ஏழுவிதத்தீவுகள்—அவை, ஜம்பு, ப்லக்ஷ, குச, க்ரௌஞ்ச, சாக, சான்மல. புஷ்கரமென்பன.

பதினான்காம் விண்ணப்பம்.

பா— உலகத்தில் பிரகாசிக்கும் சுவர்க்கங்களின் பேதங்களை நீ உரைப்பாயென்று யாதவகிரிநாதனடிக்கு சிறைப்பட்டவரில் தயையுள்ள தலைவன் விண்ணப்பம் செய்தான்.

நிகிலபோகப்ரதா[1]! போகமென்பது சுகம், துக்கம் இவற்றினனுபவம். துக்கத்தை அனுபவிக்கும் தேசம் நரகமெனப்படும். சுகத்தை அனுபவிக்கும் தேசம் சுவர்க்கம் எனப்படும். இந்த சுகானுபவமான சுவர்க்கங்கள் பதினான்கு லோகங்களிலுமுள. அவைகளில் பூமியிலிருக்கும் சுவர்க்கங்கள் பூசுவர்க்கங்களெனப்படும். அவையெவை யென்னில் :—ஜம்பூத்வீபத்தின்[2] நவவருடங்களில்[3] பாரதவரு

---

1. நிகிலபோகப்ரதா!—ஸமஸ்தபாக்கியங்களையும், கொடுப்பவனே! (கிருபைசெய்பவனே.)

2. ஜம்பூத்வீபம்:—இந்த பூமியானது ஜம்பூத்வீபமுள்பட ஏழுத்வீபங்களாய் பிரிக்கப்பட்டிருக்கிறது. இவை முறையே ஸப்தஸமுத்ரங்களால் த்வீபங்களாகச் சூழப்பட்டிருக்கின்றன. இவைகளுக்குள்ளே ஜம்பூத்வீபமென்பது எல்லாவற்றிற்கும் நடுவிலிருக்கின்றது.

மேருவின் தெற்கிலிருக்கும், கந்தமாதன மலையில் ப்ரகாசிக்கும் நாவல்மரத்தைப்பற்றித்தான் இந்த பூமிக்கு ஜம்புத்வீபமென்று பெயர் உண்டாயிற்று. அந்த மரத்தின் பழங்கள் மஹாகஜ ப்ரமாணமுள்ளவைகளாய் மலையின்மேல்

விழுந்து சிதைய அவைகளின் ரஸத்திஞலே ஜம்பூநதியெ ன்று ப்ரஸித்தமான ஒரு நதி ஓடுகின்றது. (மகாகஜமெ ன்பது—ஐந்துமுழ உயரமும், ஏழு முழ நீளமும் எட்டு முழப்பருமனு முடையது.)

அவ்வாற்றங்கரையின் மண்ணானது அந்த ரஸத்திஞல் நனைந்து காற்றிஞலுலர ஜாம்பூநதமென்று பேர் கொண்டு சித்தர்கள் தரிக்கும்படியான ஸ்வர்ணமாகிறது.

3. நவவருஷங்கள் :—இந்த ஜம்பூத்வீபத்தில் முதல் பாரதவர்ஷமும், பின்பு கிம்புருஷ வருஷமும், அப்புறம் ஹரிவர்ஷமும், இம்மூன்றும் மேருவின் தெற்கே யுள்ளவை. ரம்யகவருஷம், ஹிரண்ய வருஷம், குருவருஷம். ஆகிய மூன்றும் மேருவின் வடக்கேயுள்ளவை. பாரதவருஷம் எப்படி தெற்கின் கடைசியோ அப்படியே "குரு" வருஷம் வடக்கின் கடைசியாய் இருக்கிறது. மேருவைச்சுற்றிலும் இராநின்றது இளாவ்ருத வருஷமெனப்படும். மேருபர்வதத்திற்குக் கிழக்கே பத்ராச்வ வருஷமும், மேற்கே கேதுமால வருஷமும் இருக்கின்றன. இவ்வருஷங்களில் ஒவ்வொன்றும், ஒன்பதிஞயிரம் யோஜனை விஸ்தீர்ணம் உள்ளவை.

அந்த இளாவ்ருத வர்ஷத்தில் நான்கு பர்வதங்கள் மேருவுக்குத்தாங்கிகளா யிருக்கும்படி யுண்டாக்கப்பட் டிருக்கின்றன. அவற்றுள் கிழக்கில் மந்தரமும், தெற்கில் கந்தமாதனமும், வடக்கில் சுபார்ச்வமும், மேற்கில் விபுலமும் இருக்கின்றன. அந்த மலையில் முறையே கடம்பு, நாவல் அத்தி, ஆல், என்ற மரங்கள் பிரகாசிக்கின்றன. நான்கு திசைகளிலும் முறையே சைத்ரரதம், கந்தமாதனம். வைப்

ராசம், நந்தனம், என்று சொல்லப்பட்ட நான்கு உத்யான வனங்களுண்டு. அவைகளில் அருணோதம், மஹாபத்ரம், ஸிதோதம், மாஸை என்கிற நான்கு மடுக்கள் தேவதா யோக்யங்களாயிருக்கின்றன.

பிலக்ஷத்வீபம் :—ஏழு வருஷங்கள்—1 சாங்ஹயம், 2 சிகரம். 3 சுகதம், 4 ஆநந்தம், 5 சிவம், 6 க்ஷேமகம், 7 துருவம்.

சால்மத்வீபம் :—ஏழு வருஷங்கள்—சுவேதன், அரிதன், ஜீமூதன், ரோஹிதன், வைத்துதன், மானஸன், சுப்பிரபன்.

வருஷபர்வதங்கள் :—குமுதம். உன்னதம், பலாஹகம், துரோணம், சங்கம், மகிஷம், கருத்மான்.

குசத்வீபம், வருஷங்கள்—மலைகள் :—உத்பிதன், வேணுமான், சுவைரதன், லம்பன், திருதி, பிரபாகரன், கபிலன்.—வித்ரமம், ஹேமசைலம், த்யுதிமான், புஷ்பவான், குசேசயம், ஹரி, மந்தரம்.

க்ரௌஞ்சதுவீபம், வருஷங்கள் :—குசலன், மனுகன், உஷ்ணன், சிவரன், அந்தகாரகன், முனி, துந்துபி

வருஷபர்வதங்கள் :—க்ரௌஞ்சம், வாமனம், அர்த்தகாரகம், ரத்னசைலம், திவாவிருது, புண்டரீகவான், துந்துபி.

சாகத்வீபம், வருஷங்கள் :—ஜலதா், குமாரம், சுகுமாரம், மரீசகம், குசுமோதம், சுமோதம், மகாத்ருமம்.

டமொன்றன்றி மற்றைய எட்டு வருடங்களும்,[4] வர்ஷபர்வதங்களும் மஹாமேருவும்[5]; ப்லக்ஷ, சால்மலி, குச, க்ரௌஞ்ச, சாகங்களென்னுமைந்து த்வீபங்களிலிருக்கும் முப்பத்தைந்து வருடங்களும், எல்லா வருஷ பர்வதங்களும், புஷ்கர த்வீபத்திலிருக்கும் இரண்டு வருடங்களும், வர்ஷபர்வதமொன்றும் இவைகளெல்லாம் பூசுவர்க்கங்களெனப்படும். இவைகளில் ஜம்பூத்வீபத்திலிருக்கும் எட்டு வருடங்களிலும், புஷ்கரத்வீபத்திலிருக்கும் இரண்டு வருடங்களிலும் மானிடரெல்லோருக்கும் பத்தாயிரம் வருஷமாயிஸ்ஸுண்டாயிருக்கும்; பிணியும், பொறாமை, பிறர் குணதூஷணம் இவைகளொன்றுமில்லாமலிருக்கும்; அனைவரும் உத்தமசாதியராயிருப்பதால், சாதியில் உயர்வு தாழ்வு இல்லாமலிருக்கும்; சாதிவித்யாச மில்லாமையாலேயே ஆசாரபேதமில்லாமலிருக்கும். இங்கு இருக்கும் மனிதரெல்லாம் எப்பொழுதும் பசியும் தாகமுமில்லாமல் பரமஸந்துஷ்டராய், தேவ

வருஷபர்வதங்கள் :—உதயகிரி, ஜலதாரம், ரைவதகம், ச்யாமம், அம்போகிரி, அம்பிகேயம், கேஸரி.

புஷ்கரத்வீபம் :—வருஷங்கள், :—மகாபீதம், தாதகி

வருஷபர்வதம் :—மானசரோத்தரம்.

4. வருடங்கள் :—கண்டங்கள்.

5. மஹாமேருபர்வதம் :—ஜம்பூத்வீபத்திற்கு நடுவில் இந்த சுவர்ணபர்வதமானது பூமியென்னுந் தாமரை மலருக்குக் கர்ணிகையைப்போல விளங்குகின்றது.

தைகளும் தாமும், ஸமானவேஷத்துடனும், ஸமானசக்தியும், ஸமானபுத்தியாயு மிருப்பர். ப்லக்ஷ, சால்மலீ, குச, க்ரௌஞ்ச, சாகத்வீபங்களிலிருக்கும் முப்பத்தைந்து வருடங்களிலும் வர்ஷபர்வதங்களிலும் காலமெப்பொழுதும் த்ரேதாயுக சமமாயிருக்கும். இவ்விடத்திய மனிதர்களும் தேவகந்தர்வர்களும் கூடியாடிக்கொண்டு ஐந்தாயிரம் வருஷம் ஆயுஸ்ஸுண்டாகி ஆதி, வ்யாதி[6] யொன்றுமில்லாமல் சுகத்திலிருப்பர். ப்ராஹ்மண, க்ஷத்ரிய, வைச்ய, சூத்ரரென்னும் சுத்தசாதியராய் ஸதாசாரஸம்பன்னராயுமிருப்பரல்லாமலொருவரும் கலப்பு ஜாதியரில்லாமலிருப்பர். இவைகளில் இளாவ்ருதவர்ஷத்தில் பல பல போகங்களுக்கு ஆஸ்பதமாய் அழகான ஸ்தானங்களிருக்கின்றன. அவையெவையென்னில்:—மஹா மேரு, அசையாமலிருக்கும் பொருட்டோ வென்னுமாப்போலே பலமான கீல்கள்போல் நான்குதிசையிலும் நான்கு பர்வதங்களிருக்கும். அவைகளில் கிழக்கு திசையில் மந்தரபர்வதமிருக்கும், அதின்மேல் ஆயிரம் யோஜநமுயரமான கடபமரமிருக்கும்[7]. அந்த மரத்திற்கு ஆயிரம் பெரிய கிளைகளும், பதினாயிரம் சிறிய கிளைகளுமாகி யெல்லாக்காலத்திலும் மலர்களும் பழங்களுமுண்டாய்ச்சுற்றி ஆயிரம் யோஜனை திவ்யபரிமளமாயிருக்கும். இந்த பர்வதத்தினருகில் கிழக்கே சைத்ரரத மென்னும் ஶ்ருங்காரத்தோட்டமும், அருணோதமென்னும் ஸரஸ்

6. ஆதி, வ்யாதி:—தேஹவியாதிகளும், மனோவியாதிகளும்.

7. கடபமரம்:—கடம்பமரம்.

ஸாமிருக்கும். மேருவுக்குத்தெற்கில் கந்தமாதனமென்னும் பர்வத மிருக்கும். அதின்மேல் ஆயிரத்து ஒரு நூறு யோஜனமுயரமான நாவல்மரமிருக்கும். இதின் கிளைகளிலிருந்து ருசியாயும் மெதுவாயும், ஸுகந்தமாயும், மாஹகஜ அளவாயுமிருக்கும், பழங்கள் சுற்றெல்லையில் விழுந்து கரைந்து ஜம்பூநதியென்னும் ஆறுப்புனல் பெருகிக்கொண்டிருக்கும். அதன் கரைமண்கள் அந்தரஸனத்தினால் நனைவதால் ஜாம்பூநதஸ்வர்ணமயமாய் தேவர்களின் அலங்காரத்திற்கு யோக்யமாயிருக்கும். அதன் தென்னண்டையில் கந்தமாதனமென்னும் ஸ்ருங்காரத்தோட்டமும், மானஸமென்னும் ஸரஸ்ஸுமிருக்கும், மேருவின் மேற்கே விபுலமென்னும் பர்வதமிருக்கும். அதின்மேல் ஆயிரத்து ஒருநூறு யோஜன முயரமான அரசமிருக்கும். அதின் பழங்கள் எப்பொழுதும் மகாகும்ப அளவாய் பரிமள யுக்தமாயிருக்கும், அதற்குமேற்கால் வைப்ராஜமென்னும் ஸ்ருங்காரத்தோட்டமும், ஸிதோதமென்னும் ஸரஸ்ஸுமிருக்கும். மேருவின் வடக்கே சுபார்சவமென்னும் பர்வதமிருக்கும். அதற்குமேல் ஆயிரத்து ஒருநூறு யோஜனமுயரமுள்ள ஆலமரமிருக்கும். அதின் பழங்கள் எப்பொழுதும் மஹாகும்ப அளவாய் பரிமளயுக்தமாயிருக்கும். அதனருகில் நந்தனமென்னும் ஸ்ருங்காரத் தோட்டமும் ஸிதோதமென்னும் ஸரஸ்ஸுமிருக்கும். இந்த நாலு பர்வதங்களின் புறவலயத்தில் பல பருவதங்களிருக்கும். இவை தாமரைக் கேஸரங்களின்மயமாயிருப்பதால் கேஸரபர்வதங்களெனப்படும். அவை யெவையென்னில்:—மேருவிற்கு கிழக்காய் ஸிதாம்ப, உதகுஞ்ஜ, மார்ஷ, வ்ருங்க, மணிச்ருங்க, ஸபிந்து, மந்தர, வேணு, மந்த, ஸமேக, நிஷத, தேவபர்வதங்கள்; மேருவிற்

என்னும்இந்த பர்வதங்களிருக்கும்

குத் தெற்கே க்ருசிர, க்ருச்ருங்க, கபிங்க, பதங்க, குசக்ர, தாம்ராப, விசால, ஸ்வேததர, ஸமூல, வஸுதார, ரத்நகர, ஏகச்ருங்க, மஹாமூல, கஜசைல, பிசாசக, பஞ்சசைல, கைலாஸ, ஹிமவந்தமென்னும் இந்த பர்வதங்களிருக்கும்; மேருவிற்கு மேற்கே கபில, பிஞ்ஜக, பத்ர சுரஸ, மஹாபல, குமத, மதுமந்த, அஞ்சந, மகுட, க்ருஷ்ண, பாண்டர, சஹஸ்ரசிகா, பாரியாத்ர, த்ருஸ்ருங்கமென்னும் பர்வதங்களிருக்கும்; மேருவின் வடக்கே சங்ககூட, நிஷத, ஹம்ச, நாக, கபிங்க, இந்த்ரசைல, நீல, கனகச்ருங்க, சதச்ருங்க, புஷ்கர, மேகசைல, விரஜ, ஜாருதி, த்ருச்ருங்கமென்னும் பர்வதங்களிருக்கும். இந்த கேஸரபர்வதங்களின் தடவரைகள் ரமணீயமாய், தேவதைகளுக்கு க்ரீடா ஸ்தானங்களாயிருக்கும். அவையெவையென்னில்—மேருவிற்கு கிழக்காய், ஸிதாந்த குமுதபர்வதங்களின் நடுவே மூன்னூறு யோஜந நீளமும், நூறுயோஜந மகலமுமாய் ருசியாய் நிர்மலமாய் இருக்கும் ஜலத்தினால் பூர்ணமான ஸ்ரீஸரஸ்ஸென்னும் குளமிருக்கும். அதனுள் மரக்காலளவான தாமரைகளிருக்கும். அவைகளில் கோடிதளங்களுடைய ஸ்வர்ணமயமான ஒரு தாமரையில் ஸாக்ஷாத் மஹாலக்ஷ்மி உறைவள். இந்த குளத்தினோரத்தில் நூறுயோஜனை யகலமும், இருநூறு யோஜனை நீளமுமான வில்வமரவனமிருக்கும். அதனுள் மரங்கள் எப்பொழுதும் பலபுஷ்பயுக்தமாய் "அரைகூவு வழி[8]" (கூப்

---

8. "அரைகூவு வழி":—கன்னட நாட்டு கிராமங்களில் "ஒந்துகூகுதாரி" என்று சொல்லுவார்கள். இது வழியின் தூரத்தைச் சொல்லும். ஒரு மனிதன் கூப்பிட்டால் எவ்வளவு தூரம் கேழ்க்குமோ அவ்வளவு தூரமென்று அர்த்தம். இந்த அளவில் பாதி.

பிடி தூரம்) உயரமாயிருக்கும். அங்கேயும், மஹாலக்ஷ்மி ஸித்தஸங்கநிஷேவிதையா[9] யிருப்பதால் அந்த வனத்திற்கு ஸ்ரீவனமென்று பெயராயிருக்கும். மேலும் வைகங்க மணி சைலமென்னும் இந்த பர்வதங்களின் நடுவே இருநூறு காத நீளமும் நூறுகாத மகலமுமான ஒரு குளமிருக்கும். அதனடியில் 'அரைகூவு வழி' உயரமான பலமரங்களினால் பிரகாசிக்குமொரு மஹாவனமிருக்கும். அதன் நடுவில் காச்யபமுனிக்கு ஆச்ரமமிருக்கும். மற்றும் மஹாநீலகுண்டமலைகளின் நடுவே தாமரைக் கூட்டத்தினால் அழகான பிரகாசமுடைய ஸௌகந்தியென்னும் குளமிருக்கும். அதனண்டையில் ஐம்பது யோஜனை நீளமும் முப்பது கோடி யோஜனை மகலமுமான பனைமரவனமிருக்கும். அந்த மரங்கள் 'அரைகூவு' வழி உயரமாயிருக்கும். தேவசைலமென்னும் மலையின் தாழ்வரையில் செடிமரங்களொன்று மில்லாமல் ஆயிரம் காத நீளமும் நூறு காதம் அகலமும் ஸமதளமாய் ஒரு கல்தரையாய் அதன்மேல் முழங்கால் உயரம் நீருண்டாய் ஐராவதத்திற்கு[a] க்ரீடாஸ்தானமா யிருக்கும். இவையெல்லாம் மேருவுக்கு கிழக்கே இருக்கும் ஸ்தானங்கள் மேருவின் தெற்கே த்ருசிர, பதங்கமலைகளின் நடுவில் தித்திப்பாய் தெளிநீருடைத்தான பஹூதகமென்னும் நதி பெருகிக்கொண்டிருக்கும். அதன் கரையில் நூறுகாத

---

9. ஸித்தஸங்க நிஷேவிதையாய் :—ஸித்தர் ஸமூஹத்தால் ஆராதிக்கப்பட்டவளாய்,

a. ஐராவதம் :—தேவேந்த்ர வாஹனமான நான்கு தந்தங்களையுடைய வெள்ளையானை, திக்கஜங்களிலொன்று.

நீளமும் முப்பது காதமகலமுமான அத்திக்காடு இருக்கும். மரங்கள் ஒரு அம்பு எய்யும் உயரமாய் பவளவர்ணமான மண்குடப் பெருமனை பழங்களுடன் கூடி அது கர்தம ப்ரஜாபதிக்கு ஆச்ரமமாயிருக்கும். தாம்ராப பதங்க கிரிகளின் நடுவே நூறு காதம் நீளமும், நூறு காதம் அகலமுமான ஸரஸ்ஸிருக்கும். அதனுள் செந்தாமரைகள் பால ஸூர்யனைப்போல் ப்ரகாசமாயிருக்கும். அந்தஸரஸ்ஸின் மத்தியிலிருக்கும் ஒரு மலைமேல் கோட்டை கொத்தளங்களால் விளங்கும் ஒரு வித்யாதரபுரமிருக்கும். விசால ச்வேத பர்வதங்களின் நடுவே முப்பது காதம் அகலமும் ஐம்பது காதம் நீளமாயிருக்குமொரு குளமிருக்கும். அதின் கரையில் ஒரு பெரிதான மாமரமிருக்கும். அதனில் மாம்பழங்கள் ஸ்வர்ணஸங்காசமாய் அத்தியந்தம்[10] பரிமளயுக்தமாய் மண்குடப்பருமனாயிருக்கும். வஸுதாரா, ரத்னதாரா, பர்வதங்களின் நடுவே முப்பது காதம் நீளமும், நூறுகாதம் அகலமுமானவொரு பலாசவனமிருக்கும் அதின் பூக்கள் எப்பொழுதும் நூறுகாத பர்யந்தம் பரிமளித்திருக்கும்; அதனில் ஸூர்யனுக்கு ஆச்ரமமிருக்கும். மேருவின் மேற்கே ஸுபார்ச்வ சிகி பர்வதங்களின் நடுவே நூறுகாதம் அகலமும் நூறுகாதம் நீளமும் நெருப்பால் சுடப்பட்ட சூடான நிலமாயிருக்கும். அதின் நடுவே இருபது காதநிலம் வன்ஹி (நெருப்பு) மண்டலமாயிருக்கும், அதினுள் எப்பொழுதும் ப்ரளயகாலாக்னி[11] பிறகில்லாமல் எரிந்துகொ

---

10. அத்தியந்தம் :—மட்டற்றது, மிகுதி.

11. ப்ரளயகாலாக்கினி :—நான்முகனின் ஒருபகல் முடிவில் ஒருநைமித்திக ப்ரளயம் உண்டாகும், இந்தத்தின ப்ரளயத்தில், பூலோக, புவர்லோக, சுவர்லோகங்கள் தகிக்கப்பட்டு நாசமாகும். இதுவே பிரளயாக்னி.

ண்டிருக்கும். குமுத, அஞ்சனபர்வதங்களின் நடுவே புண்யஹ்ரதமென்னும் குளமிருக்கும். அதின் தீரத்தில் பத்து காதம் அகலமும், பத்துகாதம் நீளமுமான மாதுளை வனமிருக்கும். அதனுள் எப்பொழுதும் மஞ்சள் வர்ணமாய் பெரிய பழங்களிருக்கும். அதனுள் ப்ரஹஸ்பதிக்கு ஆச்ரமமிருக்கும். பிஞ்ஜர, ஸௌரஸ பர்வதங்களின் நடுவே அநேக யோஜன நீளமும், அநேக யோஜன மகலமுமான மஹாத்ரோணியென்னும் குளமிருக்கும். அதனுள் விஷ்ணுவுக்கு ஸ்தானமிருக்கும். க்ருஷ்ண பாண்டர பர்வதங்களின் நடுவே மூப்பது காதமகலமாயும், தொண்ணூறுகாதம் நீளமாயும் மரம் செடிகளில்லாமல் நிஷ்பங்கதீர்த்த மென்னும் குள மிருக்கும். அதனுள் ஐந்துகாத விஸ்தாரமான ஆலமரமிருக்கும். அந்தமரத்தில் சந்திரவர்ணனாய் நீல உடை அணிந்தவனாய் ஸஹஸ்ரவதனனென்னும் ஸ்வாமி யக்ஷாதிகளா லெப்பொழுதும் பூஜிக்கப்படுவான். ஸஹஸ்ரசிகர குமுத பர்வதங்களின் நடுவே ஐம்பதுகாதம் அகலமான பலதித்திப்புப் பழங்களை உடைத்தான வனமிருக்கும். அதனுள் சந்திரனுக்கு ஆச்ரமமிருக்கும். மேருவின் வடக்கே சங்ககூடநிஷத பர்வதங்களின் நடுவே அநேக யோஜனமகலமான புருஷஸ்தலமென்னும் ஸ்தானமிருக்கும். அதனுள் மரங்கள் அநேக யோஜனமுயரமாயிருக்கும். கலிங்கநாகபர்வதங்களின் நடுவே நூறுகாதம் அகலமும் இருநூறுகாதம் நீளமுமாய் த்ராக்ஷாகர்ஜூர வனமிருக்கும். அதனுள் பழங்கள் எப்பொழுதும் மதுரமாயிருக்கும். புஷ்கர மேக பர்வதங்களின் நடுவே நூறுகாதம் நீளமும் அறுபது காதம் அகலமுமான கல்தரை யிருக்கும் அதனுள் நான்கு திசையிலும் அநேக யோஜனை யகலநீளமுள்ள நான்கு குளங்க

ளும் நான்கு வனங்களு மிருக்கும். கேஸர, மர்யாதா பர்வதங்களின்மேல் எண்வகைத் தேவதைகளின் பட்டணமிருக்கும்[12]. இவையெல்லாம் போகபூமியென்னப்படும். இவைகளில் அனுபவிக்கும் போகம் அநித்யமானதால் யான் இவைகளை ஆசைப்பட்டவனல்ல. நித்யபோகமென்னும் உன் கைங்கர்யத்தையே ஆசைப்பட்டேன். நிகில போகப்ரதனென்னும் நீ எனக்கு இதை நிலைநிறுத்துவது, இதை நிலைநிறுத்துவது. அநந்யஜன ஸுலபா! ஸ்ரீயது சைலவல்லபா!

திரியக்குகள் :—சதுர்முகனுடைய பாரிச பாகங்களிலிருந்து மிருகங்கள் முதலான திர்யக்ஜாதிகள் பிறந்தன. அவைபக்கங்களிலிருந்து குறுக்காய் பிறந்தனவாகையாலே திர்யக்குகள் என்று சொல்லப்படும்.

12. தேவதைகள் பட்டணங்கள் :—கேஸரபர்வதங்களிலே, ஹேமசித்ரம், பூதவனம், பிரமபாரிசம், சுநாபகம், என்னும் புரங்களுமிருக்கின்றன.

வருஷபர்வதங்கள் :—வருஷ எல்லைமலைகள் இவையெல்லாம் விஷ்ணுபுராணத்தில் காண்க.]

பதினேழாம் விண்ணப்பம்

பா— நரகத்தில் இருத்தப்படுமவர் மூன் ஒருதடவையும் உன் திருவடித் தாமரைகளைப் பற்றிலர், என்று பகை அரசர் ஸ்திரீகளுக்கு விடனுனவன் மகா பராக்ரம சாலியின் திருவடித்தாமரையில் அமர்ந்து சொன்னுன்.

நரகாந்தகா! நரகம் என்பது துக்கத்தை அநுபவிக்கும் ஸ்தானம். இந்த நரகங்கள் ஏழு பாதாளலோகங்களின் கீழ் இருக்கும் இருட்பள்ளத் தண்ணீருக்குங் கீழாயும் பிரும்மாண்டச் சுவரைப்பற்றின கர்போதகத்திற்கு மேலாயுமிருக்கும் வயலில் தென்திசையிலிருக்கும் ரௌரவம், ஸூகரம், ரோதம் என்னும் இவைமுதலாய் அநேகவிதமாயிருக்கும். ரௌரவமென்னும் நரகத்தில் இருக்குமவனை யமபடர் மானை வேடர்கள் துளைப்பதுபோல், தயையின்றி எப்பொழுதும் பாணத்திற்கு இரையாக்கிக்கொண்டிருப்பர். தான் சாட்சியாயிருந்தும் கண்டபடி சொல்லாதவனும், காணுததைச் சொல்கிறவனும், தர்மாதிகாரத்தில் நின்று பக்ஷபாதம் செய்யுமவனும், பொய்சொல்லுமவனும் இந்த நரகத்தில் விழுவர். வேட்டையில் சிக்கிக்கொண்ட பன்றியை வருத்தும்படி எப்பொழுதும் வருத்திக்கொண்டிருக்கிற அந்த நரகம் சூகரமெனப்படும். கர்ப்பத்தைக் கரைத்தவனும், மூக்கு வாயை மூடிக்கொல்லுகிறவனும், சோக்களைக் கொல்லுகிறவனும் இதில் விழுவர்.

நில மாளிகை செய்து பள்ளத்தில் புதைக்கப்படுமவர் நரகம் "ரோத" மெனப்படும்; ப்ரம்ஹத்தி, மத்யபானம், பொன்திருடல், குருவின் படுக்கைக்கு போகுதல், அந்தஸம்

யோகம் என்னப்படும் பஞ்சமஹா பாதகங்களைச் செய்யு மவர் இதில் விழுவர்.

உயரமான பனைமரத்திலிருந்து நிலத்திற்குத் தள்ளப் படும் நரகம் தாளமெனப்படும்; ராஜாவைக்கொல்கின்றவ னும், வைச்யனைக்கொல்கின்றவனும் இதில் விழுவர்.

காய்ச்சின எண்ணைப் பாண்டத்தில் கொதிப்பிக்கும் நரகம் சப்தகும்பமெனப்படும். பதிவ்ருதையை விற்கின்ற வனும், குதிரையைக்கொன்று விற்கின்றவனும், நம்பினவர் களைக் கைவிடுமவனும், உடன்பிறந்தாளைச் சேருகின்றவ னும், ராஜாவின் வேலைக்காரனைக் கொல்லுமவனும் இதில் விழுவர்.

நெருப்பில் பொரித்து உவர்ப்பான உப்பில் புரளுவிக்கும் நரகம் லவண மெனப்படும்; தாய் தந்தை முத லான பெரியோர்களை தூஷிப்பவனும், வேத தூஷணை செய்பனும், வேதவிக்ரஞ்செய்பவனும், மாமன் பத்நிமுத லானவரோடு புணர்கின்றவனும் இதில் விழுவர்.

இருட்டு மூடிக்கொண்டவிடத்தில், காட்டு ஈ, அட் டைமுதலிய க்ரூர ஜந்துக்கள் இடைவிடாமல் கடிக்கும் நர கம் க்ருமிபக்ஷமெனப்படும்; தேவத்வேஷம், ப்ராஹ்மணத் வேஷம் செய்பவனும், ஸதாசாரத்தை விடுகின்றவனும் இதில் விழுவர்.

பிறர் உமிழ்ந்த நீரைக்குடிக்கும் நரகம் லாலாபக்ஷமெ னப்படும்; தேவபூஜை, பித்ருகர்மம் பிதுருபாஸனை ஒன்றுமில்லாமல் தனக் கென்று சமைத்துச் சாப்பிடுகின்றவர்கள் இதில் விழுவர்.

கத்தி, சூரி, முதலிய அலகுகள் நட்டிருக்கும் கிணற்றில் நூக்கும் நரகம் விசஸனமெனப்படும்; ஆயுதம் செய்து பிழைப்பவரும், 'வேகுங்கை' முதலிய கபடாயுதங்களைத் தரித்தவரும் இதில் விழுவர்.

காய்ச்சின கால்விலங்கை காலுக்குத் தொடுத்து நெருப்பு ஜ்வாலை ஒன்றின்மேலொன்று நீட்டும் கிணற்றில் தலைகீழ்செய்து தூக்கும் நரகம் அதோமுகமெனப்படும்; சாஸ்திர நிஷித்தமான வஸ்துக்களை பரிக்ரஹிக்குமவர் இதில் விழுவர்.

அதிக துர்க்கந்தமான சீபுடைய சிற்ருற்றின் நரகம் பூயவஹம் எனப்படும்; சாஹஸஞ்செய்பவனும், பிறருக்குக் கொடாமல் தானொருவனே நல்ல வஸ்துவை பக்ஷிப்பவனும், அரக்கு, மாம்ஸம், பால், தயிர், நெய், தேன் முதலான நல்ல பதார்த்தங்களையும், எள்ளு, உப்பு முதலானவையும் விற்கிறவனும் இதில் விழுவார்.

காய்ச்சின சீ, ரக்தம் நிறைந்த கிணறு ருதிராம்பஸமெனப்படும்; செம்மறியாடு, கோழி முதலியவைகளை சூது போருக்குவிடுபவரும், சமைத்த சட்டியில் உண்பவனும், விஷமிடுகின்றவனும், அரசர்களிடம், இல்லாத கோள்சொல்பவனும், பெண்டாட்டி சம்பாதித்த பணத்திலிருந்து பிழைப்பவனும் அமாவாஸ்யை, ஸங்க்ரமணம் முதலிய பர்வகாலங்களில் அப்யங்கம்[1], ஸ்திரீஸங்கமம் முதலானவைக

1. அப்யங்கம் :—தைலாதிகளைக்கொண்டு எல்லா அவயவங்களையும் மர்த்திக்கையாகிற ஒருவகை தேஹ ஸம்ஸ்காரம்; எண்ணெஸ்னனம்.

ளைப்பண்ணினவனும், வீட்டைக் கொளுத்திவிடுகின்றவனும், பட்சி நிமித்தத்தைச் சொல்லுமவனும், பட்சிகளைப் பிடித்து விற்றுவாழுமவனும், கிராமபுரோஹிதனும் இதில் விழுவர்.

நெருப்புப்போல் காய்ச்சின நெய்ச்சிற்றுறுவைதரணி என்னப்படும்; தேனீயை நாசம் செய்யுமவனும், ஊரை அழிப்பவனும் இதில் போய் விழுவார்கள்.

காய்ச்சின இரும்பு ஆணிகள் நாட்டப்பட்டிருக்கும் நிலத்தில் நடக்கச்செய்யும் நரகம் கிருஷ்ணம் என்னப்படும்; பணம், வயது இவைகளால் செருக்கடைந்து எல்லைமீறிநடப்பவனும், எச்சில், தீட்டு இவைகளுக்குக் கூசாதவனும், இந்திரஜாலம் முதலான மோசஞ்செய்யும் வித்யைகளிலிருந்து மோசஞ்செய்து பிழைப்பவனும் இதில் விழுவார். இப்படி இவைமுதலான அநேகவிதமான பாபஞ்செய்பவர்கள் யாதனைப்படும்படியான நரகங்கள் அநேகவிதமாய் எண்ணில்லாமலிருக்கும். உன்னுடைய திவ்யஸங்கீர்த்தனத்திலிருந்தே ஸகல நரகபயமும் பரிஹாரமாவதால், உனக்கு நரகாந்தகனென்னும் பெயர் ஆகியிருக்கும். இப்படிப்பட்ட உன்னையே விசேஷமாய் நம்பியிருக்கும் என்னுடையபயத்தைப் போக்கடித்து உன்னுடைய திருவடி கைங்கர்யத்தைக் கொடுத்து க்ஷமிக்கவும், க்ஷமிக்கவும். அநந்யஜனவத்ஸலபா! ஸ்ரீயது சைலவல்லபா!

பதினெட்டாம் விண்ணப்பம்.

பா— ஸர்வருமுடைய பாபிகளும் உன் திருவடியை நினைத்த மாத்திரத்தில் பரிசுத்தர் என்று ஸித்தகருடத்வ ஜாங்கனென்னும் விருதாளி, ஸித்தர்களால் அர்ச்சிக்கப் படும் திருவடியுகத்திற்கு விண்ணப்பஞ்செய்தான்.

பரமபாவனு ; பாபங்கள் என்னுமவை காயிகங்களென்றும், வாசிகங்களென்றும், மானஸிகங்களென்றும் மூன்றுவிதங்களாயிருக்கும். நிஷித்த பதார்த்தங்களைத் தின்னுவதும், அயோக்யர் வீட்டில் உண்ணுவதும், யஜ்ஞாதிகர்மங்களுக்குத் தகாதவனுக்கு அவற்றைச்செய்விப்பதும், அயோக்யரிடத்தில் தானம் ஏற்கிறதும், பிறர்மனையாளோடு புணர்கிறதும், அயோக்யர் ஸபையில் ஸ்தானம் வஹிப்பதும், பிறர் உடைமையை அபகரித்தலும், ஜீவஹிம்சை செய்வது முதலானவை காயிகமான பாவங்களெனப்படும்.

நிஷ்டுரவார்த்தைகளைச் சொல்லுவதும், பொய்சொல்கிறதும், கோட்சொல்கிறதும், இஹபாரத்திற்குப் பிரயோஜனமில்லாத வீண்வார்த்தையில் காலங்கழிப்பதும், விவாதம் செய்வதும், வேதவிக்ரயஞ்செய்வதும், புறம்பேசுவதும், வாசிகமான பாவங்களெனப்படும்.

பிறருக்குத் தீங்கு எண்ணுவதும், செல்லாத ஆசையும், செல்லாத கோபமும், லோபமும், அக்ஞானமும், செருக்கும், உட்பகையும், மானஸிக பாவங்கள் எனப்படும்.

இந்தப்பிரகாரமான பாபங்களைப் பண்ணினவர், எங்தெந்தப்பாங்கு சரீரத்தில் எங்தெந்த விதங்களில் பாபங்களைப் பண்ணிஞர்களோ மரணுந்தத்தில் அதேபிரகாரமான யாதனுசரீரத்தை யடைவர். யாதனுசரீரமென்பது—அறுத்தாலும் துளைத்தாலும் கிழித்தாலும் சுட்டாலும் அழிந்துபோகாமல், தொட்டாலே சுருங்கும்படி மெதுவாய் மிது

சாந்திராயண முதலான தவங்களாயும், யக்ஞம், தானம் முதலான கருமங்களாயும், விதிக்கப்பட்டிருக்கிற சகலபிராயச்சித்தங்களுக்கும் மேலான பிராயச்சித்தம் ஸ்ரீகிருஷ்ணனுடைய ஸ்மரண சங்கீர்த்தனுதிகளேயாம். அதாவது எம்பெருமான் நிருபாதிக சர்வசேஷி என்றும், தான் அவனுக்கு ஸர்வதேச ஸ்ர்வகால ஸர்வாவஸ்தைகளிலும் நிருபாதிக தாஸன் என்றும், ஆகையால் அவைகளில் கர்த்துருத்துவாதிகள் சுவாதந்திரியத்தா லல்லவென்றும், அவைகளைப் போக்கும் உபாயம் அவனே என்றும் நினைத்து, அவன் திருவடிகளேயே சரணமடைந்து, அவன் திருநாமங்களைக் கீர்த்தனஞ்செய்துகொண்டிருத்தல். ஆகையால் இந்த ஸ்ரீகிருஷ்ணனுஸ்மரண பிராயச்சித்தமானது பகவத்குணப் பிரபாவத்திலும், ஆத்ம ஸ்வரூபத்திலும் தெளிந்து நிற்கின்ற விலக்ஷணுதிகாரிக்கே யல்லது மற்றவர்களுக்கன்று. மற்றவர்களுக்கோ கருமாதிகளே எனத் தெளியவேண்டும்.

ஜபஹோம அர்ச்சனுதி ஸகல கருமங்களிலும் ஸ்ரீமந்நாராயணனை ஸ்மரணஞ்செய்து அவன் சரணமடைந்த மகாத்மா அப்போதே சகல பாபத்தினின்றும் கிலேசங்களினின்றும் நீங்கினவனுய் மோட்சமடைவான்.

யில்லாத வேதனையை அனுபவித்துக்கொண்டிருக்கிறது. இப்படியிருக்கும் சரீரத்தில், பாபிகளையாதனைப்படுத்தும் கர்மம் எப்படியெனில் :—

இந்தப் பாவியைக்கிருத்தி ரம்பத்தால் அறுப்பதும், கைவாளால் கொத்துவதும், உவர்ப்பான நிலத்தில் உருட்டுவதும், எலுமிச்சம் புளிச்சிற்றாறில் முழுகிப்பதும், காய்ச்சின எண்ணைப் பாண்டத்தில் கொதிப்பிப்பதும், கூராக்கின கோடாரியால் சந்துசந்துக்களைக்கத்தரிப்பதும், பருந்து, காக்கை, நாய், நரி இவைகளுக்கு குடல், உதிரம், மாம்ஸம், இவைகளைப் பங்கிடுவதும், சாணை பிடித்த சத்திரக்கத்தி போலிருக்கும் இலைகளால் பளபளப்பாயிருக்கும் இலைக்கற்றிக்காடென்னுமிடத்தில் அந்தப் பக்கத்திலிருந்து இந்தப்பக்கத்திற்கு ஓடுவித்து, இந்தப்பக்கத்திலிருந்து அந்தப்பக்கத்திற்கு ஓடுவித்து உடலின் மாம்ஸம் குடல்களைக்கத்தரிப்பதும், கவணில் வைத்து வீசி வீசி எறிவதும், உயரமான மலையின் நுனிக்கோட்டுக்கல்லின்மேல் உட்காரவைத்து தலைகிழாய்க்கீழே தள்ளுவதும் காய்ச்சின பாண்டத்தின்மேல் புரட்டுவதும், உடலையெல்லாம் பெரிது சிறிதாகக் கத்தரிப்பதும், கத்தரித்த துண்டுகளை குடத்தில் நிறைத்துக்கொதிப்பிப்பதும் இவை முதலான யாதனைகள் பலவும் கோடி யுகம் அனுபவித்து, மறுபடியும் பூமியில் பிறக்கும்பொழுதும் மானஸிக பாபங்களைச்செய்தவர் பட்சி மிருகங்களாயும், காயிகபாவங்களைச்செய்தவர் புல் செடி மரங்களாயும் பிறப்பர். இந்தப்பாவிகளிலும் பிரம்ஹ ஹத்தியைச்செய்தவர், நாய், பன்றி, கழுதை, ஒட்டகம் இவைகளின் யோனிகளிலும்

ஆடு, கோழி, மான், பட்சிகளிலும், சண்டாள யோனிகளிலும், பலதடவை பிறந்துக்கொண்டிருப்பர். ஸுராபானம் பண்ணின பார்ப்பார், க்ருமி[1] கீட[2] பதங்க[3] யோனிகளிலும், அமேத்ய பக்ஷிகளான நாய், பன்றிகளிலும், ஹிம்ஸை செய்யும் புலி, கரடி முதலானவைகளிலும், தொடப்படாத காக்கை, கோட்டான் முதலியவைகளிலும், அந்த்யசாதியிலும் பலதடவை பிறந்துக்கொண்டிருப்பர். பொன் திருடல் செய்தவர், பாம்பு பல்லிகளிலும், நீர்க்காக்கை, கோழி முதலான ஜலசர[4] பட்சிகளிலும், பூதப்ரேத பிசாச ப்ரம்ஹராக்ஷஸ ஜாதியிலும் பிறந்துகொண்டிருப்பர். குருவின் மனையாளோடு புணர்ந்தவர் புல், புதர் முட்செடிகளாயும், பிணத்தைச் சாப்பிடும் நாய், நரிகளாயும், கொடியசெயலில் நிற்கும் மனிதர்களாயும் பிறந்துகொண்டிருப்பர். இந்த மகா பாவிகளுடன் கூடியாடுகின்ற பாவத்தைப்பண்ணினவர்கள் பிரமராக்ஷஸ்ஸின் யோனியில் பிறந்துகொண்டிருப்பர். இப்படி இவையே முதலான பலவித பாவங்களைச் செய்தவர் பலபாப யோனிகளிலும் பிறப்பார். இந்த பாபிகள் தங்கள் பாவமனைத்திற்கும் ப்ராயச்சித்தம்

---

1. க்ருமி :—புழு.

2. கீடம் :—அற்பசெந்து.

3. பதங்கம் :—பறவைப்பொது.

4. ஜலசரம் :—மீனவிராசி (மீன் முதலிய ஜலத்தில் வாழுமவை.)

பண்ணுவதெனில் ஜந்மகோடியிலும் முடிவு அடையாது. தயாளுவான உன் கடாக்ஷத்தால் மனதில் விவேகம் உதித்து பிந்தின பாவங்களுக்கு பச்சாத்தாபமுண்டாய்,[5] சக்தி இருந்த அளவு பிராயஸ்சித்தத்தை ஆசரித்து,[6] நீ ஆண்டவன் தான், என்னுமெண்ணம் கூடி உன்னையே நினைத்திருப்பது என்னும் க்ருஷ்ணானுஸ்மரணமொன்றிலிருந்தே ஸமஸ்தபாவமும் ஸவாஸநமாய்[7] போகுமென்னும் சாஸ்த்ரார்த்த தத்வத்தை யறிந்தால் நீயே, பரமபாவனெனப்படுவாய். ஆகையால், நீ என்னுடைய பாவங்கள் பெரிதென்றால் உன்னுடைய பாவனத்வத்தைப்[8] பிரகாசிப்பித்து என்னை ரட்சிப்பது என்னை ரட்சிப்பது, அநந்ய ஜனசுலபா! ஸ்ரீயது சைலவல்லபா!

---

5. பச்சாத்தாபம்:—எவன் பாபஞ்செய்தபோது—"ஐயோ! எம்பெருமான் நியமித்த நியமனத்தை உல்லங்கனஞ்செய்தேனே, என்ன செய்வேன்" என்று மனந்தவிப்பனோ அவனுக்கே பிராயச்சித்தத்தி லதிகாரமல்லாது மற்றவர்க்கன்று.

6. ஆசரித்து :—அனுஷ்டித்து.

7. ஸவாஸனமாய் :—குறிப்புக்கூட இல்லாமல்.

8. பாவனத்வம்:—சுத்திசெய்தல்.

பத்தொன்பதாம் விண்ணப்பம்.

பா.— ஸ்ரீய: பதி,[1] லோக கர்த்தா,[2] நிகமஸ்துதன்.[3] அத்புதவைபவமுள்ளவன்.[4] ஜகத்ரூபன்,[5] அஸாத்யஸாதகன்,[6] அசேஷஸமன்,[7] பரதத்வன்,[8] ப்ருதக்ரூபவிசித்ர கர்மபலதாயகன்;[9] என்னும் இவ்வகையில் தைத்யாரிக்கு,[10]

---

1. ஸ்ரீபதி :—ஸ்ரீமந்நாராயணன்—முதல் விண்ணப்பம்.

2. லோககர்த்தா :——பரப்ரம்ஹஸ்வரூபன்—இரண்டாம் விண்ணப்பம்.

3. நிகமஸ்துதன் :—வேதங்களால் தோத்திரம்பண்ணப்படுமவன்—ஸகலவேத வேத்யன்—ஐந்தாம் விண்ணப்பம்.

4. அத்புதவைபவன் :—அத்புத சரிதன்—ஆறும் விண்ணப்பம்.

5. ஜகத்ரூபன் :—ஸமஸ்த சிதசித்வஸ்து சரீரகன்—ஏழாம் விண்ணப்பம்.

6. அஸாத்யஸாதகன் :—அகடிதகடனாஸமர்த்தன்—எட்டாம் விண்ணப்பம்.

7. அசேஷஸமன் :—ஸர்வஸமன்—ஒன்பதாம் விண்ணப்பம்.

8. பரதத்வன் :—ஸ்ரேஷ்டமானதத்வம்—பரதத்வஸ்வரூபன்—பன்னிரண்டாம் விண்ணப்பம்.

9. ப்ருதக்ரூப விசித்திர கர்மபலதாயகன் :—வேறுவேறாய்க் கண்டுவரும் விசித்திரமான கர்மங்களுக்குப்பலங்களை அளிப்பவன்.

10. தைத்யாரி :—இராக்கதர் பகைவன்.

மஹீமஹேந்தரன்[11] பிரீதியுடன் பதினெட்டு உதார[12] கத்யங்களைச்[13] சொன்னான்.

பதினான்கு லோகங்களையும் ஆராயுமளவில் இவைசுகத்தைக்கொடுப்பதில்லை மற்றும் அநித்யம், பரப்ரம்ஹமொன்றே நித்யம், அமிதாநந்தமயமென்று[14] தெரியவருகிறது; இந்த கண்டார்த்தத்தைப்[15] பாவிக்குமளவில் (ஆராயுமளவில்)[16] பண்டிதர்களுக்கு இந்தப்பதத்தில் (லீலாவிபூதியில்) வைராக்யமும், மோக்ஷத்தில் இரக்கமும் (ஆசையும்) உண்டாகும் என்று ஸனகமுனியால் நன்றாக ஆராதிக்கப்படுமவனுக்கு ப்ரௌடப்ரதாபன் மிகவும் சந்தோஷத்தோடு அன்புடன் சொன்னான்.

முக்தியில் ஆசையும் இதல்லாத விஷயங்களில் விரக்தியும் கலந்தவர்களுக்கு (இவற்றையனுஸரித்து ஈச்வரனைப் பற்றுமவர்களுக்கு) மோட்சத்திற்கு அவனே உபாயமென்

---

11. மஹீமஹேந்தரன் :—இந்த உலகத்திற்கு இந்திரன்போலிருப்பவன்.

12. உதாரமான :—எல்லா அர்த்தங்களையும் கொடுப்பதான—

13. கத்யங்கள் :—வசனகாவ்யங்கள்.

14. அமிதாநந்தமயம் :—முடிவில்லாதோர் ஆநந்தமயம்.

15. கண்டார்த்தம் :—முடிவான அர்த்தம்.

16. இந்தப்பதத்தில்:—லீலாவிபூதியில்–இவ்வுலகில்.

பது யுக்தம்; என்று சிகதேவேந்தரன் தண்டநிட்டு, அநி தர[17] பக்த குடும்பனுக்குச்சொன்னான்.

முன் ஈராறுகத்யங்களில் ஒற்றுமையாக முக்திக்கு உபாயத்தையும் மோட்சத்தையும் பண்டிதமண்டலம் ஒப் பும்படி நாராயணன் திருவடியில் அபேத்யவிக்ரமன்[13] விண் ணப்பம்செய்தான்.

மோக்ஷதானைகதீக்ஷிதா![19] வையத்தார் ஆசைப்படும் புருஷார்த்தங்களில் அர்த்தகாமாதிகள், அஸ்திரங்களும், அல்பசுகங்களுமென்று அவைகளைக்கழித்து நித்யமும், நிர வதிகாநந்தமும் ஆகையால் மோட்சமொன்றையே புகழ்ந்து இதைப்பெறுவதற்கு கர்மம், ஜ்ஞானம், பக்தி இவைகளே உபாயங்களென்றும் வேதாந்தங்களிலிருந்து அறிவித்தாய். இந்த தத்வார்த்தத்தை பெரியோர் உபதேசத்தினின்றும் அறிந்து ஆராயுமளவில் கர்மயோகமென்பது—அறிவும், திராணமும், ஸத்வமுமில்லாத எமக்கு நீ இவையெல்லாம் கொடுத்து நீ கொடுத்த சாமக்ரியிலிருந்து உன் ஸேவை யென்னும் நித்ய கர்மங்களை எங்கள் கையினால் நீயே செய்

17. அநிதர:—எப்பொழுதும் வேறு சம்பந்தமில் லாமல் விஷ்ணுசம்பந்தமாயிருக்கும்.

18. அபேத்ய விக்கிரமன்:—குறைவுபண்ண முடி யாத வீரமுள்ளவன்—கால்முன்வைத்தால் ஒருவராலும் அசைக்கமுடியாது.

19. மோக்ஷதானைக தீக்ஷிதன்:—மோட்சத்தைத்தா னம் பண்ணுவதை முக்கியமாக வைத்துக்கொண்ட ஒரு பட்டப்பெயர் உற்றவன்.

விக்கிறதனால், வர்ணாஶ்ரமதர்மங்களை யாம் செய்வோமென்னும் கர்த்ருத்வத்திற்கும், இந்த கர்மத்திலிருந்து இந்த பலத்தை அடைவோமென்னும் இச்சைக்கும் காரணமில்லையென்று அறிந்து இந்த நினைவுகூடி வர்ணாச்ரமதர்மங்களை அனுஷ்டிக்கும் விவேகம்.

ஜ்ஞானயோகமென்பது :—இந்த கர்மயோகத்திலிருந்து பூர்வத்திய சகல பாபங்களென்னும் தூய்மையின்மையைக்கழித்து நிர்மலமான அந்த: கரணத்தில்[20] சாஸ்திரத்தில் சொல்லும் முறையில் இருபத்துநான்கு தத்வங்களின் நிலையை அறிந்து இவையெல்லாவற்றிற்கும் அதிகம் எனப்படும் ஜீவாத்மபரமாத்மஸ்வரூபத்தை ஸாக்ஷாத்கரிக்தபடி அறியும் அறிவு.

பக்தியோகமென்பது :—ஜீவ, பரமர்களின் நிலைமையை அறிந்து நித்யமென்னும் வர்ணாச்ரம தர்மத்தை அனுஷ்டித்துக்கொண்டு வேதாந்த விஹிதவகையில்[21] ப்ரீதிரூபமாய் உன் திருவடிகளை இடைவிடாமல் நினைக்கும் நிதித்யாஸனம்.[22] இவற்றின் நிலையை ஆராயுமளவில், கர்மயோகம் மனதிற்கு தூய்மையுண்டுபண்ணிக்கொண்டு ஜ்ஞான

---

20. அந்த: கரணம் :—உள்ளே யிருக்கப்பட்ட இந்திரியம்—மனஸ்ஸு.

21. வேதாந்த விஹிதக்ரமம் :—வேதத்தில் நமக்கு நன்றென்று சொல்லப்பட்ட மார்க்கம்.

22. நிதித்யாஸனம் :—த்யானம் செய்யவேணுமென்னும் உறுதியான (தீர்மான) புத்தி.

யோகத்தை உண்டாக்கி பக்தியோகத்திற்கு அங்கமாயிருப்பதன்றிக்கே தானாய் மோக்ஷஹேதுவன்று. ஜ்ஞானயோகமும் பக்திசெய்த ஜீவாத்மஸ்வரூபத்தையும் பக்திக்கு விஷயமான உன் ஸ்வரூபத்தையுமறிவித்துப் பக்தியோகத்தை வளர்த்துவதன்றித்தானாய் மோக்ஷஹேதுவன்று; பக்தியோகமும் ஆண்டவன் எனப்படும் உன் அடியில் தாஸர் எனப்படும் யாம் செய்யும் ப்ரீதி. உலகத்தில் ஆளுமவனுக்கு ஆட்களுள் பிறந்த ப்ரீதியே கார்யகர[23] மன்றிக்கே ஆளென்னுமவனுக்கு ஆள்பவனில் உண்டான ப்ரீதிமாத்ரமே கார்யகரமன்று என்கிறதினால் பக்தியும் ஸாக்ஷாத் மோக்ஷஹேதுவன்று. உன் ப்ரீதியொன்றே மோக்ஷஹேதுவாகையால் உன் தயாம்ருதத்தில் பிறந்துவளர்ந்த பராங்குச,[24] பரகால[25] யதிச்ரேஷ்டர்கள் முதலானவர்கள் தொடங்கி லக்ஷ்மணாசார்யர்[26] பர்யந்தமான பெரியோர்களைக்கடாக்ஷித்து என்னுள் தயைசெய்வது, தயைசெய்வது அநந்யஜனஸுலபா! ஸ்ரீயதுசைலவல்லபா!

---

23. கார்யகரம்:—பலத்தைக்கொடுப்பது

24. பராங்குசர்:—நம்மாழ்வார்.

25. பரகாலர்:—திருமங்கைமன்னன்.

26. லக்ஷ்மணாசார்யர்:—ஸ்ரீராமாநுஜாசார்யர்.

இருபதாம் விண்ணப்பம்.

பா.— ஸாத்விக சாஸ்திரங்களிலேயே தத்வம் நிர்ணயிக்கப்படுமென்று ஸாத்வநிதி திருவடியில் வைஷ்ணவதத்வத்தை எடுத்துக்காண்பிப்பதில் பண்டிதனானவன் விஸ்வாஸத்துடன் அமர்ந்துசொன்னான்.

ஸத்வப்ரவர்த்தகா![1] வேதாந்தார்த்தத்தை நிர்ணயிக்குமளவில் இதிஹாஸபுராணங்களாலேயே நிர்ணயிக்கவமையும். அவைகளில் ஸ்ரீராமாயணம், பாரதம் முதலான இதிஹாஸங்கள் உன்னுடைய மஹிமையையே சொல்லுவதால் ஸாத்விகங்களாய் ஸர்வாம்சத்திலும் ப்ரமாணங்களாயிருக்கும். சகல புராணங்களுக்கும் சதுர்முகன் ப்ரவர்த்தகனானபடியால் அந்த சதுர்முகனுக்கு யாதொருநாளில் (கல்பத்தில்) யாதொருகுணம் விஞ்சியிருக்குமோ அந்த நாளில் சொன்ன புராணம் அந்த குணமாயிருக்கும். அதெப்படியெனில்:—சதுர்முகனின் தினத்திற்கு கல்பமென்று பெயர். சதுர்முகனும் ப்ரகிருதியில் சிக்குண்டவனானகாரணத்தால் அவனுக்கும் ஸத்வம், ரஜஸ்ஸு, தமஸ் இந்த குணங்களுண்டு. யாதொரு கல்பங்களில் ஸத்வகுணம் ப்ரபலமாயிருக்குமோ அந்த நாள்களில் சொன்னபுராணங்கள் ஸாத்விகங்களெனப்பட்டு உன் மகிமையைப்புகழ்ந்து மோக்ஷஸாதனமாயிருக்கும். மற்றும் யாதொருநாளில் ரஜோகுணம் விஞ்சியிருக்குமோ அந்த நாளில் சொன்ன

---

1. ஸத்வப்ரவர்த்தகா:—ஸத்வகுணத்தை நம்முள் வ்யாபிக்கும்படி செய்பவனே.

